வைத்தியானந்த
லகிரி

பாகம் ௨.

பாடலை, அண்ணாச், சொந்தம், கூட்டு, கொண்டு
போன்ற சொற்கள் உள்ளதில் பக்கங்களை செய்து முடித்து
வைக்க வேண்டும்.

இரா
23/2

ஒன்றாய்ப் பொடித்துச் சூரணம் செய்து
உண்ணும் வெருகடி தேனிற் காரண்டம்
நன்றாய்ப் பித்தத் துதாரணம் நீங்க
நம்பிச் செய் நாற்பது நாடோதாரணம்
௨௪.

ஒன்றாய்ப் பொடிசெய்து சூரணஞ் செய்து வெருகடியளவு தேனில் கலந்து பித்தம் நீங்க நாற்பது நாள் தொடர்ந்து உண்ணுக.

பஸ்பப் படலம்.

கற்பூர சிலா சத்துப் பஸ்பம்.

கற்பூர சிலாசித் தோர் பலமே வாங்கி
கணமாய்ச் செய் வெங்கயக் கவசப் பிலமே
நற்குக் குடமே வைப்பாய் நலமே நீறும்
நவில் தம்பிடி யிடை யுண்ணுமத் தலமே
க.

கற்பூர சிலாசத்து ஓர்பலம் வாங்கி வெங்காயக் கவசம் பலமாய்ச் செய்து கோழிப்புடத் திலிட நன்கு நீராகப் பற்பமாகும். ஒரு காசிடை உண்டால் நோய் நீங்கும்.

உண்ணாப்பால் கசகசாப் பாலில் ஒன்றில்
வேருமாக் காய்கிரு வேளை யைந்து நாள் கோலில்
புண் மேகம் பிருமல் காலில் வெள்ளை
போக்கு நீர் சுருக்கு மார் வயிர் வலி மேலில்

? உண்ணாதபால், கசகசாப் பாலில் ஒன்றைக் கு இரு வேளை யைந்து நாள் உண்ணப் புண் மேகம், இருமல், காலில் வெள்ளை, போக்குநீர், நீர் சுருக்கு, மார்பு, வயிர் வலி மேலில் பெண் உடையால் தோன்றும்

அரிவை மாது விடாயாகாகை உகூத
அதி மதிற் கற்பசீ பச் சூலை தவிர்க்கு நோகாமை
பிரிக்கும் இறங்கு நிற்காமை, சுரம்
பின்னிடும் வேணப் பிணியுந்த காமை

ஊதல் (விக்கம்) கற்பச் சூலை நீக்கும் வலிகள் இறங்கு, சுரம் தொடர்ந்து வரும் பலவகைப் பெற்ற நோய்களும் நீங்கும்.

✓

சீனக் காரப் பஸ்பம்.

அகத்தி பருப்பை யரைத்து நல்ல
காரவெண் ணெய்யிற் சுத்தி படிக்காரம் வைத்து
யகத்திற் கவச மேசைத்து யிறைங்
தெருவில் புடமிட் டெடுப்பாய் பொருந்து. ௮.

அகத்திப் பருப்பை அரைத்து ~~அ~~ பசுவின் வெண்ணெயில் பொதிந்து படிக்காரம் வைத்துக் கவசம் செய்து பத்து எருவில் புடமிட்டு ஆறி எடுக்கப் பற்பமாகும்

பொருந்த நெய் தேனும் பாலில் குன்றியிடை
போட்டு மத்தித் துண்ணப் புண்சுடு மன்றி
கருக்கி நீர்ச் சுருக்கும் இன்றி மேகம்
கனமாந்தம் சொறி விரணங்கள் போந்தன்றி
- ௫ -

நெய், தேன், பாலில் குன்றி எடை இட்டு மத்தித்து உண்ண, சூடு, நீர்ச்சுருக்கு மேகம் கனத்த மாந்தம் சொறியுடன் விரணங்கள் நீங்கும்.

சிங்கி பஸ்பம்.

செருப் படை யகத்தி மானின் கொம்பில் ஒன்றை
இறைத் தரைத்தப் பி எருக்குப் புயில் பஸ்பம்
முருக்கன் பூப் போலம் அயம்பிறு பஸ்பம்
முத்து எருத்தோர் புடம் வை வரம் பில்
சா.

சிறு செருப்படை அகத்தி அரைத்து மான் கொம்பில் அப்பி ~~எருக்~~குபி புயல் இட்டு எருவிட்டுப் புடமிட முருக்கம்பூப் போலாம் அயம், பிறா, முத்து எருத்துபுடமிட்டு

வரம் பாயக் கல்வத்திலிட்டு மதை
வளர் பகம் பாலில் சாம மரைத்துருட்டு
பிறை போல் பில்லை தனைத் தட்டு ரவி
பிடிக்க முன் போல் ஒரு புடந்தனைக் கட்டு

பக்குவமாக எடுத்து கல்வத்தில் இட்டு அதை பாலில் சாமம் அரைத்து உருட்டி பிறை போல வில்லை தட்டி, தட்டியிட்டு ரவி மிகத்தில் வைத்து முன் போல புடமிட கட்டி நீரும்.

கட்டி முடிந்துப் பின் தேனில் நெய்யில்
காருவின் பாலில் ஐப் பான மாணில்
நெட்டி யைந்து நாறுண்ணும் பாலிலிக் குன்றி
நேரிடைக் கிடமல் பக்க சூலை காணில்

பற்பமாக்கிப் பின்னர் தேனில், நெய்யில், காராம் பசுவின் அல்லது வெள்ளாட்டுப் பாலில் ஐந்து நாள் குன்றியளவு கொள்ள இடமல் பக்கசூலை தீர்க்கும்.

வெண்ங்கார பஸ்பம்.

அண்டிட கிலி சுத்திக் காரம் : வல்ல
கரைப் பாய் புளியிலை தொட்டு
செண்டாகப் போட்டு கோரம் தீர
செய்து குக் கட்டத் தேற்றுவெண்ண திரம்
சா.

வெண்காரம் கிலிச் சுத்தி செய்து புளியிலையில் அரைத்து தட்டு கிளையினிட்டுச் சீலை செய்து குக்குடபுடத்திலிட வெண்காரம் பற்பமாகும்.

பவள பற்பம்.

பவளப்பொடி பலமொன்று யதை
பழகக்கிட்டுப் பழச்சார் பொழிந்தன்று
நவமாய் இரப் பகல்ம் சென்று பின்பு
நலமாய்க் கருவி யெடுத்திடு நன்மை

யூ.

பவளப் பொடி பலம் ஒன்று கண்ணாடிப் பாத்திரத்திலிட்டு எலுமிச்சம் பழச்சார் விட்டு ஒரு இரவும் பகலும் வைத்திருந்து பின்பு கழுவி எடுத்து

விரைவினிலே சிலாசத்து ரெண்டு
விதை மக்கமன் சேர்த்துப் பிறண்டை ரசத்து
அரைப்பாய் நாற்சாம மரைத்து வில்லை
பாக்கிடு வெக்கேத்தி புடத்தில் வை யெடுத்து

யக.

சிலாசித்து சமனடை சேர்த்து பிரண்டை ரசம் விட்டு நாற்சாமம் அரைத்து வில்லை செய்து சூரிய வெளிச்சத்தில் எடுத்து வைத்து புடத்திலிட்டு எடுக்கவும்.

✓

நீரும் பின் முன் சாத்திலாட்டி : யிரு
நேரங்சாம மாகில் வில்லையாய்ப் பூட்டி
சேரு முன்ம் போல்புடம் மாட்டி யெடு
தேர்க வெண்மை நிறமியல் பேசிமாட்டி
௰௨.

முன்னர்க் கூறிய சாற்றாலாட்டி நான்கோமம் கழிந்த பின்னர் வில்லை தட்டி முன்பு போலப்புடம் போட்டு எடுக்க வெண்ணிற மாகத் தோன்றும்.

மாட்டு வெண்ணெய் பண விடைக்குச் சன்னி
மது மேக மஸ்த்தி மேகமெழும் புருக்கி
கூட்டும் தேனில் சர்வ நோய்க்கி மேகம்
குலை சூரணமே யூறல் நிலைவ சன்னிக்கி
௰௩.

வெண்ணெயில் பண வெடை கொடுக்க சன்னி, மதுமேகம், அஸ்த்தி மேகம், எலும்புருக்கி நீங்கிடம் தேனிற் கொடுக்க, சகல நோயும், மேகம் சூணை, மேறூறல் நிலைவு சன்னி முதலியவை நீங்கும்.

கற்பூர பஸ்பம்.

கற்பூர வல்லிச் சாற்றினில் : கூடன்
கலந்தரைத்து வில்லை வைத்தெடு ரவியிலி
சித் தோட்டிமல் வைத்தோடு மூமர் சீலை
செய்து இக் கிட மடத் தவளாம் நேரில்
௰௮

கற்பூர வல்லிச் சாற்றில் கூடன் கலந்து அரைத்து, வில்லை தட்டிச் சூரிய வெளிச்சத்தில் வைத்து எடுத்து சிறிய ஓட்டில் வைத்து ஓடுமூடிச் சீலை மண் செய்து கோழிப் புட மிட வெண்ணிறமாய் நீறும்.

நேரும் சுண்ணம் வெத்திலையும் தின்ன
இசை வசீகரம் தங்க மெய ஒளியும்
தீரும் மலசலம் கலையும் வாய்வு
திகழ்கபம் வாய் ரோகமது பாணத்துலையும்.
௰௫.

அவ்விதச் சுண்ணம் வெற்றிலையுடன் தின்ன வசீகரமுண்டாகும், தங்கமய மான ஒளியுண்டாம். மலசலம் வாய்வு கபம் வாய் ரோகம் அனுபானத்துடன் உண்ண நீங்கும்.

கல்லுப்பு பஸ்பம்.

வன்னியம்பட்டையை மாவாக்கி : ஓட்டில்
வைத்துப் புகட்டு மேல் கீழ் மாவு தேக்கி
உண்ணிதமாய் ஓடு தாக்கி மூடு
புடத்தை நிலை செய்து குக் கிடங் காக்கி
யகா.

வன்னியம் பட்டையை மாவாக்கி ஓட்டில் வைத்து கல்லுப்பிட்டு மேல் கீழ் மாவு நிறைத்து மேலோடு பொருத்தி மூடி சீலைமண் செய்து கோழிப் புடத்தில் புடமிடப் பற்பமாகும்.

தாக்கும் பின்னெடுக்கப் பற்பமே யதை
தானருந்திட வாய்வெல்லாந் தொற்பமே
நீக்கும் பாரிச வாயு வறப்பமே ஆலை
நீர்க் கோவை மகோதரந் தீரு மவிகற்பமே
யள.

புடமிட்டுப் பற்பம் எடுத்துக் கொண்டு அதை அருந்த வாய்வெல்லாம் நீங்கிப் போகும், பாரிசவாய்வு நீங்கும், சூலை, நீர்க் கோவை, வறட்சி, மகோதரம் நீங்கும்.

தக்கடியுப்பு பஸ்பம்.

கல்லுப்பு அரப் பொடி கடுக்காய் சுக்கு
காசுக் கட்டிப் பிச்சாங் கட்டி தொடுக்காய்
நல்ல கழிப் பாக்கு தொடுக்காய் : சமன்
நாட் டெருக்கின் பால் நாற்சாமம் விடுக்காய்

ய அ.

கல்லுப்பு, அரப்பொடி, கடுக்காய், சுக்கு, காசுக்கட்டி, பிச்சாங்கட்டி, நல்ல கழிப்பாக்கு இவை சமனெடை கொண்டு எருக்கின் பால் விட்டு நான்கு சாமம் நன்கு அரைத்து

அரைத்தே வில்லை செய் எருக்கின் இலை
அடி மூன்று வில்லை மேல் மூன்று எருக்கின்
இலை மேவை கோழி எரிக்கின் புடமே
இடமாய் வைத்தே திருநீறு ஆக்கின்

வில்லை செய்து கொண்டு எருக்கன் இலை மூன்று வைத்து, அதன் மேல் வில்லை வைத்து, அதன் மேல் மூன்று எருக்கின் இலை வைத்து, மூடிக் கோழிப் புடமிட்டு எரித்திட திருநீறு போல் ஆகும்.

✓

நரிக்கு நீரைப் பல்துலக்கில் பல்லிற்
சாறு மிரத்தம் பல்லரணை யிலக்கில்
பிரிக்கும் பல் நோயிசை யிலக்கில் இரும்
பெரும் பல் கெடும் அன்னிக் கிலக்கில்

௨௰.

இப் பாற்பத்தை (நீரை) பல் துலக்கின் பல்லில் தோன்றும் இரத்தம், பல் அரணை பல் கெங்கில் தோன்றும் பல் நோய் நீங்கும். பல் நோயும் அன்னியும் தீரும்.

பொட்டுலுப்பு பஸ்பம்.

அகலிற் பலம் பொட்டுலுப்பை : வைத்து
ஆட்டெரும்பூ தூள் கீழ் மேலில் இடுப்பை
புகல் கல் மேல் சீலை தொடுப்பை புடம்
போடேல் இக் கெடும் வெந்திட நீரெடுப்பை

௨௧

பொட்டலுப்பை ஓர் அகன்ற பாத்திரத்தில் வைத்து ஆட்டெரும்புத்தூள் கீழும் மேலும் கொட்டி அதன் மேல் சீலைமண் செய்து இக்கிடபுடம் இட வெந்து நீறும். நோய்.

நீரில் பணவிடை கொண்டு தேனில்
நெய்யினில் இஞ்சிச் சாத்திரினில் பத்துவருண்டு
பாரிலிட்ட குன்மம் கொண்டு நோயும்
பறக்கும் நீர்க்கட்டு முஷ்ண வாய்வும் புண்டு
22.

பற்பத்தில் பண எடை தேனில் அல்லது நெய்யில் அல்லது இஞ்சிச் சாற்றில் கொள்ள, பத்துவுண்டு, விப்பு பாரில் வரும் குன்ம நோயும் நீர்க்கட்டும், உஷ்ண வாய்வு யாவும் நீங்கும்.

சதுர் லவண பற்பம்.

இந்துப்பு வெடியுப்பு கூட கல்லுப்
பிசையுப்பு யப்பினாக் காரம் பலவகைக்கும்
அங்கம் பூரம்றையோட யாவும்
அவரைச் சாத்திறத்து வரை புண்டையோட
உல.

இந்துப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, அப்பினாக் காரம் ஆகியவற்றை பலம் ~~ஒன்றாக~~ ஒன்று வகைக்குச் சேர்த்து பூரம் அரைப் பலம் சேர்த்து யாவற்றையும் அவரைச் சாற்றில் அரைத்து, துவரையளவு உண்டை செய்து

செய்தனை மொண்டைச் சொப்பனிலே போட்டு
தீருப்பி போடா றெரு விறப்புடன் தனிலே
மெய்ப் பித்தங் கால் வெடிப்பினிலே குன்மம்
மேறச் சன்னி வாய்வு பக்க வாய்வுக்கெனிலே
௨௪.

செய்த உண்டையை பெரிய சொப்பனில் போட்டு ஆறு எருவில் புடமிட்டு எடுக்க உடலில் தோன்றும் பித்தம், கால் வெடிப்பு, குன்மம், சன்னி வாய்வு, பக்க வாய்வு யாவும் நீங்கும்.

அப்பிரக பஸ்பம்.

பாங்க பாணையை யரைத்து யதை
பகர் கிருஷ்ணாபி ரேகத்திற்க வசித்து
பொங்காய் முருப் புடந் தெரித்து மறு
புட நான்கு முன் போலிட நீறும் வெளுத்து
௨௫.

அடுதின்னாப்பாளையை
பாங்க பாணையை அரைத்து அதைக் கருத்த அபிரேகம் எனப்படும் கிருஷ்ணாப் பிரேகத்தில் கவசித்து பொங்காய் முருப் புடமே போட்டு இதைப்போல் மீண்டும் மீண்டும் நான்கு முறை புடமிட வெளுத்து நீறும்.

✓

கல் நார் பஸ்பம்.

செவ் விள நீரில் கல்நாரு போட்டு
தின மூன்று ரவிவைத் தெடுத்துறைக் கோறு
ஒவ்வக் கல்வத்தரைத் தேறு பல்லெயிக்
குள் விளக்கப் போமந்தக் கூறு
௨௫.

செவ்விளநீரில் கல் நார் போட்டு மூன்று நாள் வெயில் வைத்து எடுத்து தீயிட்டு எரிக்கும் குழி அம்மியில் ஏற்றி அரைக்கவும், இக் கல் நார்ப் பற்பம் கொண்டு பல் துலக்க எல்லா வகைப்பட்ட பல் நோயும் நீங்கும்.

துருசு பஸ்பம்.

கருப் பஞ்சாத்தில் துருசு சுத்தி செய்து
கணப் பொடுதலை யரைத்து கவசம் பொதி
அடுப்பாய் குக்கிடத்தில் பத்தி விட
மேவும் பஸ்பமது விரைந்துக் கொள் சத்தி
௨௭.

கரும்பின் சாற்றில் துருசு சுத்திசெய்து பொடுதலையை அரைத்து கவசம் பொதிந்து பத்து எருவில் கோழிப் புட தீயிட தும்பைப் பூப் போல வெண்ணிறமாய் நீறும். அதனை உட்கொள்ளச் சத்தி நீங்கும்.

நாக பற்பம்

நாகம் அண்ணக்கல் மத்தி வைத்து
நாக்க முறிவிட்டெடு திறக் சுத்தி
மாசி செய்தும் ஊர் ரேத்திபடு
ஆட்டிக் கட்டிக்கிச் சுருக்கிடும் பத்தி

உ௮.

நாகம் சண்ணாக்கல்லில் வைத்து ஊரி உருட்டு ஏழு தரம் சுத்தி செய்து அதனை மாசச் செய்து சார் கட்டுப் ~~பதக்கம்~~ செய்து ஊட்டு கட்டுக்கு சுருக்கிட பிறகு ஒடம்.

எருத்துச் சாவலிருக்க மிதக்க விடுக
பின் கட்டி மேலிறக்கும் வை கணக்கே
கோடு கோட்டில் வை நிலை பதக்க செய்து
துல்லியமா முழுப்புடத்தி மெதக்கே.

உ௯.

பற்ப மெடுத்து சாவல் இருத்தத்தில் மிதக்க வைத்து கட்டி மேல் அவிழ்த்தடம் வைக்க நிலையப் பதக்கம் செய்து துல்லியமாய் முழுப் புடத்திலிட சிறந்த நாகப் பற்பமாகும்.

வீர பத்பம்.

காற்பலம் வீரமகலில் வைத்து
கருநாய் மண்டைத்தா ளிரும் கிரு மேலில்
மேலிக்கலி மூடிச் சிலிக்கல் காடை
விருட்டியா லெரித்துச் சன்னிக்கேத்து தேனில்
நுய.

காற்பலம் வீரம் சட்டியில் வைத்து கருநாய் மண்டைத்தாளை இழைத்து மேல்கல்லிட்டு காடைப் புடத்திட்ட நீறு தீரும். சன்னிக்குக் கொடுக்க உடன் தீருமே.

ஏத்தும் பொருதிற்ப நாற்கட்டிவாய்
இறங் காவிடில் பசுப்பைக் காம்பை வெட்டி
கேப்பு கட்டிச் சன்னிக்கு
கேத்திடப் பதின்மூன்று போங்சக தொட்டி
நுக.

இப்பாற்பத்தை பாற்கிட்டி வாய் கொண்டு இறங்காவிடில் பசுப்பைக் காம்பைக் கொன்னிச் சன்னிக்குக் கொடுத்திட சன்னி பதின்மூன்றும் தீருமே.

பூரபஸ்பம்!

பூரமென்று புருகாரம் ரெண்டு
பொருந் தொட்டில் வைத்ததில் தீபாலங்காரம்
ஏறத் தரும் விற லோரப் பிறகு
கிடைப்ப தமங்கனை நக்கத்துன்ன யாதாரம்

பூரம் ஒரு பங்கும் புருகாரம் இரண்டு பங்கும் பொடி செய்து தொட்டியில் வைத்து தீபலங்காரமாக எரித்திட நீண்டு கிடைக்கும்.

தீபாலங்காரம் = தீபாக்கினி.

நீரில் விருகனிடையே வாயில்
நேர் போட்டுத் தெரிக நீர் குழக்கப் பனையே
மார் சனி யறைப் பிருமனிடையே கோழை
வாங்கு மிச்சா பத்திய வாறுன் நடையே

விராகன் எடை நீரிலிட்டு வாயிலிட்டு இளநீர் குழக்க, பனை, மார்சளி யறைப் பிணிகள் கோழை முதலியவை நீங்கிடும். இச்சா பத்தியம் கடைப்பிடிக்க வேண்டும்.

கெந்தக பஸ்பம்.

பனிக்கட்டிக் கோப்பையில் வைத்து கெந்தி
பரிந் ததில் போட்டு நாலா நாளெடுத்து
தனியாய் கலிரத்தொ டுத்து மூடி
சந்துவாய் சீலை செய் தெரி காடை யகற்று

௩௮.

பனிக்கட்டி கோப்பையில் எடுத்து கெந்தகத்தை தட்டி அதிற் போட்டு (கந்தகம் சுத்தி செய்த பின்னர்) நான்கு நாள் கழித்து எடுத்து அயச் செப்பில் வைத்து மூடிச் சந்துவாய் சீலை மண் செய்து காடைப் புடத்தில் எரித்து எடுக்கிறோம்.

உள்ள நெடுமிடைக் கொள்ள தேனில்
ஒருங்கும் பெரிய வியாதிய மற்றுள்ள
சன்னி மூலகினி யுள்ள வியாதி
தங்காது பத்தா இச்சா பத்தியம் வுள்ள.

௩௫.

கெந்தகத்தின் இயற்கை நிறம் தீயால் மாற்றம் பெற்று புதிய நிறத்தைப் பெற்று விளங்கும். இதனைத் தேனில் கொள்ள பெரிய வியாதியும் நீங்கும். மூலக்கினியுள்ள வியாதி நீங்கும். இச்சா பத்தியங்களைப் பிறக்க வேண்டும்

✓

கையறக்கு ரச பற்பம்.

உள்ளங் கையில் சூதம் விட்டதில்
உயர் நெய்ச் சிட்டியிலைச் சாறு பிழிந்திட்டு
மெள்ள வறக்கவே கொட்டு: பற்பம்
வெகு நோய்க்கிட நீங்கும் வாய் கைகால் கட்டு

நூசா.

உள்ளங் கையில் ரசம் விட்டு உயர்நெய் சிட்டியினைச் சாறு பிழிந்து மெள்ள வறுக்க பஸ்பமாம். பல வகைப் பட்ட நோய்களுக்கும் கை,கால் கட்டு முதலியவைகளுக்கும் ஈண் மருந்தாகும்.

சங்க பற்பம்.

காரியம் பொடியாய்க் கத்திரித்து மதில்
கம் மான் பச்சரிச் சாறில் சாமமரைத்து
தேரி வில்லை செய்து உலர்த்து யோட்டில்
சிவச் சீலித் திரண்டு வைக்கக், கிடந்து

நூல.

காரியம் பொடியாய்க் கத்தரித்து அம்மான் பச்சரிசிச் சாற்றில் ஒரு சாமம் அரைத்துத் தெளிவாக வில்லை செய்து உலர்த்தி [struck] ஓட்டிலிட்டுச் சீலை மண் செய்து கிடத்தில் வைக்க நீறாகும். குக்கிடத்து - கோழி புடத்தில் (கோழிப் புடத்தில்)

வைக்க நீரும் வியாதிக் ககந்து வேறு
அங்க மேற் பச்சையைக் கோணியிலேந்தி
முக்க வசம் நிலைப் போந்து கூசம்
முடியத் துல்லிய மாநோய்க் கிட்டு நேர்ந்து

நீற்றிய பற்பத்தை வியாதியுள்ளோர்க்கு அ. கொடுக்க நீங்கும். அங்காளப்பச்சையைச் சாக்கில் வைத்து மூன்று கவசமிட்டுச் சீலை செய்து மேற் துல்லியமாக நோய்களுக்குக் கொடுத்துத் தீர்க்க

நாகபற்பம்.

இளப் பெண்ணையில் மூவெடு நிறமும் யுருக்
கிச்சாய்த் தப்பின்னுருக்கி வாய் புறமும்
வழுக் கிழா நெல்லிக்கையை காறமும், கொண்டு
வறுக்க நீறும் நோய்க்கிடத் தீரும் உறமும்

நவக.

நாகத்தை இளப் பெண்ணையில் சாய்த்தாறு தடவை உருக்கிச் சா~~ய்த்து~~ உருக்கிவாய் பின்னும் உள்ளும் புறமும் வழுவான கீழ்கா நெல் ~~லிக்கா~~யும், காரமும் கொண்டு வறுக்க நீறும். நோய்களுக்குக் கொடுக்கத் தீரும். உடல் உரம் பெறும்.

✓

கல்லுளி பற்பம்.

கல்லுளிக் குப்பை மேனியின் சாத்தில்
காய்ச்சி மூன்றுதிரம் தோய்த்தவ் விலையின்
கெல்லி யரைத்தவ் விலையின் கனம்
கெட்டியா கக் கவசித்துக் கீழ் மேலின்

கல்லுளியை குப்பை மேனியின் சாற்றில் அய. மூன்றுமுறை காய்ச்சித் தோய்த்து அவ்விலையைக் கிள்ளி அரைத்து அவ்விலையின் கனம் கெட்டியாகக் கவசித்து கீழும் மேலும்

லெச்சை கொட்டை யிலை சுத்திக் கட்டி
நேரு ரெட்டுருவிற் கெசமுன்று புடத்தில்
வைச்ச தே பற்பமாம் வெற்றி யதில்.
மாசிக்கரை தேனில் பண விடை வெற்றி

அக.

குலைச்சைக் கொட்டையிலை சுத்திக்கட்டி நேராக எண்வடிவமாக மூன்று கெச 4 புடத்தில் (முப்பது) வைத்து மேல் எடுக்கப் பற்பமாம். வெற்றிலையில் மாசிக்கரை, தேனில் பணவிடை கொடுக்கவும்.

பஞ்ச மூலக் கியாழத்தில் பின்னும்
பகர் சீரகக் கியாழத்தில் வெண்ணெயில்
திரி கடுகுப் பொடியில் உண்ணக்
கிட்டும் வல்லுடம் பிலன் வையில் ௪௨.

பஞ்சமூலக் கியாழத்தில், சீரகக் கியாழத்தில், வெண்ணெயில், திரிகடுகுப் பொடியில் உண்ண உடல் பெலக்கும்.

வாத ரோகம் பித்த வாய்வும் க்ஷயம்
மந்தாரகாசம் சுவாசமார் நோவும்
போத பீநும விரைப்பு பீனைப்
புக்காக விச்சாகா புகையிலைய வையுடம்.
௪௩.

வாத ரோகமும், பித்த வாய்வும், க்ஷயம், மந்தாரகாசம், சுவாச, மார்பு நோய், பீநுமல், விரைப்பு, பீனை இவை நீங்கும் இச்சாபத்தியத்துடன் புகையிலையை யாகா.

வெண்கல பற்பம்.

பசுணையிலை அரைத்து அதை
பாங்காய் வெண்கலத்தின் மேல் கவசித்து
நிசமாய் ஓட்டிடல் வைத்துக் கதித்து புடம்
நேரே நீறப் பணவிடை நெய் தேனில் கொடுத்து ௪௪.

பசணை இலையை அரைத்து வெண்கலத்தின்மேல் கவசம் பண்ணி ஓட்டிடல்வைத்து புடமிடப்பாகச் செய்து நெய், தேனில் பணவெடை கொடுக்கவும்.

கொடுக்க இன்மம் ஆறுமாறும் வாய்வு
கொடுமை செய்யிருமல் க்ஷய ரோக நீரும்
அடுக்கான மாந்தைகள் ஆறும் ∴ யிது
சொல்லுல் கோர்க்க கதி சூக்ஷமாய்த் தேறும் ௪௫.

பணவெடை நெய், தேனிற் கொள்ள இன்மம், சூடு நீங்கும், வாய்வுக் கொடுமை நீங்கும், இருமலும், க்ஷயரோகமும் நீங்கும். அடுக்கான மாந்தமும், (இம் கவ்வுலகோர்க்கு) அதிசூட்சமாய் நீங்கும்.

✓

வெள்ளிய பற்பம்.

வெள்ளிவற முள்ளியரைத்து உள்ளே
வெள்ளியை வைத்துக் கவச மேசெய்து
வெள்ளக் குகைக் குள்ளே வைத்து மூடி
மெது வாய்ச்சீல் விட்டுச் சீலை செய் கொடுத்து

முள்ளியினையை அரைத்து உள்ளே வெள்ளி பூசா. வைத்துக் கவசம் செய்து குகைக்குள் வைத்து மூடி சீல்விட்டுச் சீலை மண் செய்து

தொடப்பாய் முடுப்புட நீறும் அதில்
சொல்லமுக்குரு வேர் சூரணந் தாரும்
பருகேண்மம் சதையடைப் பெரும் நீறிற்
பகர்கட்டு சொலி கிறுகிறுப்புமே தீரும்.

முடுப்புட மிட நீறும். அமுக்கிரா(அன) வேர்ச் சூரணம் சேர்த்து உண்ணப்படுத்தும் குன்மமும் சதையடைப்பும் நீர்க்கட்டும்; சொறியும் கிறுகிறுப்பும் ஆகியவை நீங்கிடும்

தீரும் கபமுச் செரிப்பு செல்லல்
செவி மூக்கில் நீர்ப்பாய்ச்சலும் கண் தெறிப்பு
சேரும் பிணிச மெரிப்பு சூலைத்
துலைய மண்டையிடி புரை மாறு மரிப்பு

கபமும், மூச்சடைப்பு, செவி, மூக்கில் நீர்ப்பாய்ச்சல், கண் தெறித்தல், பிணிச எரித்தல், சூலை மண்டையிடி, புரைமாறு மரிப்பு ஆகியவை நீங்கும்

தங்க பஸ்பம்

பனி தாங்கி மூலியை தங்க : காசிறக்
பாங்காக அரைத்தப்பி யோட்டில் வைத்துங்க
கனிச் சந்தடைச் சீலை பொங்க செய்து
தாக்கு மங் கெசப்புடம் நீரில்க் துலங்க

பனிதாங்கி மூலிகையை அரைத்து தங்கக் காசின் மேல் சிறப்பாகப் பூசி ஓட்டில் வைத்து சந்து வாய் சீலை செய்து கெசபுடம் இட்டு நீரில் உண்ணுக"

நீரில் = பஸ்பமாயின்

ஆகுபஸ்பபற்ப கண்டாத்திரியின் லேகி
யத்திற் கொள்ளச் சிலேற்பனத் தொண்ணூற்றாறின்
போகு க்ஷய மிளை கபத்தின் மாந்தைப்
பொல்லாக் கசகு நோய் எல்லாம் பாரி லேகின்

தங்கபற்பத்தை கண்டங்கத்திரியின் லேகியத்தில் உட்கொள்ள சிலேற்பனந் தொண்ணூற்றாறின் சயம், இளை, கபம், மாந்தை பொல்லாத கசகு நோய் ஆகிய எல்லாம் நீங்கும். நோய் அனுபவத்தில் கண்டு தெளிக.

பார் திரிகடுகு லேகியத்தில் உண்ண
பறக்குமே மம் சோகமுங் சூலை வாயில்
வாரு நீரும் பல் வெண் கண் ணையில் குட்டம்
வந்திடச் செய்யும் இம் மருந்துண்ணக் கேளில்
ருக.

திரிகடுகு லேகியத்தில் உண்ணகன் மம், சூலை, சூலை வாய்வு, நீராம் பல், வெண் கண் நோய் கொடிய குட்டம் இம் மருந்து உண்ண நீங்கும்.

தாம்பிர பஸ்பம்.

தாம்பிரத் துட்டொன்றைத் தகடாய்த் தட்டி
சரிவெண் ணெச்சி யாடா தொடைவே ரண்டாய்
காமபிற மெழிருக்கின் பாலுண் டாய் — ஆட்டி
காணத் தகட்டிலப் பியோட்டினில் மூடாய்
௫௨

தாம்பிரத் தகட்டை நன்கு தட்டி (துட்டிணை) தகடாய்ச் செய்து சரிபங்கு வெண்ணொச்சி, ஆடாதொடை வேர், காம்பிரம், எருக்கின் பால் ஆகியவற்றை ~~எருக்~~ ஆட்டி யாவும் காணத்தகட்டில் அப்பி ஓடுகொண்டு மூடி

மூடிச் சந்துசீலை மூண்டு செய்து
மூட்டுங் கசப்புடந்துல்ய மே போன்று
காட்டி அட்டோத் திற மூன்று ச-பி.
கவில் அட்ட சூரணம் தேன் கூட்டியான்று ௫௩.

மூடிய வாய்ச் சந்து சீலை செய்து கசப்பு~~டம்~~ துல்லியமாக அட்டோத்திரம் மூன்று சமைத்து சொல்லப்பட்ட அட்ட சூரணம் தேன் கூட்டியுண்ணுக.

ஆங் காலை மாலையுங் கொள்ள வாய்வூ
அறும் ரோகம் யாவும் அடங்கிடு மெள்ள! வெகு
தூடர் வினை பற்றற்று வலர்ந்து போங்கள்ள

௩௯.

காலையும் மாலையும் உட்கொள்ள வாய்வு நீங்கும் நோய்கள் எல்லாம் அடங்கிப் போகும். முன்பே தொடர்ந்த தீவினையால் உண்டாகும் நோய்கள் மிக விரைந்து நீங்கும்.

காந்த பஸ்பம்.

திரியா நங்கைக் கருளி விட்டே நன்றுய்
தேக்கிச் சந்திர காந்தம் போட்டரைத்திடே
குழி மூணாள் பின் வில்லை தட்டே ரவி
கொண் டுலர்த்தி யெடுத் தோட்டினிற் கிட்டே

௩௫.

திரியா நங்கை, அருளி விட்டு நன்கு தேக்கி சந்திரகாந்தக் கல் போட்டு மூன்று நாள் குழியாக இருந்து அரைத்திடுக. பின்னர் அதனை வில்லை தட்டி ரவியில் காய வைத்து உலர்த்தி எடுத்து ஓட்டில் வைத்து

சந்திர காந்தம் போட்டு அரைத்து வணக்கு தலும் உண்டு

குட்டில் வைத்து வாயை மூடும் சந்து
குயர் சீலைசெய்து கசப்புடம் போடும்
சூட்டும் வெண்ணீர் தாயோடும் கிறணி
துலையுமின் சோகைக்கிட வெகுபிணவாடும்

௫௬.

ஓட்டில் வைத்து சந்துவாய் மூடிச் சீலை செய்து கெசபுடம் போட்டு வெண்ணீரில் கொள்ள கிராணி நீங்கும் சோகை வெகுமூரத்து நீங்கும்.

ஆடு மாதளையின் சாற்றில் அக்கை
வைத் தரைத்துக் கிண்டிப் பணவிடை நீற்றில்
போடுமண்ட லஞ் சன்னீற் குகத்தில் நீங்கும்
புகலி சலப்பிர மேகம் அலக்கள் ளிச் சாற்றில்

௫௭

மாதளையின் சாற்றில் சுக்கை அரைத்து கிண்டி பணவிடை பற்பமிட்டு ஒருமண்டலமென்னும் நாற்பது நாள் உண்ண குத்தல் நீங்கும் சலப்பிரமேகம் சலக்கள்ளிச் சாற்றில் உண்ண நீங்கும்.

சஞ்சீவி சூரணத்தில் தாக்கத் தீரும்
தணிமூலக் கிறாணிக் கயக்காசந் நோக்க
வஞ்சியே யீரிரண்டு சேர்க்க வொன்றாய்
வழங்கும் காத்தாதி சூரணத்திற் போக்க

சஞ்சீவி சூரணத்தில் கொடுக்க தணிமூலக் கிராணி தீரும், கயத்திற்குக் காந்தபற்பம் கொடுக்கவும், எவ்வகைப்பட்ட வற்றிற்கும் இருபற்பங்களும் இணைத்துக் கொடுக்க நீங்கும். சூரணங்களில் கொடுக்க காத்தாதி நோய்கள் நீங்கிடும்.

சஞ்சீவி — சீந்தில் மா

ஐவீர பற்பம்.

வீரம் பூரம் ரசம் கெந்தி லிங்கம்
விள்ளச் சமனாகக் கல்வத் தாட்டுருங் கந்தி
தேறப் பற்பமாகும் பிந்தி தேனில்.
செராசி பிடை நோய்க் கேத்து ஞ்சாந்தி
ரூசை.

வீரம், பூரம், இரசம், கெந்தி, லிங்கம் இவ்வைந்தும் சமனெடை எடுத்து கல்வத்தில் ஆட்டி வில்லை தட்டிப் புடமிடப் பற்பமாகும். தேனில் அரிசி எடை நோய்களுக்குக் கொடுக்க (காலை மாலை ஆகிய இரு வேளையும்) எல்லா வகை நோய்களும் நீங்கும்..

✓

செந்தூரப் படலம் லவண செந்தூரம்.

பொடுதலைச் சார் கையாண் சாற்றில் உப்பை
புகல் கரைத்து வில்லை செய்து வைகாதில்
தொடு நால் முட்டைப் புடமேத்தில் பின்பு
தொடர்ந் திப்படி நான்கு மறுபுட மாத்தில் ௧.

பொடுதலைச் சார் கரிசலாங்கண்ணிச்சார் ஆகியவற்றில் உப்பை நன்கு அரைத்து வில்லை செய்து காற்றில் வைத்து முட்டைப் புடமிடு இவ்வாறு தொடர்ந்து நான்கு மறுபுடம் போட்டெடுக்கவும்

மாத்திடப் புடமிடக் குருதி போல்
வடிவாகும் செந்தூரம் அநுபானங் கருதி
ஏத்திடச் சருவ நோய் பரிதி கண்ட
யசைபனி போல் பறக்கும் யாவு முறுதி ௨.

அவ்வாறு புடமிட்டெடுக்க இரத்தம் போல் நிறமாகச் செந்தூரம் அமையும். உரிய அநுபானங்களில் கொடுத்திட சருவ நோய்களும் பரிதி கண்ட அசைபனி போல பறந்திடும் என்பது உறுதி.

தாளகச் செந்தூரம்

வெள்ளெருக்கன் பாலில் மூன்றும் : சாமம்
வில்லை செய் தாளக மரைத்திடப் போன்றும்
உள்ள கலசைச் சீலை யூன்றும் : கோழி
புடமிடச் செந்நீறு நோய்த்திடத் தோன்றும்.

தாளகத்தை மூன்று சாமம் வெள்ளெருக்கின் பாலில் அரைத்து வில்லை செய்து உரைவைத்து அயச் செப்பிலிட்டு வாய் தகடு கொண்டு மூடி வாய் இடை வெளியைச் சீலை மண் மூன்று செய்து கோழிப் புடமிட சிவப்பாக இருக்கும்.

லிங்க செந்தூரம்

செப்பு நெருஞ்சில் பூக் கொய்து : லிங்கம்
இரு சொப்பில் வைத்ததில் கீழ் மேலும் பூப்பெய்து
தப்பில்லை மேல் மூடி செய்து சீலை தரி
கால் முட்டைப் புடமிடச் செந்நிறமெய்து
து.

நெருஞ்சிப் பூக் கொய்து லிங்கத்தை இரு சொப்பில் (அயச் செப்பில்) வைத்து அதற் கீழும் மேலும் நெருஞ்சிப் பூ ~~[illegible]~~ பெய்து தவறாது மேல் மூடி ~~செய்து~~ சீலை மண் நான்கு செய்து முட்டைப் புடமிடச் செந்நிறமாய் இருக்கும்.

✓

சண்ட மாருதச் செந்தூரம்.

பூரம் பத்து லிங்கம் பத்து வீரம்
புகல் கெந்தி செந்தூரம் வகைக் கொன்றெடுத்து
நேரச் அத்தி செய்தரைத்து பவழ
நிற மெடுக்கச் செந்தூரமா தெரித்து

பூரம் பத்துக் கழஞ்சு, லிங்கம் பத்துக் கழஞ்சு
வீரம் ~~பத்துக் கழஞ்சு~~, கெந்தி வகைக்கு ஒருகழஞ்சு
செந்தூர மருந்து நேராகச் சுத்திசெய்து அரைத்து
பவள நிறமெடுக்க செந்தூரமாகும்.

பணை வெல்லத்தில் பயிரிடையே வைத்து
பந்தாய் மூடி ஞவிதட்டா துள்ளடையே
வினையாலுந் தின்னை யில்லாதடையே யில்லை
மெய்யென் றறியும் மேலோர் சூக்ஷ்சங்கடையே

பணை வெல்லத்தில் பயரிடை வைத்து
பந்தாய் மூடி னாவி தட்டாது உள்ளே கொள்ள
தீவினையால் வந்த நோய்கள் நீங்கும். இதுவே
மேலோர் கண்ட உண்மை சூட்சமென் றறியும்.

✓

பஞ்சமுக செந்தூரம்.

தாரலிங்கம் ரசம் கெந்தி வீரம்
சமனாய் காட்டாமணக்கின் பாலில் முந்தி
நேர வரைத்துச் செய் குந்தி வில்லை
மெருவுலர்த்திவை கோழிப் புடம் பந்தி

தார, லிங்கம், இரசம், கெந்தி, வீரம் சம அளவாய்க் கொண்டு, காட்டாமணக்கின் பாலில் எல்லாவற்றையும் சேருமாறு நன்கரைத்து வில்லைதட்டி நிழலில் உலர்த்திவைத்து கோழிப்புட மிடச் செந்தூரமாம்.

பந்தியாய் வெந்தாற் செந்தூரம் யதில்
பணவிடை திரிகடுகு பொடியா தாரம்
சந்தித்தேன் பனை வெல்லம் நீரம் வெண்ணெய்
தனித்தொன்றிற் கொள்ளவே சாருதுயிரம்

முருக்கம் பூப்போலச் செந்தூரம் வெந்து நிற்கும் நிலையில் பணவெடை சுக்கு, மிளகு, திப்பிலிச் சூரணத்தில் தேன் அல்லது பனை வெல்லம் அல்லது வெண்ணெயில் உட்கொள்ள நோய் சாராது துயரம் நீங்கும்.

பாரும் குட்ட நோய் ஆலைக்கும் குன்மம்
பறக்கும் கருப்பு வெள்ளை மேகத்துக்கும்
நீரும் பித்த வாய்வுவே வைக்கும் தேகம்.
செல்லும் கால் கை விரணம் வெடிப்புக்கும்

குட்ட நோய், சூலை, குன்மம், கருப்பு, வெள்ளை மேகத்திற்கு, கொடிய பித்த வாய்வுக்கும், கால், கை விரணத்திற்கு, வெடிப்பிற்கும் மிகச் சிறந்ததாகும்.

<u>வங்க செந்தூரம்.</u>

காசாங் கள்ளியிலடைப்பு மூட்டிடக்
காரீயம் பல முருக்கிக் காய்ச்சு தொடப்பூ
ஆசு உரமத்தைச் சார் விடுப்பூ கருப்
பதாய் வாட்டிட பிரட்டியே கிளரும் மெடுப்பூ

காசாங் கள்ளியில் அடைப்பு மூட்டிடவே காரீயம் உருக்கிக் காய்ச்சி பற்றிப் பலம் காரீயம் உருக்கிக் காய்ச்சி பற்றிக் கொள்ளுமாறு. உரமத்தைச் சார் ஊட்டு கருப்பாக வாட்டி பிரட்டிக் கிண்டி

கிளரிமல் செந்தூர வர்ணம் பார்த்து
செம்பிரமா யெடுத்துப் பதனம் பண்ணும்
அளவில்லாத மேகமிவ் வண்ணம் கொள்ள
அலறிப் பறந் தோடும் அநுப்பானத் தெண்ணம்.

யக.

செந்தூர வர்ணம் பார்த்து செம்பிரமாய் எடுத்துப் பதனம் பண்ணிக் கொண்டு அநுபானத்தின் கொடுக்க அளவில்லாத மேகம் அலறிப் பறந்துக் கொண்டு ஓடுமாம்.

கல்லுளிச் செந்தூரம்.

கல்லுளியைச் சீர்மைக் காடி தன்னில்
காய்ச்சி மூன்று திறமாந் தோய்த்து முன்னடி
சொல்லும் புளியாரை தேடி மொத்தை
சுத்திக் கவசம் விறலிக் கணம் மூடி

யஉ.

கல்லுளியைச் சிறந்த காடியிலிட்டு மூன்றுதிறம் காய்ச்சித் தோய்த்து புளியாரை கொண்டரைத்து சுத்தி செய்த அதன் மேல்க் விறலிக் கணம் கவசம் செய்துமூடி

மஞ்சனிலை மேலேகட்டி முன்போல்
வையாட்டெரு முப்புடம் கச்சிட்டி
கிஞ்சமுள்ளி லவணப் பட்டை வெட்டிச்சாத்தில்
கேளரைத்து மூன்றுபுடம் போடுங் கெட்டி
யரு.

மஞ்சனிலையை மேலேகட்டி முன்போல ஆட்டெருவில் மூன்று புடம், கச்சிட்டு, முள்ளி லவணப் பட்டை, வெட்டிவேர்ச் சாற்றில் அரைத்து மூன்று புடமிடக்கெட்டியாகும்.

கண்ணால் முருக்கம்பூச் சாறில் ரெண்டு
கசபுடத்திற் செந்தூரமே நேரில்
எண்ணு முலைப்பாலிற் சேரில் பண
விடையிற் சுரம் போம் விதமாகும் தேனில்
யரு.

கலியாண முருங்கைப் பூச் சாற்றில் அரைத்து வில்லை தட்டி இரண்டு கெசபுடத்தில் செந்தூரமாகும். யாவரும் எண்ணத்தக்க குணமுடைய முலைப் பாலில் பணவெடை உண்ண சுரம் நீங்கும்.

தேனிற் திரிகடுகு திப்பிலிப் பொடி
சேர்த்து தசநாளுண் மகோதர மெளிதில்
நானிலத் துத்தா மணியில் சாத்தில்
கடைப்படும் தசநாள் நீர்க் கோவைக் கருத்தில்
யகு.

தேனில், சுக்கு, மிளகு, திப்பிலிப் பொடியில் பத்து நாள் உண்ண மகோதரம் எளிதில் நீங்கும். உத்தாமணிச் சாத்தில் பத்து நாள் உண்ண நீர்க் கோவை நீங்கும்.

சர்க்கரையில் ஏழு நாளும் கொள்ள.
தாங்காது சோகை தணிந்து மீளும்
தீராத நோய்க் கோளும் தீரும்.
சிகிச்சா பத்தியம் நித்தியம் கேளும். யசா.

இச்சா பத்தியத்துடன் சர்க்கரையில் ஏழு நாள் உட்கொள்ள சோகை நீங்கிப் போகும். தீராத ரோக நோய்களெல்லாம் நீங்கும்.

அப்பிரேக செந்தூரம்:

இருவிண்ணாப் பிரேகம் காடியில் விட்டு
கிட்டி மூன்றுநாள் பிறை போல் விடியில்
உரி புளிகாய் சேர்காடியில் உரல்
உள்ளிட்டிடி யொன்று மெயாக்க நாடியில் ௰.

கருத்த அப்பிரேகத்தை காடியில் இட்டு மூன்று நாள் ஊறவைத்துப் பின் எடுக்க மூன்றாம் பிறைபோல் வெளிகொட்டும். உரியபுளி காய்சேர் காடியில் உரலில் இட்டு ஒன்றாய்ச் சேர்த்து இடிக்கவும்

இடித்தசை நூறெரு சேரில் புடம்
இட்டே யிவ்வாறு மூன்று புடமிட்டில்
படிந்தது செந்தூரம் தேனில் மேகம்
படுமிருபத் தொன்றும் தேனிவுண்ணும் பாலில் ௰அ.

இடித்ததை வில்லைதட்டி நூறு எருவில் புடமிட்டு இவ்வகைமூன்று புடமிட்டு எடுக்கச் செந்தூரம் நன்மையும். அனுப்பானத்தில் தேனில் உண்ண மேகம் இருபத்தொன்றும் போகும்.

கட்டுப் படலம் தாளகக்கட்டு.

கொடி மாதுளம் பழம் துளைத்து அதில்
உள்ளே தாளகம் பல மொன்றடைத்து
படிவாகச் சீலைமண் ணைத்து புடம்
பந்து முட்டையிற் போட கட்டடுத்து க.

கொடி மாதுளம் பழம் துளைத்து அதில் தாளகம் பலம் ஒன்றடைத்து படிவாகச் சீலை மண் நைத்து பந்துப்புடம் முட்டையிற் போட தாளகக் கட்டு ஆண் சமையுமாம்.

லிங்கக் கட்டு.

இவனார் வேம்பு சமூல மரைத்து அதில்
இக்க லிங் கத்தை வைத்துக் கவசித்து
கவர உரமத் தங்காயிலடைத்து சீலை
கண்டமாய்ச் செய்து முடுப்புடத்தனில் வைத்து
௨.

இவனார் வேம்பு சமூலம் அரைத்து ~~அதில்~~ அதில் பொதிந்து லிங்கத்தை வைத்துக் கவசித்து இருமையும் பொருந்துமாறு உரமத்தங்காயி லடைத்து சீலை மண் கண்டமாய்ச் செய்து முழுப்புடத்திலிட லிங்கம் கட்டுமாம்.

வைத்த சரக்கை யெடுத்து செய்யும்
மாநிலத்தில் அற வித்தைக் குறித்து
அத்தமுள்ள குரு அரைத்து விட்டேன்
சூக்ஷசம் பார்த்துக் கொள்ள அகமாய விரித்து

ரு.

கட்டிய சரக்கை எடுத்துச்செய்யும் வித்தை மாநிலத்தில் சுத்தமுள்ள குரு உரைத்து விட்டேன் சூட்சம் அறிந்து கொள்வே.

பூரக் கட்டு.

பூரம் பலத்திலக் காட்டாத்தி பாலை.
புகழ்ந்த தமத்துக்கு மட்டியில் வாட்டு தீயில்
நேர மறுபடி ஏத்தி வாட்டு
நிலைபெறு சாமம் பின்னெடுத்திடும் சாத்தி

சு.

பூரம் ஒருபலம் எடுத்து காட்டாத்திப் பால் அடைத்து மட்டகையில் தீயிட்டு வாட்டி மறு படி ஒருமுறை வாட்டி இவ்வாறு இரண்டு சாமம் வாட்டி பின் எடுத்திடு

சாத்தபி ரேகத் தகட்டில் வைத்துத்
தணிவிளக் கேற்றிவையனல் பட தகட்டில்
சூத்தமுசிறுசிச் சார் புகட்டிடில் சாமம்
புகழ்ந்திரன் றசை ருக்கிடக் கட்டும் பகட்டில்
(ந.)

கூறிய அப்பிரேகத் தகட்டில் வைத்து
தணியாக விளக் கொன்று ஏற்றி வைத்து அனல்
படுமாறு செய்து தகட்டில் முசுமுசுக்கைச் சார்
விட்டு சாமம் நேரம் சுருக்கிடக் கட்டும்.

கவுரி பாசாணக் கட்டு.

கௌரிபல மொன்றே யோட்டில் வைத்து
கவர் பேய் பீர்க்கின் சார் பிழிந்துமே நாட்டில்
தவர் நாற்சாமம் அருக்கு பூட்டில் நன்றாய்
தளருமற் கட்டிப் போம் சரக்குமே பாட்டில்

கௌரி பாடாணம் ஒரு பலம் ஓட்டில் [சா.]
வைத்து பேய்ப் பீர்க்கின் சார் பிழிந்து நான்கு
சாமம் அனலிட்டுச் சுருக்குக. தளராது கட்டும்.
நன்கு பாட்டிலில் இட நன்றாகும்.

பாசாணக் கட்டு.

காளி மரத்தைத் துளைத்து அதில்
கணபா சாணம் பலமெடுத்து அதிலடைத்து
தெளிவித் தொண்டனைத் தாள டைத்துப் பாசி
இமமாய்ச் சீலித்து முப்பதுநாள் பொருத்து

௭.

கள்ளி மரத்தில் துளை செய்து அதில் பாசாணம் பலம் எடுத்து அதில் வைத்து துளைத்த துகளை துளை வாயில் வைத்து அடைத்து நன்றாக (சீலை சுற்றி) கட்டி வைத்து முப்பது நாள் பொருத்திருந்து அதை எடுக்க வேண்டும்.

பொறுக்கை யதை வெட்டி துண்டு செய்து
போடுங்காட்டுக் முட்டையிற் புடம் கொண்டு
பெருக்காய் மதித்தை விண்டு செய்வோன்
பெருலகில் கருவாளி யின் தொண்டு

அதனை வெட்டி எடுத்துத் துண்டு செய்து காட்டு முட்டைப் புடம் போட்டு எடுக்க வேண்டும். இதனை நன்கு மதித்துச் செய்வோன் இப் பெரிய உலகில் மிகப் பெரிய மருந்து வனாவான்.

காட்டுமுட்டை = காட்டெரு.

✓

நாகக் கட்டு:

நந்தியா வட்டத்திலையும் இரு தி
நற்கழு கொடியாடா தொடை யிலையும்
முந்தி வெற்றிலை செருப்படையும் யின்னும்
முதிர் கோடக சாலை சேர்த் தொன்று யிடியும்
ண.

நந்தியா வட்டத்து இலையும், கழுதைக்கொடி இலையும், ஆடா தொடை இலையும், வெற்றிலை சிறு செருப்படை இலையும், முதிர் கோடக சாலை யிலையும் சேர்த்து ஒன்றாக இடித்து,

இடித் திவை யோர் சட்டியிட்டும் : போட்டு
இன்பமாய் பொரு கேர நாகமெரிவிட்டும்
பொடித் தண்ண பேதி சத்திட்டும் அதில்
புதிப்படி மூன்று திறம் காய்ச்சில் கட்டும்.

இடித்தவற்றை ஒர் சட்டியிலிட்டு நாகம் சேர்த்து எரிய விட்டுப் பொடிசெய்து அன்னபேதிச் சத்து இட்டு இவ்வாறு மூன்றுமுறை காய்ச்சினால் கட்டும்.

மருந்துப் படலம் - அண்ட வாய்விற்கு.

ஆதண்டை வேறு வெங்காயம் மிள
காது நாயுருவி விதையுடுபாயம்
தோதரைத்துட் கொள்ளத் தாயம் வாதம்
தொடரு தலிலரிப் பறந் தோடு மாயம். க.

ஆதண்டை வேர், வெங்காயம், மிளகு, நாயுருவி விதை ஆகியவற்றை நன் கரைத்து உட்கொள்ளத் தாயம் வாதம் தொடராது அலரி மாயமாய் மறைந்து போகுமே.

அண்ட வாய்விற்கு.

கருஞ்சீரகம் பூண்டு தேனும் இக்க
காந்தே யரைத்துக் கொடுக்கவே தணும்
பெருக்காயத் திணையா வேணும் நின்று
பெரியாதண்ட வாய்வுப் படு வாணும் உ.

கருஞ்சீரகம் பூண்டு, [தேன் கலந்து] அவ்விரண்டையும் அரைத்துக் கொடுக்க உடலில் நின்றுள்ள அண்ட வாய்வு படு வானடையும் இஃது உண்மை

வாத குன்மத்திற்கு

பாப்பார முள்ளத்தும் பையும் நொச்சி
பாவல் நாய்குவேளைப் பூ திப்பிலி பூண்டுங் காயம்
சேர்ப்பாய் நல்வெல்லம் ஓமமும் மரைத்
தேவைந்து நாள் கொடுக்க படுஞ்சூலைப் பலரும்.

௫.

வாதகுன்மத்திற்கு முள்த்தும்பையும், நொச்சி, பாவல், நாயுருவிப்பூ, திப்பிலி, ~~[illegible]~~ பூண்டு, காயம், நல்ல வெல்லமும் ஓமமும் அரைத்தே வைத்து ஐந்து நாட்கள் கொடுக்க படும். சூலை நீங்கிப் போகும்.

எரிவாதத்திற்கு.

இலந்தை யிலை தன்னைக் காடி தன்னில்
ஏற்க மத்திட்டு வரைந்திடு நாளி
தலமாய் யெரித்துரைத் தேடி பூசத்
தாக்கா தெரி வாதம் மாறும் குன்றோடி

௪.

இலந்தை யிலையை காடியிற் போட்டு மத்திட்டு இரண்டு நாளிகை எரித்து அரைத்துப் பூச எரிவாதம் தாக்காது குன்றி யோடிமறைந் திடும்.

விரை வாதத்திற்கு

கடுக்காய் கழச்சிப் பருப்பு சுக்கு
காணும் முடக் கொத்தான் காய்ச்சும் பொருப்பு
முருக்காய் கிழநீர் தெருப்பூ யுண்ண
மூட்டு விரைவாத மூல மறுப்பூ. ரு.

கடுக்காய், கழச்சிப் பருப்பு, சுக்கு, முடக்கொத்தான் ஆகியவற்றைக் காய்ச்சிக் கிழநீர் உண்ண விரைவாதம், மூலம் நீங்கும்.

பித்த முறிவிற்கு.

இருநாழிக்குத் தேன் விடுத்து ரெண்டு
எலுமிச்சம் பழரசம் இயல்பாய்த் தொடுத்து
நெடுய்யுட் கொள்ளக் கிழத்து விட
நிற்கும் பித்தமது நிலைகொள்ளா தடுத்து

சா.

இரண்டாழாக்குத் தேன் விட்டு இரண்டு எலுமிச்சம் பழரசம் பிழிந்து நேராக உள்ளே கொள்ள நிலை கொள்ளாதிருந்த பித்தம் நிலை கொள்ளும்.

தீராத பித்தத்திற்கு (பிரத்தபித்தத்திற்கு)

நிலத் துளசியினை கொண்டு வந்து
நீரில் புட்டாவி கட்டியவித் தொண்டு
நலக்கார் பிழிந்து தேன் விண்டு பிறை
நாட்டி பிறைத்துக் கொடு தோஷி கண்டு
எ.

நிலத்துளசியினை கொண்டுவந்து நீரில் புட்டவியல் செய்து பிழிந்து கலக்கி தேன் விட்டு குழைத்துக் கொடுக்க தீராத பித்தம், இரத்தபித்தம் நீங்கும்.

தோஷியே பிரத்த பித்தமும் பல்லிற்
தோணும் இரத்தம் நாக்கினில் வெடிப்பும்
சீழி புண்ண சீரணம் மக்கமும் தீரும்
சீத வகும்பூ மலபந்தம் வையும்.
அ.

இந்துளசிக் குடிநீர் பல்லில் தோன்றும் இரத்தம், நாக்கில் தோன்றும் வெடிப்பு, சீழ்ப் புண், அசீரணம், மந்தம், மலக்கட்டுதலியவற்றைப் போக்கும்.

✓

ஆசிகா வாய்வு குணம்.

வயிறு பல்குத்தலிசிவு தேகம்
வலித்தல் குத்தல் வீங்கல் நோய்கல் நடுங்கல்
தியங்கல் காய்தல் தாக மெடுத்தல் மந்தம்
முதுகென மலம் விடல் அதிசாரம்ங் கிளைக்கல்

ரூ.

வயிறு, பல் குத்தல், வலி, உடல் நோவு, குத்தல், வீங்குதல், வலித்தல், நடுங்குதல் மயக்கம் கொள்ளல், சுடுதல், தாகம் எடுத்தல், மந்தம், மலப் போக்கு, அதிசாரம், இளைத்தல்

பருக் கொட்டைக் கையாண்கிலையும் ஏலம்
மிகார் எவச்சாரம்ங் கோதும்பை முக்கடுகு
திறமாய் வகைக் கரைப் பலமும் கூட்டியச்
செய்யுங் ஆரணத்தில் அரியவை பின்னும்.

ய.

பருக் கொட்டை, கரிசலாங்கண்ணியிலை, ஏலம், எவச்சாரம், கோதும்பை, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு அரைப்பலங் கூட்டித் தேவையான அளவு ~~உட்கொள்ள~~ மேலும்

பின்னும் உன்மத்தின் விரையும் சூரணம்
பிரட்டி ஒன்றுயிக் கூட்டுவை தினமும்
தின்னும் விராகனிடையும் வெந்நீர்
திரட்டியுண் சுசிகா வாய்வு போம் வையும்

உன்மத்தின் விதை கூட்டுச் சூரணம் புரட்டி யக யென்றாகக் கூட்டு தினமும் விராகனிடை வெந்நீரில் உண்ணச் சுசிகா வாய்வு நீங்கும்.

விசற்பத்தின் குணம்.

தேகமுழுதுந் தினைப்பு கண்டு
திரியெரும்பூரு இன்றி விதமாய் கணைப்பு
தாக மெரிப்பு தினைப்பூ சுரம்
தாங்கும் தடிப்பூ விசற்ப முனைப்பூ

தேகம் முழுவதும் தினைப்புக் கண்டு குன்றி விதம் மேலத் தோன்றி தாகம் எரிப்பு தினவு, சுரம், தடிப்பு, வியர்வை ஆகியவை தோன்றும்

வாத விசர்ப்ப மருந்து

சங்கு பவள மிரண்டும் சமன்
தண்ணீரில் அரைத்து மேற்பூசு மந்திரண்டு
தங்கிப் பித்தப் பிணிணத்தல் வரண்டு, மூர்ச்சை
தரிப் பெரிப்பு வாத விசர்ப்பம் போமுமண்டு

சங்கு பவளம் இரண்டும் சம எடை கூட்டி(ய)வ.
தண்ணீரில் அரைத்து மேற்பூச வாய்பிணைத்து
நின்ற பித்தம் நைந்து விடும். மூர்ச்சை, எரிப்பு
வாதம் ஆகியவை நீங்கும்.

பித்த விசர்ப்ப மருந்து

கொன்றைப் பழமுந்திரியும் பழம்
இருவேலி வேர் மதுரம் முக்கடுகும்
ஒன்றுயிப் பொடிசெய் சர்க்கரையும் சரி
யொக்கவே காசிடை தேனில் கொள்வதையும்
யசு.

கொன்றைப் பழம். முந்திரிப் பழம், இருவேலி
வேர், அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி
ஆகிய வற்றைப் பொடிசெய்து சர்க்கரை
சரி அளவு கலந்து காசு எடை தேனில்
கொள்ள பித்த விசர்ப்பம் நீங்கும்.

✓

சன்னிக்கு மருந்து.

அசம்பு கஸ்தூரி யிரண்டு சேர்ந்து
ஆகாயமரைத்து துணி [illegible]ச் செண்டு
சிசுகாச் சன்னிப்புரண்டு யதி
நீர்காது அவ்வகினை மிக்க வெருண்டு
யசா.

வசம்பு, கஸ்த்தூரி இரண்டும் சேர்த்து நீராக அரைத்து துணியால் பொச்செண்டுகரை சன்னி வெகுதூரத்திற்கு ஓடிச் செல்லும்.

சன்னி சயித்தியத்திற்கு

ஆடா தோடாயிலை நாலு கலியாண
ணப் பூசணிக் கொடி யிலை யிரு நாலு
போடாய் விருவைிடையே மேலு மதைப்
பூட்டிக் கியாழம் வைத்திருந்துண்ணக் கோலு
யா.

ஆடாதோடை இலை நாலு கலியாணப் பூசணிக் கொடியிலை எட்டு இட்டு நீண்டு கியாழமிட்டு இராகனிடை உண்ணச் சன்னி சயித்தியம் நீங்கும்.

கோவை மிக்கு ப்பூவிருகன் யரை
கூர்திப் பிலிப் பொடி சேரேர் விருகன்
மேலாய்க் குழைப் பியுண் விருகன் சன்னி
விருஞ் சயித்தியம் நாடா தேகும் விருகன்
௧௮.

இந்துப்பு வராகன் அரை, திப்பிலிப் பொடி ஒரு வராகன், இரண்டையும் குழைப் பியுண்ண (வராகன்) சன்னி நாட்டாது, சயித்தியம் வெகுதூரத்தில் விலகிச் செல்லும்.

<u>சன்னி விக்கலுக்கும் மேல் வீக்கம்.</u>

உழக்கு நெய்யில் நாக்கப் பூச்சி விட்டு
ஒக்கக் காய்ச்சி சத்துயூறவே பாச்சில
பழக்க முனாளிக்குழ காய்ச்சி யதில்
பழக்கும் சன்னியின் மேல் விக்கம் லேச்சில்
௧௯

உழக்கு நெய்யில் நாக்குப் பூச்சி விட்டு நன்கு காய்ச்சி சத்து ஊற, விடாது மூன்று நாள் கொடுக்க சன்னி நீங்கும் மேல் விக்கம் நீங்கும்.

நளிர் பேத சுரத்திற்கு.

பசுமோரில் ஊறின மிளகு அரைப்
பலம் துளசி கற்பூரம் விருகன் வகைக்கு
இசைய அரைத்து ஏத்து உள்ளுக்கு, யிதில்
ஏகும் நளிர் சுரம் யெவையும் போகுடுக்கு
௨௰.

பசுமோரில் ஊறின மிளகு அரைப் பலம், துளசி, கற்பூரம் வகைக்கு ஒரு வராகன் எடுத்து அரைத்து உட்கொள்ள நளிர் சுரம் யாவும் நீங்கும்

மாறல் சுரத்திற்கு:

உத்தாமணித் தாபங்காட்டி பூசித்
உறுதியாய் அவ்விலை கசக்கிடு கூட்டி
சுத்தாய் மஞ்சள் இலை கூட்டி : கையில்
சொருகாய் கட்ட மாறல் சுரம் போகுங்காட்டி
௨௧.

உத்தாமணி தாபங் காட்டிப் பூசித்து உறுதியாய் அவ்விலை கசக்கி மஞ்சள் இலை கூட்டி கையில் சொருகாய்க் கட்ட மாறல் சுரம் நீங்கும்.

[illegible] சுரம் வரும் நான்கு நாளின் முன் கொடுக்க

மிளகு இரண்டு விராகன் பொடித்து தயிர்
விட்டே பிசைந்து பின் வெய் யிற் காய்ந்து
வளமாய்ச் செய்த குளிகை யுண்ணெடுத்து தீர
மறு வெந்நீர் குடிமூன்று பொழுது மடித்து ௨௨

இரண்டு விராகன் மிளகு பொடி செய்து தயிர் விட்டுப் பிசைந்து வளமாய்ச் செய்த குளிகை எடுத்து உண்ணுக. மூன்று முறை வெந்நீர் குடிக்கவும்.

மேக சுரத்திற்கு.

பனை வெல்லம் இலக் குமிதி வேர் சுக்கு
பதமாயிதைக் காய்ச்சி வடித்துக் குடிப்பீர்
இனை மேகச்சுரம் விடப் பறப்பீர் யிதில்
நீக்கும் அரைக் கணத்தில் நேராய்ப் பார்ப்பீர்.

பனை வெல்லம், இலக்குமிதிவேர், சுக்கு ஆகியவற்றைப் பதமாகக் காய்ச்சி வடித்துக் குடிப்பீர். மேகச் சுரம் அரைக் கணத்தில் நீங்கும். இதை நேராகப் பார்ப்பீர்.

நாவ்வை இரும் விநக்கு.

கள்ளிக் கொழுந்தும் வெள்ளுள்ளி மிளகு
காலை மாலை புண்ணார் மனதக் கிள்ளி
கொள்ள நைத்துண் கழுச்சி கிள்ளிவ் வாறு
கூடிச் சாபத் தியம் ஐமுணார் புள்ளி

கள்ளிக் கொழுந்து, வெள்ளுள்ளி, மிளகு காலை, மாலை கிள்ளி கச்சிக் காயமாய் அரைத்து உண்ணுக. இவ்வாறு, இச்சாபத்தியம் பதினைந்து நாள் ~~[illegible]~~ கடைப் பிடிக்க நன்றாம்.

இருமல் போக்கும்.

கண்டங்காரி வித்துத் தேத்தா ன்வித்து.
கவர் தும்பரு ஷ்டகம் திப்பிலியைத் தான்
கொண்டே நாணைக்குச் சூரணித்தான் தேனில்
கொட்டிடக் கோரிபிரு வேளைக்கே தான்.

26.

கண்டங்கத்திரி விதை, தேத்தான் விதை, தும்பராஸ்டகம், திப்பிலி ஆகிய நான்கும் சூரணித்து தேனில் கொட்டிக் காலை இருவேளை உண்ண இருமல் போம் நீங்கும்.

கொட்டைப் பாக்கு வீதம் தின்ன யிருமல்
கோழை யிரைப் பேப்பம் விக்கலு மென்ன
கட்டுங் கபசு வாசங் பன்ன யிரத்த
காச மேல் மூச்சு மேல் யிளைப்புமே யின்ன

கொட்டைப் பாக்கு வீதம் தின்ன இருமல், கோழை, இரைப்பு, ஏப்பம், விக்கல், கட்டுங்கபம் கபசுவாசம், இரத்தகாசம், மேல்மூச்சு, மேல்யிளைப்பு ஆகிய யாவும் நீங்கும்.

சுவாச காசத்திற்கு.

நாரத்தைப் பழமேல்த் தோல் போக்கியதின்
நடுப் பழச் சாத்தில் திப்பிலிப் பொடி தெக்கி
சேறப் போட்டுள் கொள்ளத் தாக்கி யிருமல்
சுவாசம் போமீங் சர்க்கரைப் பிரமியம் நீக்கி

நாரத்தைப் பழம் மேற்தோல் போக்கி அதில் நடுப்பழச்சாத்தில் திப்பிலிப் பொடி தெக்கி ணேக்கி திப்பிலிப்பொடி நாரத்தின் சாற்றில் சேர்த்த பின்னர் அதனை உண்ண இருமல், சுவாசகாசம் சர்க்கரைப் பிரமியம் ஆகியவை நீங்கும்.

கால் வெடிப்பு வேதை.

சுண்ணாம்புக் கல்லொரு படியே பாண்டத்
தூத்தாவின் பால் நீர்வகைக் கரைப் படியே
ஒன்றுயிக் கலந்து கொதியே வர
ஓங்கும் ஆவி யிரு காலுக்கும் பிடியே
௨௮.

சுண்ணாம்புக்கல் ஒருபடி பாண்டத்திலிட்டு பசுவின்பால், நீர் வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து கொதிவர வருகின்ற ஆவி இரண்டு காலுக்கும் பிடித்திடு.

பிடியுமே வேது ரெண்டு வேளை மூனாள்
பிறகு கால்வெடிப்புகள் தீருமங் காணை
முடியுமிவ்விதை நன்னாளை நினை
முந்து மனதில் பந்துமே கோணை
௨௯.

அவ்வாறு பிடிக்கும் வேது மூன்று நாள் இரண்டிரண்டு வேளை வேது பிடிக்க கால் வெடிப்புகள் நீங்கும் அவ்விதம் செய்யுங் கால் கோளை நெஞ்சில் தோன்றும்.

இருமல் இரைப் பிணிக்கு

நற்பிராந்தி ஓர்பாயண்டு கொண்டு அதில்
நாட்டு வெங்காரமிரு பலம் இண்டு
சொற்படி போட்டிடுங் கண்டு நற்கல்த்
தூல் போட்டுக் குலுக்கி கார்க்கிருத்தி யுண்டு
ருய.

பிராந்தி ஓர் பாயண்டு எடுத்துக் கொண்டு அதில் நாட்டு வெங்காரம் இரண்டு பலம் கொட்டி கற்கண்டு இரண்பலம், கல் தூள் போட்டுக் குலுக்கி கார்க் இருபது வைக்கவும்.

மூடியே காலை எடுத்து அதில்
மூன்றேக் கரண்டி யுண்டு கொள்ள விடுத்து
நாடிடு மண்டலந் தொடுத்து யுண்ண
நலியும் இரைப் பிருமல் போமடுத்து
ருக.

மூடி வைத்ததை மறுநாள் காலை எடுத்து அதில் மூன்று கரண்டி ~~[illegible]~~ ஒரு மண்டலம் உட்கொள்ள சொல்லப்பெற்ற இரைப் பிருமல் சொல்லிக் கொள்ளாமல் விரைந்தோடிப் போகும்.

✓

இருமலுக்கு.

சரக் கொன்றைக் கொழுந்தை யரைத்து உண்ண
மாறுமே இருமல் வேறுரைப் பேன்யா னுரைத்து
இரமாய்த்துத் துத்தியிலை பரித்து கியாழம்
செய்து கற்கண்டைப் பொடித்திட்டுண் நெடுத்து

௩௨.

சரக் கொன்றைக் கொழுந்தை அரைத்து உண்ண இருமல் நீங்கும். துத்தியிலை பரித்துக் கியாழ மிட்டு கற்கண்டைப் பொடித்திட்டு உண்ண இருமல் நீங்கும்..

இரைப் பிருமலுக்கு.

வாழைப் பழத்தினுள் மோட்டுப் பூச்சி
வைத்ததில் நாலைந்து வாய்மூட போட்டு
கோழையைப் போக்கி முன்னூட்டு ஐநாள்
கொடு காலை மாலை இரைப்பிரும லோட்டும்

௩௩

வாழைப் பழத்தில் மோட்டுப் பூச்சி வைத்து நாலைந்து வாய்மூடப் போட்டு கோழையைப் போக்கி ஐந்து நாள் உட்கொள்ள 10 வேளை யில் இரைப் பிருமல் நீங்கும்.

க்ஷயத்திற்கு.

தனித்தனி மூன்று நாடா தோடை
சாத்தில் திப்பிலியை ஊறவைபிடா
இனிப் பினில் பனை வெல்லம் போட்டாய் பின்பு
ஏத்த நெய்யிறக் காய்ச்சியெடுத்துண்ணடா
நசு.

தனித்தனி மூன்று நாள் ஆடாதோடைச் சாற்றில் திப்பிலியை ஊறவைத்து அப்பால் பனை வெல்லம் இட்டு இது ஏற்கும் அளவு நெய் விட்டுக் காய்ச்சி பதமாக இறக்கி உண்ணச் சயம் நீங்கும்.

உஷ்ண வாய்வுக்கு

கேழ்வரகுக் கூழைக் கிண்ண மெத்திக்
கெட்டிப் பசுந்தயிரிற் கரைத் துண்ண
தாழ்வற உஷ்ண நோய்க் கின்ன பித்தம்
தங்காது பசி மிக்க வாயுவுமே சன்ன.
நசு.

கேழ்வரகுக் கூழைக் கிண்ணத்தில் எடுத்துக் கெட்டியான பசுவின் தயிரில் கரைத்து உண்ண பித்தம் தங்காது. பசிமை எடுக்கும். உஷ்ண வாய்வு நீங்கும்.

புளித்த கண்ணுக்குக் களி.

பாசிப் பயர் பசும் பாலும் அதில்
பகர் புழுங்கலரிசி களி யாலும்
மாசீரகம் நெய் சுக்குக் காயும் களி
ஆர் இன்றயுண் புளிக்கண் மாறுமே

ரவசா.

பாசிப் பயர், பசும்பால், புழுங்கலரிசி சேர்த்து களிசெய்து சீரகம், நெய், சுக்கு, சேர்த்துக்கிண்டி உண்ண புளிக் கண் மாறும்.

நேத்திர வியாதிக்கு.

காரீயப் பொடி பலமொன்று கூட
கனமிள காணத் திப்பிலி விரகனென்று
சேர் நந்தியாப் பூச்சார் நன்று அரை
இடு போங் கண் வியாதி தொண்ணூற்காறும்
சென்று

காரீயப்பொடி பலம் ஒன்று, மிளகு, ஆணைத் திப்பிலி விராகன் ஒன்று, சேர்த்து நந்தியா வட்டப் பூச் சார் விட்டு அரைத்துத் தேய்க்கக் கண் வியாதி தொண்ணூற்றாறும் நீங்கும்.

வெள்ளுள்ளி வசம்பு நறுக்கி கொஞ்சம்
மேனிப்பிலை வைத்து மெதுவாய்க் கசக்கி
அள்ளிச் சாற்றை யுச்சி தேக்கிலரும்
அலட்டும் நேத்திர வாய்வு மணைத்தும் போம்குலுக்கு

வெள்ளுள்ளி (பூண்டு) வசம்பு நறுக்கி இடித்து குப்பை மேனி யிலைச் சாறுவிட்டுக் கசக்கி எடுத்து அள்ளிச்சாற்றினை உச்சி தெய்க்கில் அலட்டுகின்ற நேத்திர வாய்வு அனைத்தும் போகும்.

கண் புகைச் சலுக்கு.

புளியாரை பிலை சீரகமும் கூடப்
புகல் வெங் காயமிம் மூன்று சேர்த்தரையும்
விளிவிரு கண்ணிற் பிழியும் யதி
வேறாகுங் கண் புகைச்சல் விடும் குருவும்

புளியாரை இலை, சீரகம், வெங்காயம் ஆகிய மூன்றும் சேர்த்தரைத்து விழியிற் கண்ணில் பிழிய கண்புகைச்சல் நீங்கும்.

கண்ணில் பூவிழற்கு.

நற்சீரகமு வெண்ணய் காயம் கண்ணில்
நாட்டும் பாலங்கிட்டி விலையது நேயம்
சுத்தரையும் மூன்று தாயம் கண்ணில்
தட்டிப் பிழியப் போம் பூவது மாயம்

அய.

சீரகம், வெங்காயம், பாலங்கிட்டி இவை மூன்றையும் சத்து வெளிப்படுமாறு அரைத்து மூன்று முறை கண்ணில் தட்டிப் பிழிய பூ மாயமாய் மறைந்துவிடும்.

சொலிக்கு.

பூவரசம் பட்டை பலமும் யதை
புகட்ட இரசகாரம் ஆழாக் கெனவும்
பாவாய் மூன்று நாளுண்ணவும் சொலி
பறந்து போ முப்பாகா பணம்பாய்க் குணமும்.

பூவரசம் பட்டை ஒரு பலம் எடுத்துக்கொண்டு ஆழாக்கு இரசகாரத்தில் மூன்று நாள் பட்டை பொடித்து தூள் இட்டு உண்ண சொரி பறந்து போகும்.

பேய்ச் சொறிக்கு.

இந்துப்புத் தூள் நெய்யிற் போட்டுக்கிண்டி
யெடுத்(து) ஊறவை(த்து) தினை தலைக்கிட்டு
சிந்தாமல் மேல் பூசும் தொட்டு மறு
தினமுழு கில் பேய்ச் சொறி திறமாகும் பட்டு.

இந்துப்புத்தூள் நெய்யிற் போட்டுக் கிண்டி யெடுத்து ஊரவைத்து தினைத்தலையிற் தேய்த்து சிந்தாமல் உடல்முழுதும் பூசி மறுதினம் தலைமுழுகில் பேய்ச் சொறி பட்டுப் போகும்.

கால் வெடிப் பிற்குப் பூசும் மருந்து

ஆலம்பால் மெழுகு கல்லுப்பு மஞ்சள்
அரக்கு புறாவெச்சம் கடல் நுரை யொப்பு
சேலாயிச் சரி காடி யரைப்பு ஐந்து
தினம் பூசில் கால் வெடிப்புத் திருமிருப்பு

ஆலம்பால், மெழுகு, கல்லுப்பு, மஞ்சள், அரக்கு, புறாவெச்சம், கடல் நுரை சரி அளவு எடுத்துக் கொண்டு காடி விட்டு அரைத்து ஐந்துநாள் பூசினால் கால் வெடிப்புத் தீரும்.

கண்ணோ விற்கிக் களி

அவரைச்சார் படி ரெண்டெனத்தை பத்தி
அரைப் படியாய்க் காய்ச்சிக் கருமணிக் கத்தை
தவமல்லாத முதரைப் பதத்தைப் படி
தனைக் களிக் கிண்டிக் கற்கண்டு சேர்த்தை

இரண்டுபடி அவரைச் சார் இரண்டு பாத்திரத்தில் அது எடுத்துக் கொண்டு அரைப்படியாகக் காய்ச்சிக் கொண்டு உமியில்லாத முதுரை ஒருபடி தனைக் களியாகக் கிண்டி கற்கண்டு சேர்த்து

சேர் முழுகுநாள் முதலன்று காலைத்
தினமூன்று நாளுண்ணத்திடும் மகன்று
பார் வாத மந் கண்டு நோய்க்குன்று: மதில்
படுவல்லைக் கட்டிக் கரையுமே நன்று
அரு.

முழுகும் நாளிற்கு முதல் நாளிலிருந்து மூன்று நாள் உண்ண ~~த்~~ நோய் தீரும். வாதம் குன்றும் மிகவிக்கம் கொண்டுள்ள வலிலை என்னும் கட்டி கரையும்.

✓

அம்மை யடங்க.

எருமைச் சாணிப் பாலாழுக்கு ஈருள்
ளிக் கச்ச கருவாடு தலைமே லாக்கு
அரைத்துக் கரைத்துமே தாக்கு - வழ
இருநாள் நெய் கொண்ட அம்மை யிதர் போக்கு

யசா.

எருமைச் சாணிப் பாலாழுக்கு, ஈருள்ளி, கச்சக் கருவாடு சேர்த்து அரைத்துக் கரைத்து பூசிட இருநாளில் நீர் கொண்டுள்ள அம்மை நீங்கும்.

கெட்டிய புண்ணிற்கு.

சேரங் கொட்டை மயில்த் துத்தம் அதில்
சேரும் வசம்பைச் சமன் சேரு மொத்தம்
தீருமி எண்ணெயிற் குழைத்தும் புண்ணில்
இத்திட கெட்டிய புண் போம் தெரிந்தும்

யசா.

சேராங் கொட்டை, மயில்துத்தம், சம அளவு ~~மயில்த்துத்த~~ வசம்பு சேர்த்து தீராக எண்ணெயிற் குழைத்து புண்ணில் இட கெட்டிய புண் நீங்கும்.

காலில் புண்ணுக்கு.

வங்களை பச்சை யாவாரம் பட்டை
வளர் பற்படாகம் எருள்ளியும் சூதம்
பொங்காய்ப் பணவிடை ஈதம் ரெண்டு
போட்டிவை யாவுமே சேர்த்தரை ஈதம்.

அயஅ.

வங்காளப் பச்சை, ஆவரம் பட்டை, பற்படாகம் புல், எ.ருள்ளி, இரசம் இரண்டு பண எடை போட்டு இவையாவையும் சேர்த்து அரைத்து

வெண்ணெயிற் குழப்பிச் சீலையில் பூசி
மிதக்கவே போடுங்கால் புண்களின் மேலில்
கண்ணான முருக்கிலை கோரில் கட்டி
கால்களில் புண்ணாறுங் கண்டு பாரில்

அயகூ

வெண்ணெயிற் குழப்பி சீலையில் ஊட்டி நன்றாகப் போடும்பொழுது புண்களின் மேல் கண்ணான தளிரான முருக்கிலை கட்டிவைக்க கால்களி லுள்ள புண் ஆறும்.

கிரங்கிற்கு.

கருஞ்சீரகம் ணியைக் கருக்கி சுட்டு
காரெள் ளெண்ணெய் விட்டுக் கலக்கிக்குழப்பிலது
கிரு கிரங்கிற்கு மேல் தப்பி லது
தீய்ந்து சுருங்கியேச் சென்றிட செப்பிரு

கருஞ்சீரக மணியைக் கருக்கிச் சுட்டு கரிய எள் எண்ணெய் விட்டுக் குழப்பி கிரு கிரங்கிற்கு மேல் அப்ப அது தீய்ந்து சுருங்கி நீங்கும்.

கிகிச்சைப் படலம்:

அரையாப்பு கொறுக்கு வெள்ளைக்கு.

சரக் கொன்றைப் பட்டைச் சீரகமும் ரெண்டும்
சமனாய் யரைத்து ண்ணு பசுமோர் சாப்பிடவும்
முறையாய்த் துவரைத் தாளிடவும் வெள்ளை
முதிர் கடும் பத்தியம் கொறுக்கே தீரவும்

சரக்கொன்றைப் பட்டை, சீரகம் சமனாக அரைத்து உண்டு பசுமோர் சாப்பிடுக. துவரைத் தாளி கடும்பத்தியம் கொள்ள கொறுக்கு வெள்ளை அரையாப்பு நீங்கும்.

✓

அரையாப்புக் கட்டிக்குப் பத்து.

சேங் கொட்டைப் பால் பத்திடவும் மேலே
சேர் சுண்ணாம்பும் கோழி முட்டை வெண் கருவும்
பொங்காய் யிரண்டும் குழைத்து பத்துப்
போட்டரை யாப்புக் கட்டி மாயவும். உ

சேங்கொட்டைப் பால் பத்திட அதன்மேல் சுண்ணாம்பும் கோழிமுட்டை வெண்கருவும் பொங்கமாக இரண்டும் குழைத்து பத்திட அரையாப்புக் கட்டி மாய்ந்திடும்.

அரையாப்புக் கட்டியுடைய

மாவிலங்கைப் பட்டையிடித்து யதை
வாகாய் ரைத் தொட்டு வில்லையில் வைத்து
ஆவிகச்சுப் பட்டை சேர்த்து
இடவரையாப்புக் கட்டிப் போமுடைந்து ௩.

மாவிலிங்கப் பட்டை இடித்து அதை வாகாய் அரைத்து தொட்டில் வில்லை செய்து காய வைத்து ஆவாகச்சுப்பட்டை சேர்த்து இட அரையாப்புக் கட்டி உடைந்து போகும்.

வெள்ளைக்கு

மிளகு வெள்ளுள்ளி மரைத்து மதில்
விள்ளப் புளியங் கொட்டை யளவெடுத்து
உளமாயுண் வெள்ளை விடுத்து நிற்கும்
வறுத்துப்பூ புளிப்பூ வார்தலைக் கோமந் தொடுத்து

மிளகும் வெள்ளுள்ளியும் அரைத்து அதில் புளியங் கொட்டையளவு எடுத்து உண்ண வெள்ளை நீங்கி நிற்கும். தலைக்கு ஓமந் தேய்த்துத் தண்ணீர் விடுகின்ற அன்று புளியை வறுத்துக் கூட்டிக் கொள்ளுக.

மஞ்சா வெள்ளைக்கு

முற்றின பிரண்டைச்சார் பிழிந்து அதில்
முத்து நல்லெண்ணெயும் விட்டுக் கலந்து
மெத்தென மூன்று நாள் பொழிந்து : மஞ்சா
வெள்ளைக் கிணம் தீருமாம் கடும் பத்தியம் பார்த்து ரு.

முற்றிய பிரண்டைச்சார் பிழிந்து, முத்தெண்ணெயும், நல்லெண்ணெயும் விட்டுக் கலந்து மூன்று நாள் உண்ண வெள்ளைக்கிணம் நீங்கும். கடிய பத்தியம் முறையாகக் காத்திடுக.

✓

இடுப்புக் கரப் பானுக்கு.

மயில்த் துத்தம் பசுச் சாத்திலரைத்து யதை
வாளமாய் மூன்று வேளை பூசப் போம் விடுத்து
அவம் பொன் அகத்தியிலை யருத்து பன்னீர்
தொடுத் துரைத்து மேற்பூச் போம் தெரிந்து.

ஆ.

மயில்த் துத்தம் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து அதை வளப்பமாக மூன்று வேளை பூச இடுப்புக் கரப்பான் நீங்கிப் போகும். சுயமான பொன்னை அகத்தி இலைச் சாற்றில் பன்னீர் விட்டு

நரம்புச் சிலந்திக்கு.

எருக்கின் மொக்கு அறுபதாய் அதில்
இசை கம்பிலி பெருங்காயம் சமனாய்
சேருக் கொடனரைத்து சுண்டையா யுண்டை
தினமூன்றுண்ண நரம்புச் சிலந்திக்காய.

எ.

எருக்கின் மொட்டு அறுபது பெருங்காயம் சமனாய் எடுத்து அரைத்து சுண்டைக் காயளவு தினம் மூன்று முறை உண்ண நரம்புச் சிலந்தி நீங்கி விடும்.

நீருத நரம்புச் சிலந்தி

மொந்தன் வாழைப்பழ மொன்று காயம்
போட்டரை யிருகண் யாறு பொழுதுண்ண நன்று
பிந்தி செம்பிணிது யன்று நன்றாய்
பிழ சிறு நீர் விட்டரைத்துக் கட்டென்று

மொந்தன் வாழைப் பழம் ஒன்று, அரை வராகனெடை காயம் சேர்த்து [illegible] ஆறு பொழுது உண்ண நன்றாகும். சமம் பின்தாளில் எருமை சிறுநீர் விட்டு அரைத்துக் கட்ட நரம்புச் சிலந்தி நீங்கும்.

பாண்டு, காமாலை, நீர்க்கோர்வை, சோகை, வீக்கம் தீர மருந்து..

எருமைத் தயிர் உழக்கு அச்சாணி பாலும்
இது மூன்று துளி மிளகுத் பொடி யூணி
தரு மூணாள் கடும் பத்தியம் பேணிப் பாண்டு
தவிர் காமாலை சோகை நீர்க் கோர்வை காணி.

எருமைத்தயிர் உழக்கு எருமைச்சாணச் சாறு, பால் இது மூன்று துளி மிளகு ஏழு பொடித்துக் கலந்து பதினெட்டு நாள் கடும் பத்தியம் காத்திடக் காமாலை, பாண்டு, சோகை, நீர்க் கோவை வீக்கம் நீங்கிடும்.

காமாலை தீர.

எருமைச் சாணி பால் தயிரும் பின்னும்
இசை சீரகம் வெண்காயமஞ் சேர்த்தரையும்
சிரமாய் பாலிற் கூட்டிக் கரையும் மூன்று
தினமும் சேர்த்துண்ணக் காமாலை போந்திரையும்

எருமைச் சாணி, பால், தயிர், சீரகம், வெங்காயம் சேர்த்து அரைத்துப் பாலிற் கூட்டிக் கரைத்து மூன்று நாள் சேர்த்துண்ண காமாலை நீங்கிப் போகும்.

சோகை மண்டூரம்.

அய பொடி கிட்டம் பழச்சார் விட்டு
ஆட்டியரைப் புடமிட் டெடுத் தேபார்
முறைப்படி சோகைக் குண்ணிவ்வாறு அதில்
முற்றும் பத்திய தோஷம் போம் பழக்கார்
யக.

இரும்புப் பொடி, கிட்டம், எலுமிச்சம்பழச் சார் விட்டு அரைத்து புடமிட்டு எடுத்து முறைப்படி சோகைக்கு உண்ண முற்றிய பத்திய தோசம் நீங்கும்.

காது நோய்க்கு.

சதுரக் கள்ளி யனல் வதக்கி சாற்றை
சாரிபாயிரு நேரமுஞ் செவியிற் புதுக்கி
மதுர மொழியா ளோசுக்கி : திப்பிலி
மா கோட்டம் சயிந்தலவண் று வக்கி ௬௨.

மதுரமொழியாளே!
சதுரக கள்ளியை அனலில் வதக்கி அதன்
சாற்றை காலை, மாலை ஆகிய இரண்டு வேளையும்
செவியிற் புதுக்கிவிட்டு சுக்கு, திப்பிலி, கோட்டம்

துவர் முத்தக் காசு வசம்பும் உள்ளி
கூட்டும் வகைக்கு மூந்து இடைக்ச் சுரைக்காயும்
நவமெருக் கிலைச் சாறே சேரும் எண்ணெய்
நாட்டிக் காச்சில் செவிநுழை சீயும் மாறும் ௬௩.

துவர்ப்புடைய. முத்தக்காசு, வசம்பு. உள்ளி
வகைக்கு எடை சமன் கூட்டி அந்த எடைக்கு
உருந்து கூட்டி சுரைக்காயும் வெண்பது எருக்
கிலைச் சாறும் சேர்த்து எண்ணெய் விட்டுக்
காய்ச்சி செவியிலிட சீ மாறும்.

பல்லில் இரத்தம் வருதலுக்கு மருந்து.

பச்சை நன்னாரி வேர் வெந்நீர் விட்டு
பரிந்தரைத்து நரம்பைப் போக்கி மந்நீர்.
அச்சமு கொட்டை பாக்கெருந்திரக் கொண்டு
அருந்தப் பல்லிரிலிந்துப் போம் செந்நீர்
யசு.

பச்சை நன்னாரி வேர் வெந்நீர் விட்டு நன்கரைத்துக் கொண்டு அதிலுள்ள நரம்பைப் போக்கி கொட்டைப் பாக்களவு அருந்த பல்லிலுள்ள இரத்தக் கசிவு நீங்கிப் போகும்.

பெரும் பாட்டிற்கு.

தென்னம் பாளைப்பூ வெடுத்து யதில்
சீர் பசும் பாலாழக்கு விட்டி டித்து
முன்னம் பிழிந்தறைக் குடித்து விட
மூனாள் ஆறுவேளையிற் போம் விடுத்து.
யசி.

தென்னம் பாளைப்பூ எடுத்து அதில் பசுவின் பால் ஆழாக்கு விட்டு இடித்து அதனைப் பிழிந்து மூன்று நாள் ஆறு வேளை குடித்திட பெரும்பாடு நீங்கிப் போகும்.

தீராத பெரும் பாட்டிற்கு

கவதும்பைக் குருவரிசி யோடு நன்றாய்
கலந்து யிடித்துமாவாக்கி பனைவெல்லம் போடு
சவுரியமா யுண்ண நாடு ஆறு
தன் பொழுதில் தீரும் சார் பெரும்பாடு

௰௬

கவதும்பை குருவை அரிசியோடு நன்றாய்க் கலந்து இடித்து மாவாக்கி பனைவெல்லம் போட்டு நன்றாய் உண்ண ஆறுவேளையில் தீராத பெரும்பாடு தீரும்.

பெரும் பாட்டுக்கு குடிநீர்.

நாவல்த் தோல் ஒதியம் தோல் யிரண்டும் தட்டி
நன்றுவி நெய்பாலிற் குடிநீராய்க் கொண்டும்
தாவிக் கரைத்துமே யுண்டும் வரக்
தவிரும் பெரும்பாடு சார்வாகப் புண்டும்.

௰௭.

நாவல்த்தோல், ஒதியந்தோல் இரண்டும் தட்டி குடிநீரிட்டு பசுவின் நெய், பசுவின் பாலில் குடிக்க பெரும்பாடு நீங்கிப் போகும்.

கரும் பெரும் பாட்டிற்கு.

நாவற் பட்டை மேதி மோரில் யிட்டு
நன்றாயிற் துவைத்திடித்துப் பிழி நீரில்
ஆவகில் ஐவிராகன் நேரில் மூனாள்
அருந்த புளித்த மோரில் தீரும் பாடில்

நாவல்ப் பட்டையை எருமை மோரில் இட்டு நன்றாய்த் துவைத்து இடித்து பிழிந்த நீரில் ஐந்து வீராகன் அகில் கட்டைத் தூள் இடித்து புளித்த மோரில் மூன்று நாள் அருந்த கரும் பெரும் பாடு நீங்கிப் போகும்.

தாது புஷ்டிக்கு.

பேரிச்சங் காயுள் நாற்பதாய் விதை
பேர்த்துக் கங்கிலிய மங் கிராம்பு சாதிக்காய்
சேர் சாதிப் பத்திரி பலம் வகையாய் ஒன்று
செலுத்து முன் காய்களின் நுழைத்து வாய் மூடிக்காய்.

யண.

பேரீச்சங்காய் நாற்பது எடுத்துக் கொண்டு விதை நீக்கி குங்கிலியம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்குப் பலம் ஒன்றுமுன் காய்களில் நுழைத்து வாய் மூடி

முருங்காயை நூலால் சுற்றி வைத்து
முதிருவி நெய்பழயரை தேனும் பத்தி
சொருக்கா யிரு நாளைக் கேகற்றியதை
தொட்டரை மண்டலங் கொள் தாது வெற்றி
உய.

காயை நூலால் சுற்றி வைத்து பசுவின் நெய் ~~பசுவின் நெய்~~ அரைப்படியும், தேன் அரைப்படியும், ஊற்றி இரண்டு நாளைக்கு வைத்திருந்து பின்னர் அரைமண்டலமாகிய இருபது நாள் உண்ணத் தாது விர்த்தியுண்டாகும்.

வீரிய விர்த்திக்கு.

முருங்கைப் பூ சாதிப் பத்திரி காயம் அபின்
முதிர் வெண்ணங் காரம் சுத்தி செய் பொரிச் சேயும்
ஒரு விராகன் வகைகால்வ கெயம் யரைத்
துருட்டும் தேன் வார்த்துத் திரட்டு மாதாயம்.

முருங்கைப்பூ, சாதிப்பத்திரி, காயம், அபின் வெங்காரம் சுத்திசெய்தே பொரித்தே ஒரு விராகன் கல்வத்திலிட்டு அரைத்த உருட்டித் தேன் வார்த்து கொடுக்க ~~[illegible]~~ மிகுந்த வீரிய விர்த்தியுண்டாம்.

திரட்டி யந்தி சந்தி வேளை யென்று
தின மேழு கொள் வீரிய விர்த்தியுந் தன்னை
கர்மந்தாது விர்த்தியாங் காளை தேகம்
கட்டுடும் சுக்கிலத் தோடம் நீங்கும் கோளை
௰௨

காலை மாலை ஏழுநாள் உட்கொள்ள வீரிய விர்த்தி தாது விர்த்தியாகும். காளையின் தேகம் கட்டும். சுக்கில தோடம் நீங்கும். கோளையகும்

தவிர்ப்பாய் கள்ளுஞ் சார்ந்தனை நாளு
தப்பா இரவில் பாலும் சோறுண்ண தனை.
புலிக்குள் இத்திப்புப் பண்டம் தன்னை கூட்டி
புளிப்பு புகை போகம் மங்கலிச்சு நீக்குதானை.
௰௩.

கள், போதைப் பொருள், புளிப்பு, புகை, போகம், மீன் போன்ற இச்சைப் பொருள்கள் ஆகியவற்றை நீக்கி நாள் தோறும் இரவில் பாலும் சோறும் உண்ணுவதொடு இனிப்புப் பொருள்களை உணவில் கூட்டி உண்ண வேண்டும்.

ஆண் விந்து கட்டவும்.

சங்கன் வேர் நீர்முள்ளி விரையும் ஆலின்
கனி விழுதும் பலகரைச் சுண்ணமதையும்
தங் கோரைக் கிழங்கப்பால் வையும் கூட்டி
சர்க்கரையுடனே யில் உண்ண கலிதம் பிந்துவையும்
௨௪

சங்கன் வேர், நீர்முள்ளி விதை, ஆலின் விழுது, பலகரைச் சுண்ணம், கோரைக் கிழங்கு கூட்டி நன்கு அரைத்துச் சர்க்கரையில் உண்ண கலிதம் நீங்கும்.

புணர்ச்சிக்கு.

பச்சைக் கடலை எண்ணெயுள் போட்டு
பனி வாயூறிய பின் அந்தி நேரம் கொள்ள
அச்சீரகமாம் தேத்தான் வித்து நாளணி
அவை சிறு கீரை வேராக வைத்து உண்ணுர்
௨௫

பச்சைக் கடலை எண்ணெயிற் போட்டு ஊரவைத்து நன்கு ஊறிய பின்னர் மாலை நேரத்தில் உட்கொள்ளுக. அது போலவே சீரகம், தேத்தான் வித்து, சிறு கீரை வேர் ஆகியவற்றை உண்ண நன்றாம்.

வெள்ளைப் பிரமியத்திற்கு.

சங்கன் குப்பியிலை ரசமாய் அரை
தனியாழாக் காவின் தயிர் நெட்டுறப் பிசையாய்
நங்காய் நெண்டும் கூட்டு மசையாய் காலை
நாமூணாளங் கடும் பத்திய மிசையா.

உ-கா

சங்கங் குப்பியன் இலை ரசமாய்த் (தூ) தனியாக ஆழாக்கு (ஆவின்) பசுவின் தயிர் சேர்த்துப் பிசைந்து மூன்று நாள் காலைப் பொழுது கடிய பத்தியத்துடன் உண்ண வெள்ளைப் பிரமியம் நீங்கிப் போகும்.

சீழ்ப் பிரமியத்திற்கு.

அத்தியா வரைப்பூ வரசு மரு
தன் னாவல் கொன்றைப் பட்டையைத்தரிச்சும்
சத்துச் சூரணம் தேனில் குழைச்சும் புண்ண
தனிச் சார் பிழிந்து தேனில் கொள்ள வொழிச்சும்.

உ-ன.

அத்தி, ஆவரை, பூவரசு, மருது, நாவல், கொன்றை ஆகியவற்றின் பட்டையை தரித்துச் சூரணம் செய்து தேனில் கொள்ளவும், இவற்றின் தனிச் சாறு பிழிந்து தேனிலும் கொள்ளச் சீழ்ப் பிரமியம் நீங்கும்.

சகல பிரமியத்திற்கும்:

முன் மருந்து சூரண மாதல் வேறு
முறை யித்தியாதி சார் பிழிந் துண்ணலாதல்
சொன்னதாள் கொம்புத் தேனாதல் பிசைந்
துண்ணச் சகல பிரமியம் போதல்

உ-ள்.

முன் சொல்லப் பெற்ற மருந்து சூரணமாதல், வேறுமுறை யித்தியாதி சாறு பிழிந்துண்ணலாதல், சொன்னதாள் கொம்புத் தேனாதல் பிசைந்துண்ண சகல பிரமியமும் நீங்கப் போகும்.

சிறுநீரில் இரத்தம் விழுதலுக்கு மருந்து:

நெருஞ்சி விதை சேகரித்து பின்னும்
நேராயிள நீரில் குடிக்கத் தரித்து
வரும் சிறு நீரில் இரத்தம் மரித்து விடும்
மகியுள்ளோர்க் குரைத்தேன் நமஸ்கரித்து

உ-ரை.

நெருஞ்சி விதை சேகரித்து (முன்) இளநீரில் குடிக்க வலியோடு வரும் சிறுநீரில் இரத்தம் கலந்து வருவது நின்று சிறுநீர் ~~[illegible]~~ மாகக் கழிந்து விடும். இவ் உலகிலுள்ளோரை வணங்கி அவர்க்காகக் கூறினேன்.

✓

வெகுமூத்திரத்திற்கு

வெள்ளாட் டிறைச்சி யெடுத்து வந்து
மேவும் அந்நோயாளி சிறுநீரில் பிசைந்து
விள்ளாயதில் ஊறவைத்து சாமம்
வேளை யறிந்து பின் கழுவி யெடுத்து ௩௰.

வெள்ளாட்டு இறைச்சி எடுத்து வெகுமூத்திர நோயாளி சிறுநீரில் ஊறவைத்து ஒரு சாமம் கழிந்த பின் கழுவி யெடுத்து

கருவிக் கார சாரமிட்டு நன்றாய்க்
கறிசமைத் துண்ண நீரிழிவு மேகக்கட்டும்
வருவும் வெகுமூத்திரம் பட்டு; கிரிச்சை
மட்டுறுமதி சாரம் மலையிற் போம் கிட்டு ௩௧.

காரசாரம் கலந்து நன்றாய் கறிசமைத்து உண்ண நீரிழிவும், மேகக்கட்டும் நீங்கும் வெகுமூத்திரம் நீங்கி, கிரிச்சை மட்டுப்படும், அதிசாரம் மலையிற் சென்றொதுங்கிடும்.

✓

கிரந்திக்கு.

காந்த விடு அரைப்படியே என்று
கலசத்தில் கருவி யரைக் காற்படியே
பாரயரைக் கருப்புட்டிப் பொடியே கொட்டை
பாக்களவு இருபது நாள் கொள் முறையே
௩உ.

அரைப்படி என்று கலசத்தில் எடுத்துக் கருவி அரையளவு (பங்கு) கருப்புக் கட்டி பொடி சேர்த்துப் பாக்கின் அளவு இருபதுநாள் உண்ண கிரந்தி தீரும்.

சொறிக்கிற்கு.

எள்ளுப் பிண்ணாக் கிரு பங்கு கோவை
இலை பிரண்டையும் சரிபிணை பிரட்டங்கு
கொள்ளு முன்னாளில் கட்டெங்கு சிற்கும்
குஷ்டஞ் சிரங்கும் தீர் இச்சா பத்தியம்
இங்கு
௩௩.

எள்ளுப் பிண்ணாக்கு இருபங்கு கோவையிலை ஆகிய இரண்டும் சமபங்கு கூட்டிக் கலந்து மூன்று நாட் கொள்க சிரங்கு நின்று குளிர்த்து இரங்கும் தீர். இச்சாபத்தியம் இன்று பார்த்துக் ~~[illegible]~~ கடைப்பிடிக்க இன்று.

✓

படுக்கையில் நீர் இறங்கலுக்கு.

நிலத்தில் அரசி தெளிக்க பாயை
நேராகப் போட்டதன் மேற் படுக்க
பிலக்கச் சிறுநீர் விடுக்க ஊறும்
பின்னடைச் சுட்டுண்ணப் பிரிக்கும் கொடு

யசு.

நிலத்தில் அரிசி பரப்பி பாயை அதில் நேராகப் போட்டு அதன் மேற் படுக்கவும் அதிகமாக சிறுநீர் கழிக்க ஊறும் பின் அடை சுட்டு உண்ணப் படுக்கையில் நீர் இறங்கல் நிற்கும்.

பவுந்திரத்திற்கு.

எருள்ளி தும்பை வேர் வேளை யிலை
யெல்லாந் தட்டி யரைத்து கட்டந்நாளை
நீரும் பவுத்திரந்தானை பணிந்
தேத்து முளையறுத்துப் போகு மேற் கோளை

வரு

எருள்ளி, தும்பை வேர், வேளை இலை எல்லாம் தட்டி அரைத்துக் கட்ட பவுந்திரம் கால்கணை வணங்கி முளை யறுத்துக் கொண்டு உடைபட்டு ஓடும்.

மூலத்திற்குப் பூச்சு.

குதிரைக் குளம்பிணைச் சீவி யதிற்
குள்ளே மிளகு சுக்கு பலிந்துப்பு மேவி
சதுரப் பழச்சாற்றரை தூவி முளை
தன்னிற் பூசமுலமுஞ்சரிந் திடுமே தாவி

+ நவசா.

குதிரைக் குளம்பினைச் சீவி அதற்குள் மிளகு சுக்கு இந்துப்புக் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து தூவி மூல முளையிற் பூச மூலஞ் சரிந்து நீங்கும்.

இரத்த மூலத்திற்குத் தோசை.

எருக்கங் கிழங்கிரு பலமே; பின்னும்
மிளகும் புழுங்கலரி தொரு பலமே
பெருக்க உழுந்தரைப் பலமே மூன்றும்
பெயர்த்தே மாவாக்கிச் சுடுந் தோசை நலமே

நவ.

எருக்கங் கிழங்கு இரண்டு பலம் புழுங்கலரிசி ஒரு பலம் உழுந்து அரைப்பலம் மூன்றும் சேர்த்து மாவாக்கி சுடும் தோசை இரத்த மூலத்திற்கு நலமாம். புழுங்கல் அரிசி என்றுகூறியிருப்பினும் புழுங்கல் அரிசியே கொள்க..

நலமாயிரு வேளை தினமும் புண்ண
நாபியி லிரத்தம க்கினி மந்தமும்
நிலமா னதிமூலக் கடுப்பும் அருகல்
பிதிரக்காமல் பந்தம் நீக்கு மெவையும்

௫௮.

ஒன்றாக இரண்டு பொழுது நாள் தோறும் உண்ண உந்தியில் இரத்தம், அக்கினி, மந்தம் தொடராமல் அவற்றின் கொடுமையை நீக்கும்.

<u>முளை மூலத்திற்குக் கட்டு.</u>

கோவையிலை தனைக் கட்டி கம்பங்
கூழாக்கியே யுருட்டி நீரைக் கொட்டி
தேவை நாளொட்டுடன் செல்லக்கட்டி சோறும்.
சேர் பச்சிலை யிருநாள் கட்டவே கெட்டி

௫௯.

கோவை இலையை நன்கு தட்டி கம்பங்கூழாக்கியே உருட்டி நீர்கொட்டி தேவைப்படுகின்றபடி நாள்ச் செல்லக் கட்டி சோறும். இரண்டு நாள் பச்சிலையைக் கெட்டியாகக் கட்ட மூலமுளை நீங்கும்.

வெட்டைக்கு.

தேங்காய்ப் பால்புங்கன் வேர்தட்டி ரெண்டும்
சேர்த்துமே பால்பிழிந்த தின்வேறு திரட்டி
பாங்காயரைத்துக் கொள்ளுருட்டி மூனாள்
பாலில் போம் வெட்டை பயந்தோடும் கேட்டி

அய.

தேங்காய்ப்பால் புங்கன் வேர் தட்டி இரண்டும் சேர்த்துப்பால் பிழிந்ததின் வேர் திரட்டி நன்றாய் அரைத்து உருட்டி மூன்று நாள் பாலில் உட்கொள்ள வெட்டை நீங்கிப் போகும்.

மயக்க சூலைக்கு.

கள்ளிக் கொடுந்தார் பிழிந்து பூண்டிற்
கடு தைலம் விரகன் வகை கொண்டு பொசிந்து
கொள்ளும் காயம் விரகன் செறிந்து மூன்றும்
~~[illegible]~~ குழப்பிக் கொடும் பக்கச் சூலை போம் கழிந்து

அக.

கள்ளிக் கொடுந்து சார் பிழிந்து பூண்டில் காயம் செய்த தைலம் விராகன் கொண்டு மூன்றும் விராகன் சேர்த்துக் கொண்டு குழப்பிக் கொடுக்க பக்கசூலை கழிந்து போகும்.

மயக்க சூலைக்கு

கள்ளிக் கொழுந்து சார் பிழிந்து பூண்டிற்
கழு தைலம் விராகன் வகை கொண்டு பொழிந்து
கொள்ளுங் காயம் விராகன் செறிந்து மூன்றும்
குழப்பிக் கொடும் பக்கச் சூலை போம் கழிந்து

௩௧.

கள்ளிக் கொழுந்து சார் பிழிந்து பூண்டுத்
தைலம் வராகன் வகை கொண்டு வராகனடை
காயம் சேர்த்து மூன்றும் சேர்த்துக் குழப்பிக்
கொடுக்கப் பக்க சூலை நீங்கிப் போகும்.

பிலத்த பக்க சூலைக்கு.

பாறைப்பாற முள்ளித் தும்பையும் நொச்சியில்
பாவை நாற் பூ திப்பிலி காயம் மூன்றும்
சேரப்பா நல்வெல்லம் ஓமமும் யரை
தேயைந்து நாள் கொள்ளப் படும் ஆமிலமும்

௩௨.

முள்ளி, தும்பை, நொச்சியும். பாவை. நாற்பூ
திப்பிலி காயம் மூன்றும் நல்ல வெல்லம் ஓமம்
ஆகியவற்றை அரைத்து ஐந்துநாள்க் கொள்ள
பலத்த பக்க சூலை நீங்கும்.

சீரா அரையாப்புக் கட்டிக்குப் பத்து.

குருவித் தேங்காய் அரைக்கால் எட்டி : விதை
கூட்டரைப் பலம் புளித்தயிர் வடி கட்டி
மருவியரைத்து மேலொட்டி பூச
மாறு மூனாளிற் போம் மரையாப்பு நெட்டி

சுப.

குற்றிய தேங்காய் அரைக் காற் பலம், புளித்த தயிர் வடி கட்டி அரைப்பலம் நன்கு அரைத்து மேற் பூச்சுப் பூச மூன்று நாளில் அரையாப்பு நீங்கிடும்.

அசீரணக் கழிச்சலுக்கு.

கருங் கம்பளியைக் கருக்கி படி
காயிள நீர் தண்ணீர் வார்த்தே நிறைக்கி
கருப் புட்டியோர் பலம் நருக்கி போட்டு
காய்ச்சி யாழாக்காய் வடித்துண்ணும் படிக்கு

அசு.

கருப்புக் கம்பளியைக் கருக்கி ஒருபடி இளநீர்த் தண்ணீரை விட்டு கருப்புக்கட்டி ஒருபலம் நருக்கிப் போட்டு காய்ச்சி அழாக்காக வடித்துக் கொண்டு உண்ணுக.

குழக்கில சீரண மாறும் சூலை
குன்மம் நீர்கட்டு நீர்சு சுருக்குமே நீரும்
நமக்கு நீர் கல்லடைப்பும் தூரும் மந்தம்
நாடாது நீர் குளிர்ந் திறங்கிடும் பாரும்.

சுரு.

அதனை உண்ணச் சீரணமாகும், சூலை, குன்மம், நீர்க்கட்டு, நீர்சுருக்கம் நீங்கும், நீர்க்கட்டு, கல்லடைப், மந்தம் வாராது நீர் குளிர்ந்து இறங்கும்.

<u>மேக சூலைக்கு அடை</u>:

பச்சை வெள்ளறுகு இரண்டும் பலம்
பழம் புழுங்கலரிசிப் பலம் கொண்டு
செரச் சமாய் அரைத்ததை விண்டு : அடை
சுட்டு வெந்நீர் கண்டல நாமமே போதுண்டு

அசு.

பச்சை வெள்ளறுகு பலம் இரண்டும் பழம் புழுங்கலரிசி பலம் ஆகிய இரண்டையும் சேருமாறு நன்கரைத்துக் கலந்து அடை சுட்டு வெந்நீர் கொள்ள மேகசூலை நீங்கிப் போகும்.

உண்டபின் சாமத்தில் சூதம் கொள்ள
உண்ணரை மண்டலமிரு நேர விதம்
கண்டால நாரவேளை தோதம் தின்ன
கடுமே பத்தியம் கொள் மேகசூலை போங்காதம் ௬௭.

மேற்படி அடையுண்டபின்னர் சாமத்தில் சூதங் கொண்டு இருபது நாள் என்னும் அரைமண்டலம் ~~[illegible]~~ இருவேளையும் உட்கொண்டு கடிய பத்தியம் காத்திட மேக சூலை காததூரம் போகும்.

இரத்தக் கழிச்சலுக்கு.

பாச்சலைக் கொம்புத் தூள் சீவி அரை
பணவிடை ஆப் பாலுழக்கதனில் தூவி
நேர் காய்ச்சிப் படிச்சார் விட்டாவி யுண்ண
நிலையிரத்தக் கழிச்சல் மாறு மேவி ௬௮.

வெள்ளை நிறக் கலைக் கொம்பின் தூள் சீவி அரைப்பண எடை உழக்குப் பசுவின்பாலில் தூவி நன்கு காய்ச்சி எலுமிச்சம் பழச் சார் விட்டு ஆவியுடன் கொள்ள நிலையாகச் செல்லும் இரத்தக்கழிச்சல் மாறுமே.

அசீரணக்கிற்கு

முருங்கைப் பட்டை வெள்ளுள்ளியுமே சுக்கு
ஓமம் கத்தாழை வகைகரைப் பலமே
ஒருபடி நீர்சட்டி யிலுமே வார்த்து
ஓது மருந்தைக் காச்சாழாக் காகவுமே

முருங்கைப் பட்டை, வெள்ளுள்ளி, சுக்கு, ஓமம், கத்தாழை வகைக்கு அரைப்பலம் எடுத்துக் கொண்டு ஒருபடி நீர் சட்டியில் வார்த்துக் கொண்டு சொல்லப் பெற்ற மருந்தைக் கொட்டி ஆழாக் காகக் காச்சிக் கொண்டு

ஆழாக்கிற் கடுகு மேன்பொடிக்கி மிள
கதுகாளின்தூள் வகைக் கிருந்து யிடைக்கு
கூடாயிற் றூடாவி யுண்ணடைக்கு தின்று
குணம் சீரணம் மலபந்தம் போம் பரக்கு
நய.

அதில் கடுகு மேம்பொடி மிளகின்தூள் வகைக்கு உழுந்தின் எடைக்குத் தூவியுண் ணடை தின்று குணம் பெறவும் சீரணம் மலபந்தம் நீங்கியும் நன்மையுண்டாம்.

பரியாயப் படலம்.

புளியிலைச் சார் பழுக்கால் பின்பூ
பொரி செருமைப் பாலினுள் கொஞ் மெக்கால்
துளிகை வேண்டுமோ மற் றொருக்கால் யதில்
துணைமாகும் விந்தைதனைக் குறித்தேன் பெருக்கால் க.

புளியிலைச்சார் பழுக்கால் பொங்குகின்ற எருமைப்பால் கார்பழயும், கை வேண்டுமோ? மற்றொருகால்? இதில் ணைமாகும் இவ் ஊர்ணதை உணர்ச்சிப் பெருக்கால்க் குறித் தேன்.

அரோசிகம் வெள் ஓக்காளத்திற்கு.

பஞ்சதாரை நாவு மதுரம் ஏலம்
பகர் மூன்று திப்பிலி பிஞ்சி ரெண்டுதாம்
அஞ்சும் கழஞ்சு சேர் அதுரம் பொழத்
தவை ஆப்பாலி லுண்ண ணரோசகம் விதுரம் உ.

பஞ்சதாரை நாவு கழஞ்சு, மதுரம், ஏலம் மூன்று கழஞ்சு, திப்பிலி, இஞ்சி இரண்டு கழஞ்சும் ஐந்தும் பொழத்து பசுவின்பாலில் உண்ண அரோசகம் நீங்கும்.

✓

ஆறு வெள்ளைக் கான நடுக்கல் தலை
யது சுற்றல் பித்த நாற்பதுவு முடுக்கல்
மீறுமுதற வெடுக்கில் யாவும்.
மிகு வினைக்கல் மயக்கம் விடும் தொடுக்கல்

ஆறுவகைப் பெற்ற வெள்ளைக் கான நடுக்கல், தலை சுத்தல், பித்தம் நாற்பதும், வயிற்றுப் போக்குத்தோன்றுதல், மயக்கம் இவையாவும் நீங்கும்.

<u>வயிறு இரைச்சல் நாக்கி வலிக்கி.</u>

இண்டாங் கொடிந்தின் விழுது; எலு
மிச்சன் விதம் வெல்லத்திற் பாதியுடுது
கொண்டு நல்லெண்ணெயிற் தொடுது பினை
கொண்ணுந்தின முமரைத்துண் பொழுது

இண்டங் கொடிந்தன் விழுது, எலுமிச்சம் பழம், வெல்லம், நல்லெண்ணெய் விட்டுதினம் (நாள்தோறும்) அரைத்து உண்ணும் பொழுது

தின்னிட வயிற் றிரைச்சலுமே வாய்வு
தீரும் வலி யேகு கம்பத்தியத்திலுமே
நன்னுங்கைப் பூ புளிப்பிலுமே நன்கு
நடமாடா திருவேளை வெந்நீர் மூழ்கலுமே

வயிற்றிரைச்சல், வாய்வு, வலியாவும் நீங்கும் உப்பு, புளிப்பு நீக்கிக் கம்பத்தியம் காத்து நடமாடாது இரண்டு வேளையும் வெந்நீர் முழுகி வரவேண்டும். நோய் நீங்கி நலமாகும்.

வயிற் வலிக்கு.

எலுமிச் சங்காய் கிங்கிணிவாய் கொண்டு
இயல்பா யறிந்து நிறைய ஓமமாய்
வறுவாய் அருந்து நாறத்திட மாயீ
வாட்டும் கும்பியில் ஏத்து ஏகும் பதமாய்

சா.

எலுமிச்சங்காய் வாய் கீறிக் கொண்டு இயல்பாக ஓமம் வறுவாய்ப் பொடிசெய்து சிறிதே வறுத்து வாய் நிறைத்து பதமாய் அடைத்து

வெந்த பின் அம்மியில் வைத்து தயிர்
விட்டு அரைத்துக் கொடுக்க விசைத்து
தொங்கு வயிறு வலி துலைந்து விடும்
தொல் புவியினர் அருக்கென விரைந்து.

வெந்த பின்னர் அம்மியில் வைத்து தயிர் விட்டு அரைத்து கொடுக்க தொங்க வயிற்று வலி இவ் உலகை விட்டு நீங்கிப் போகும்

<u>அதிசார இரத்த கிராணிக்கு.</u>

விளாம் பிசினியைப் பொடியாய் செய்து
வேண்டு அதில் சரி நெற்பொரி பொடியாய்
வளமாய்க் கூட்டி அரைத்து பொடியாய் தேனில்
வாகாய்க் குழப்பி மகிழ வாயுள் கொடியாய்.
அ.

விளாம் பிசினைப் பொடியாய்ச் செய்து அதில் சரிபாதி நெற்பொரி பொடியாய் வளமாய்க் கூட்டி அரைத்து பொடியாய் தேனில் நன்கு குழப்பிக் கொடுக்க அதிசார இரத்த கிராணி நீங்கும்.

குடிக் கெலுமிச்சங் காய் விதம் யிதை
கொண்டிரு நேரமும் மங் கூடா துண்ணிடம்
துடி யிரத்தக் கிராணி சிதம் யாவும்
துலையுமங் கருப்பூ அகோரா சிகா நிதம்.

எலுமிச்சங் காயளவு இதை இரண்டு நேரமும் கூடாமல் உண்ண துடக்க வைக்கும் இரத்தக் கிராணி சீதம் யாவும் தொலையும். கருப்பு அகோராசிகம் நீங்கும்.

இரத்த சீதம் விடுதலுக்கு.

அழிஞ்சி வேர்ப் பட்டையைக் காய வைத்து
அதை வெந் நீரில் அரைத்துக் குடநேய
விடு நாகப் பூச்சியும் சாயக் கிழே
விண் மறைவ்கி விரைவினில் லொழிந் தோய
ய.

அழிஞ்சி வேர்ப் பட்டையைக் காய வைத்து அதை வெந்நீரில் அரைத்துக்கொடுக்க நாகப் பூச்சியும் கீழே விழுந்து உரையினில் இரத்த சீதம் நீங்கும்.

இருவாய்க் கட்டுக்கு.

துருசிப் பட்டையை யிடித்து நன்குச்
சூரணித்து வெந்நீரில் பிசைந்து
இருந்தே நாளிரண்டு குடித்து விட
ஏகும் மல சலம் இயல் பாய் நடந்து
௰௧.

துஞ்சிப் பட்டையை இடித்து நன்கு சூரணம் செய்து வெந்நீரில் பிசைந்து இருந்து நாளிரெண்டும் குடித்திட மலசலம் இயல்பாய் கழியும்.

கணைக் கழிச்சலுக்கு.

மாதுளம் பிஞ்சுடன் தென்னம் பிஞ்சு
மாயிலைக் கொழுந்து மூன்று மரைத் தின்னம்
ஆதரவாய்ப் பிள்ளைக் கன்னம் ஊட்ட
விலகும் கழிச்சல் கணைமாந்த முன்னம்.
௰௨

மாதுளம் பிஞ்சு, தென்னம் பிஞ்சு, மாயிலை கொழுந்து ஆகிய மூன்றும் அரைத்து உணவோடு (மு) பிள்ளைக்குக் கொடுக்க கழிச்சல் கணை மாந்தம் (ம்) விலகியோடும்.

✓

சீத பேதிக்கு

கல்யாண முருங்கைப் பட்டை தனைக் கொய்து
கன்னிடையன் தயிரில் இழைப் பதனை
சலியா மூவேளை யுண்ணத்தனை யது
தப்பாது தீர்க்கும் ஒப்பாகச் சென்றதனை.

கல்யாண முருங்கப் பட்டை தனைச் சூரணித்து தயிரில் இழைப்பி மூன்று வேளை உண்ண சீத பேதியைத் தவறாது தீர்க்கும்.

குழந்தை மலசலக் கட்டுக்கு அடை

இலைக் கள்ளி வேர்ப் பட்டை ஐந்து பலம்
இதில் கடுக்காய் சுக்கு மிளகுள்ளி பிசைந்து
நிலைக்க வரைத் தடை யிசைந்து சுட்டு
நின் செய்க இடப்போம் மலசல மொழிந்து

இலைக்கள்ளி வேர்ப் பட்டை ஐந்து பலம், கடுக்காய், சுக்கு, மிளகு, உள்ளி ஆகியவை பிசைந்து நன்கரைத்து சட்டியிலிட்டுச் சுட்டு பிள்ளைக்கு கொடுக்க மலசலம் நீங்கும்.

தேக குளிர்ச்சிக்கு.

பேதனா காற்பல நீரில் போட்டு
பிரியமாய் சத்து பிலக்கவே ஊரில்
கோதாய்ச் சிலுப்பியே தேரில் யது
தொட்டாற் பிசினிபோ லாகுமே நேரில்
யகு.

பேதனா காற்பலம் எடுத்துக் கொண்டு நீரில் போட்டு சத்து இறங்குமாறு ஊறவைத்து கோதுவாகக் கடைந்து தொட்டால் பிசின்போலாகும்.

நேரக்கற் கண்டைப் பொடித்துச் சேர்த்து
நிறையாயதனைத் துணியில் வடித்து
சீரப் ஓர் மண்டலம் குடித்துவரத்
தினமும் தேகம் குளிர்ச்சியாக முடித்து
யசா.

சரியளவு கற்கண்டைப் பொடித்துச் சேர்த்து துணியில் வடிகட்டி சீராக ஒருமண்டலம் குடித்துவரத் தினமும் தேகம் குளிர்ச்சியாக இருக்கும்.

நடுக்கல் சதிகாதடைப்பு பேய்
நாய் நரி கரி சொறி இரணம் தழப்பு
இருக்கும் பலவீன பிழைப்பு தாது
அரிய விருத்தி முகந்தே சில் பழப்பு
௱௭.

நடுக்கல், சதி, காதடைப்பு, பேய், நாய், நரி கரி, சொறி, இரணம், தழப்பு பலவீனம், பிழைப்பு, (ஈனவிருத்தி?) தாது விரிய விருத்தி முகந்தேசல் உண்டாகும்.

<u>சகல வாதத்திற்கும்.</u>

பச்சைத் துவரை துணிந்து அதைப்
பழ சாற்றில் முன்னை வேர் பாங்கா யரைத்து
சொச்சமாய்க் கரைத்துக் குழந்து வரச்
சொல்லா தேகும் வாத மில்லா தேசிறந்து
௱௮.

பச்சைத் துவரை இலை பறித்து சார் பிழிந்து பழ சாற்றில் துவரைவேர் பக்குவமாக அரைத்து நன்கு கரைத்துக் குழைந்துவரச் சொல்லாமல் நில்லாமல் ஓடும் வாதம்.

✓

ஊப்புருதிக்கு.

சித்தா மணக்குப்பூ உப்பு மஞ்சள்
திகழிருள்ளி யரைத் தெகிக் கின்பாலொப்பு
வைத்தும் குப்பியில் புதைப்பு வெந்தால்
மகிழ்வா யுண்ண ஊப்புருதி போமுரைப்பு
யசு.

சித்தாமணக்குப்பூ, உப்பு, மஞ்சள்
ஈருள்ளி இவ்வடைக்கு சம அளவு எள்ளின்பால் சேர்த்துக் குப்பியில் வைத்து புதைத்தால் வெந்துவிடும் அதனை மகிழ்வாய் உண்ண ஊப்புருதி நோய் நீங்கும்.

ஊல்லைக்கட்டி நோய

கருணைக் கிழங்கை கோணியில் தேய்த்து
கறைபடாமே தோல் போக்கி கிழங்கு தெருக்கில்
இரு கொய்யா படை வாழைப் பழத்தில் — வைத்து.
தின்று மண்ணாக்கில் நீண்டமல் இருக்கில்
உய.

கருணைக் கிழங்கைக் கோணியால் தேய்த்து
கறைபடாமல் தோல் போக்கி இருகொய்யாவடை
வாழைப் பழத்தில் வைத்து அண்ணாக்கில் படாமல்
தின்றால் வல்லைக் கட்டி நோயும்.

✓

விருங்கில் வில்லைக் கட்டிய கரையும் — பல
விதமாக மூலக் கடுப்புந் திரையும்
செருங் கமலத் தோணா யுரையும் — யாவும்
திடமாய் குறியறியச் செய்ய கரையும்

உக.

அவ்வாறு விருங்கும் பொழுது வல்லைக் கட்டிய கரையும். பலவிதமான மூலக் கடுப்பும் நீங்கும், செழுப்பான கமலமலரின் உரையும் திடமாக உரையும். யாவும் முறையாக குறி அறிந்து செய்யக் கரையும்.

மேக கற்பம்.

கத்தாழை மடல் சோற்றை வாங்கி நீரில்
கழுவிச் சமன் சர்க்கரையினில் தாக்கி
பதா பதிகாலை போஙம் இடக் ஆடி
படர் மேக நீர் சுருக்கப் படு நீங்கி

உஉ

கத்தாழை மடல்ச் சோற்றை வாங்கி நீரில் கழுவி சம அளவு சர்க்கரை ~~[illegible]~~ கூட்டி போகும் அதிகாலை உட்கொ்ளும் மேகநீர் சுருக்கு ~~[illegible]~~ போகும்.

நீங்காக் கல்லடைப்பூ வகாரமும் சூலை
நிகர் தாது புஷ்டிவிரிய விர்த்தி நிறமும்
வாங்கும் வாய்வு ஆகாரமும் இடுப்பு
வலி தீரும் கூண்டோடே வாட்டுஞ் சுரமும்
உ௰.

கல்லடைப்பு, வகாரச்சூலை, ~~[illegible]~~ம் தாது விர்த்தியும் உண்டாகும், வாங்கும் வாய்வு நீங்கும். ஆகாரம் மிக உண்ணப் பசிக்கும். இடுப்பு வலி நீக்கும். வாட்டுகின்ற சுரம் கூண்டோடே நீங்கும்.

மேகரோகத்திற்கு.

தேங்காய்ப் பாலிற் குறிக்சிவேர் தன்னை
தினமத்தித் துண்ணு மூன்று நாளினிற் பார
வாங்கா மேகம் வாங்கிடும் வார் பகின்
அகையறி வோர்க்கு நன்மார்க்க மிதென் பார்.
உ௧.

தேங்காய்ப்பாலில் சிறுகுறிஞ்சிவேரினை மத்தித்து மூன்று நாள் உண்ண இதுவரை துயரம் கொடுத்து வந்த மேக நோய் நீங்கும். மேகரோகத்திற்கு பலவகை மருந்துகள் அறிந்தோர் அம்மருந்துகளில் இது மிகச் சிறந்ததென்று கூறுவர்.

✓

தேகம் பெருக்க.

கவு தும்பை வேர் நொச்சி வேரும் - பலம்
கணக் கிருபா நாணங்கா பலவித்தேரும் - தினம்
தவமாய் மண்டலங் கொண்டு நீரு
நங்கையா காது கரண்டி யுண் வாரு

உரு.

கவுதும்பை வேர், நொச்சி வேர் வகைக்கு ஒரு பலமும் நாணங்கா, பல வகை விதைகள் தினம் முறையாக நாற்பது நாள் ~~நா~~ நாள் தோறும் ஒரு கரண்டியளவு உண்டு வரத் தேகம் பெருக்கும். பெண் போகம் நீக்குதல் இதற்கான பத்தியமாகும்.

கபரோகம்.

கடுக்காவிதை கன்னிப் பொடியே செய்து
கையான் சாற்றில் சேர்த்து கலக்கியிடையே
தொடுத்து குடி காலைக் கடையே கபம்.
தொலையும் மண்டலங் கொள் மாறிப் படியே

உசு.

கடுக்காய் விதை கொண்டு வந்து பொடி செய்து கரிசலாங்கண்ணிச் சாற்றில் சேர்த்து காய்ச்சிக் காய்ச்சி கலக்கி அதிகாலை ~~[illegible]~~ மண்டலமென்னும் நாற்பது நாட்கு குடிக்க கபம் தொலைந்து விடும்.

தலை வலிக்குப் பத்து.

அரத்தை சதகுப்பை சுக்கு நொச்சி
அச்சத்தில் உரைத்துக் காய்ச்சி நெற்றிக்கு
சரசமாய்ப் பூசும் தலை வலிக்கு காச்சல்
தலைப் பணுவு நீரேற்றந் தீரும் சுருக்கில்

௨௭.

அரத்தை, சதகுப்பை, சுக்கு, நொச்சிச் சாரத்தில் உரைத்துக் காய்ச்சி நெற்றியில் சரமாய்ப் பூசும் தலை வலி, காய்ச்சல், தலைக்கனம், நீரேற்றம் சுருவாய்த் தீரும்.

உட்காய்ச் சலுக்கு.

பேயன் வாழைப் பழத்தோலை போக்கி
பின்னும் சர்க்கரை சீரகம் சேர்மேலை
நேயமாய்ப் பிசைந்தே யுண் காலைதோறும்
நிலைக் காது உட்காய்ச்சல் நீங்கிடும் வாலை

௨௮.

பேயன் வாழைப் பழத்தோலைப் போக்கி பின்னும் சர்க்கரை சீரகம் சேர்த்துப் பிசைந்து நாள்தோறும் காலையிலுண்ண உட்காய்ச்சல் நிலைக்காது நீங்கிடும்.

மேக வெள்ளைக்கு.

புளியங் கொட்டைத் தோல் வெண்குன்றிப் பருப்பு
போடத் திப்பால் மேதை வெண்ணெயுஞ் சமனி
வெளியாயுண் ணேர் கழஞ்சன்றி வெள்ளை
மேக மறும் கதிச்சல் தீரும் நன்றி.

புளியங் கொட்டைத் தோல், வெண்குன்றிப் பருப்பு, அத்திப்பால், எருமை வெண்ணெய், சமன் கழஞ்ச கூட்டி உண்ண வெள்ளை மேகம் நீங்கும், கடிச்சல் நீங்கும்.

சூலைக்கு.

சங்கன் வேர் விழுது புன்னைக்காய் வீதம்
தனிக் காடியினில் மண்டலமும் கொள்ளாய்
தங்காது சூலையு மில்லா பத்திய
தனிக்கா வெள்ளாட்டு முலியில் உண்ணல்லாய்
நேய.

நற்குணவதியே! சங்கன் வேர் விழுது புன்னைக்காய் வீதம் தனிக் காடியில் நாற்பது நாட்கள் கொள்ள சூலை தங்காது நீங்கிப் போகும். பத்தியமாகக் கொள்ள வேண்டும். வெள்ளாட்டு பாலில் உண்ணச் சிறப்பாக சூலை நோய் நீங்கும்.

விரைப்புருதிக்கு

தண்ணீர் முட்டான் கிழங்கின்றோல் போக்கிச்
சதுர் பலங்கம் பூமாவரைப் படிய தனால்
உண்ணீர் கலிக்கிண்டார் தீயல் சந்தி
உயர் கற்கண்டு பசுநெய் மூணாள் வையால்

தண்ணீர் விட்டான் கிழங்கு மேல் தோல் போக்கி நான்கு பலம் எடுத்துக் கொண்டு கம்மம்புல் மாவு அரைப் படி எடுத்துக் கொண்டு இரண்டையும் கலக்கிண்டி கற்கண்டும் பசுநெய்யும் சேர்த்துக் கிண்டி மூன்று நாள் காலை மாலை பத்தியமாகவும்

மறு பத்தியம் மூணாளை வைப்பு வெந்நீர்.
வார்ன்னம் தலைக்கேடு நாள் முழுகச் செய்யும்
குறுகும் விப்புருதி இன்னியும் பாடு
கொடு மிச்சாரும் தவிப்பாக மேய்யும்

மறு பத்தியம் மேலும் மூன்று நாள் காத்து வெந்நீர் வார்த்து தலைக்கு ஏழு நாள் முழுகச் செய்ய விப்புருதி இறையும் சன்னியும் போவதோடு இங்கிடம்.

உப்பிய வரையாப்புந் தீரும் இதில்
உள்ள அப்புருதி இலைந் தோடும் பாரும்
பய்யவே வெள்வாயும் பேரும் சூட்சுமம்
பரிவாய் மேகச் சகலகட்டி தேரும்.

௫௫.

அரையாப்பு நீங்கும் அப்புருதி இலைந்தோடும் வெள்வாய் பேர்ந்தோடும் சூட்சுமம் அறிந்துகொள் மேகம் சகல கட்டிகளும் நீங்கும்.

பல்லுக்குப் பொடி

அரக்குத் துவிசு மாசிக்காய் சீன
மல்லிடைக்கு வோர் விராகனிடைக் காய்
அரப் பொடி கடுக்காய் தான்றிக்காய் வகைக்
கதற்கு விராகனிடை மூன்று சேர்க்காய்

௫௬.

அரக்கு, துவிசு, மாசிக்காய், சீனம் கல் இடைக்கு ஓர் விராகன் காய், அரப்பொடி, கடுக்காய், தான்றிக்காய் வகைக்கு மூன்று விராகன் எடை சேர்த்து

சேர்த்துப் பழரசம் விட்டு காய்ச்சு
செய்து பொடித்துத் தேயும் பல்லுக்கு இட்டு
வேர்த்துப் புழுச் சாகும் கெட்டுக் குத்தல்.
விரண மசைவு ரத்தம் தீரும் பட்டு

வரு.

பழரசம் விட்டுக் காய்ச்சிப் பொடி
செய்து பல்லுக்குத் தேய்க்கப் புழுச் சாகும்.
கெட்டுக் குத்தும் விரணம் அசைவு ரத்தம் நீங்கும்.

பயித்திய வெறிக்கு.

செருப்படை வில்லை யாய்க் கருக்கி யதில்
சேரு மயிலிறகுச் சாம்பர் பெருக்கி
வறுத்தச் சீரகத் தூள் அரக்கில் மூன்றும்
ஆகாய் இழைத்துக் கொடும் பின்னிறக்கி.

வசா.

செருப்படை வில்லையாய்க் கருக்கி அதில்
மயிலிறகுச் சாம்பல் கூட்டி, வறுத்த சீரகத்
தூள் சேர்த்து மூன்றையும் ஒன்றாக மாறுகலந்து
கொடுக்க பயித்திய வெறி நீங்கும்.

சிறுகீரை வேர் நரிப்பயத்தன் வேரும்
சிறக்க நன்னாரி வேர் நிலவிளா வேரும்
குறு வாழைச் சருகு நாயுருவி வேரும்
கூரகத்தி ரெண்டும் செம் பருத்தியிலையாரும்

௯௭.

சிறுகீரை வேர், நரிப் பயத்தன் வேர், நன்னாரிவேர் குன்ன வாழையின் சருகு, நாயுருவி வேர், நிலவிளாவேர் சிற்றகத்திவேர், பேரகத்திவேர், செம்பருத்தி இலை,

தலை மிளகு கியாழஞ் செய்து - ஊன்றக்
கேத்து மீறினல் மண்டை கீறி றைந்து
எலுமிச்சம் பழச்சாற்றைப் பெய்து - தேய்த்து
பிறு நூறு குட நீரை தலைக்கு வார் செய்து

௯௮.

வால்மிளகுக் கியாழஞ் செய்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். மேலும் மீறினால் மண்டையைக் கீறி எலுமிச்சம் பழச் சாற்றை பெய்து தேய்த்து இருநூறு குட நீரைத் தலைக்கு ஊற்றப் பயித்திய வெறி நீங்கும்.

வாந்தி பேதிக்கு.

வீரம் பூரம் லிங்கம் சூதம் கெந்தி
மரிதாரம் இங்கிலி ரசசெந்தூர வீசம்
தாரம் காந்தம் வகைக் கோழும் ஒன்று
சாம்பிராணிச் சூடன் அபினி யவ்வீதம்
வகை.

வீரம், பூரம், லிங்கம், ரசம், கெந்தகம் அரிதாரம், இங்கி, ரசசெந்தூரம், தாரம், காந்தம் வகைக்குச் சொல்லப்பெற்ற கழஞ்சு ~~ஒன்று~~ ஒன்று சாம்பிராணி, சூடன், அபினி வகைக்குக் கழஞ்சு ~~ஒன்று~~ அரைப்பலம்

வகைக் கரைப் பலம் கல்வத்திட்டு ஆட்டி
மையான பின் பரணியில் வை தொட்டு
பாகத்திற் சத்தி பூசை யிட்டு கியாழத்
திடும் பயறள வேயுண் கொடுக்கவே நெட்டு
சுய.

இவைகளைக் கல்வத்திலிட்டு ஆட்டி மையான பின் பரணியில் வைத்து பாகமான பின்னர் சத்தி பூசையிட்டு கியாழத்திடும் அது பயறளவு உட்கொள்ள வாந்தி பேதி நீங்கும்.

பரணி- அடுப்பு.

எரி பேதிக்கு.

வெள்ளை யுப்பு ரண்டு பலமே தூளி
விட்டதிலோர் பாய்ண்டு பிராந்தியின் நலமே.
துள்ளக் குலுக்கி வாய்பலமே கார்க்கு
கொடுத்துச் சீலை செய்துவை பெட்டியின் நலமே.

௫௧.

வெள்ளை உப்பு இரண்டு பலம் குப்பியில் விட்டு அதில் ஓர் பாயிண்டு பிராந்தி சேர்த்து துள்ளக் குலுக்கி வாய் பலமாகக் கார்க்கு கொண்டு மூடி அதைச் சுற்றி சீலை மண் செய்து வைக்கவும்.

நலந்திருக்க விட்டால் வாந்தி பேதி
தாய்சாதி கண்டிடி நற்குக்கும் பிராந்தி
பிலிக்கா தினம் சுரண்டியிற் சாந்தியாகி
பின்பிற்கு தாழ்நோய்ப் பிணி தோடும் நீங்கி

௫௨.

பெட்டியில் நலமாக இக்குப்பி இருக்க

விட்டால் வாந்தி பேதி தங்காது. வாந்திபேதி கண்டுள்ள தாய்க்கு ஒரு கரண்டியில் சாந்தியாகும் பின்பு தாழ்பட்ட பாடுபிரிந்து நீங்கி விடும்.

நிஷ்டத்திற்கு.

சிகடிக் கொட்டை கொப்பரைத் தேங்காய்
திகழ என்று மூன்றும் சரிபாகம் கொள்ளின்
வெகுவாய் வேளைக்கு விருகனின் எடை
வேண்டி நாளுக்கு நாளதிகமே கொள்ளின்

சிகடிக் கொட்டை, கொப்பரைத் தேங்காய் ஆறு என்று மூன்றும் சரிபாகம் கொள்ளவும். ஒரு வேளைக்கு விராகனெடைக்கு அதிகமாகக் கொள்ளவும்

கொள்ள நாற்பது நாள் தன்னில் மேகம்
குட்டம் வெடிப்பூக் கட்டிவகைச் சிரங்கில்
தள்ளச் சிவப்பூக் கருப்பில் வெள்ளை
தலையும் பெருவியாதி ஆகச்ச முறையில்

இவ்வாறு நாற்பது நாளில் மேகம், குட்டம் சுசு வெடிப்பு, கட்டி வகைகள் சிரங்கு சிவப்புக் கருப்பில் வெள்ளை தொலைந்திடும் பெருவியாதி நீங்கும் சுகச்ச முறைத்தால் இதுவே சிறப்பானதாகும்.

✓

வைத்தியத்திற்கு

இரச கற்பூரம் விருகனிரெண்டு யதை
நமணியமாயிப் பொடித்து வோட்டில் விண்டு
வசமாய நால் பழச்சாத்தில் கண்டு தீயில்
வைத்து மெழுகு பதத்திற் சேர் கண்டு
௬௫.

இரசகற்பூரம் விராகன் இரண்டு எடுத்து நன்கு பொடி செய்து நான்கு எலுமிச்சம்பழம் எடுத்துப் பிழிந்து அச்சாற்றில் ஊறவைத்து தீயில் வைத்து மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்க

பதத்தில் இறக்கிக் கல்வத்தில் வைத்து
பாங்காய மயணம் போல் பரணியில் வைக்கில்
தேகம் குன்றி யாறுநாள் ஈங்கில் சாங்கில்
நோய் தீர்ந்து கொள் பத்தியம் புதுக்கில்
௬௬.

மெழுகு பதத்தில் உள்ள அதை கல்வத்தில் வைத்து நன்கு அரைத்து குப்பியில் வைத்து நாள் தோறும் அந்திசந்தி. குன்றியளவு ஆறு நாள் உண்ணுக. பத்தியம் புதுமையாக

சீயக்கா இலையின் புளிப்பு வேரும்
சிறந்த எலுமிச்சங் காயின் புளிப்பும்
நேய உப்புங் கூட்ட செப்பூஅது
நிலைக்கா தெங்கும் பைத்தியம் விடுப்பு.

அன.

சீயக்கா இலையின் புளிப்பு வேரும், சிறந்த எலுமிச்சங்காயின் புளிப்பும், உப்பும் கூட்ட சொல்லப் பெற்ற பைத்தியம் நிலைக் காது விலகி நீங்கும்.

சுணாடம் வயிறுக்கு.

அன முருக்கி. விதை நாலு சாணில்.
வைத்து ராத்திரி காலை யெடுத்தேது
கண முளை யிலை பிளந்தாலும் யதை
கருவி கஞ்சு போக்கி யரைத் தெடுமேலு

அஅ.

காட்டு முருங்கை விதை நான்கு சாணியில் வைத்து இரவு முழுவதும் பொதிந்திருக்க காலையில் எடுத்துப் பார்க்க கணத்தமுளை யிலை பிளந்திரும் அதைக் கழிவி கஞ்சு போக்கி யரைத்து எடுத்து

மேலாய்ப் பனை வெல்லம் கொடுத்து பின்னை
மேவு மருந் துருண்டை யுள்ளக் கொளுங் கொடுத்து
சேலாய்க் கின முண்ணும் மருந்து புருசு
சேரு தூணும் வயர் கரையும் விருந்து

ருசு

அதன் மேலாய்ப் பனை வெல்லம் கொடுத்து மருந்து உருண்டையினை உட்கொள்க. பின்னர் புருசு சேர்த்து உண்ண வயிர் கரையுமே.

<u>முதுகு நோவிற்கு.</u>

கலைக் கொம்பு சுட்டுப் பொடியும், செய்து
காராவின் நெய் பாலிற் கூட்டிக் குடியும்.
இலை நோய் முதுகு மார்பையும் கண்டம்
பிடித்து வைப்பது நேரில் செல்வதையும்.

ருய.

கலைமான் கொம்பு சுட்டுப் பொடி செய்து பசுவின் பாலில், நெய்யில் கலந்து குடிக்க இளைத்த முதுகு மார்பு கடுத்து வலி நீங்கிப் போகும்.

பற்படலம் நாகப் பூச்சிக்கு.

அழிஞ்சி வேர்ப் பட்டையைப் பொடித்து வைத்து
அன்பாய் வெந்நீரில் அரைத்துக் குடித்து
விருவது போல் நாகப் பூச் செருத்து விட
விளம்பினேன் யாவும் விரைவில் விருத்து
ருக.

அழிஞ்சி வேர்ப் பட்டையைப் பொடி செய்து வெந்நீரில் நன்கு அரைத்துக் குடிக்க நாகப் பூச்சி உயிர் நீங்கி வெளிப்படும். நாகப் பூச்சி ஒழிவதற்கு இது சிறந்த மருந்தாகும்.

இளைத்த உடம்பு பெருக்க.

கிரும் பொன்று சிறு நாவற் பூ ரெண்டு
ஏலம் நால் மிளகு கெண் திப்பிலி தூவ
யீரெண் சுக்கு நாலெட்டு யாவும். அமுக்
கிறுக் கிழங் கறுபானவ் காகவே மேவு உ.

கிராம்பு ஒரு பங்கும் சிறு நாவற் பூ இரண்டு பங்கும், ஏலம் நான்கு பங்கும், மிளகு எட்டுப் பங்கும் திப்பிலிப் பொடி பதினாறு பங்கும் சுக்குப் பொடி முப்பத்திரண்டு பங்கும் அமுக்கிராக் கிழங்கு அறுபத்தி நான்கு பங்கும்

இவை ஆரணித்துச் சர்க்கரையுள் சரி
யே தேனில் கொள்ள சுவாசகா சங்கள்
கவரும் ஊயங்கள் புள்ளே
காச்சல் சந்நிசுரம் பிரமிய முஷ்ணங்கள்

ஆகிய இவற்றைச் சூரணம் செய்து சர்க்கரை அல்லது தேனிற் கொள்ள சுவாச காசம் நீக்கும் உயிர் கவரும் ஊயங்கள் உடம் காய்ச்சல் சந்தி சுரம் பிரமியம் உஷ்ணங்கள் நீங்கும்.

இளைத்த உடம்பு பருக்கும் நனிக்
கிருக்கும் தாதுபுஷ்டி வீரியம் முருக்கும்
உளைத்த மார்நோவு விருக்கும் பிதில்
உள்ளபடி செய்ய யாவும் தொருக்கும்.

மெலிந்த உடல் மெலிவு நீங்கிப் பருக்கும், தாதுபுஷ்டி வீரியம் கொடுக்கும், மார்பு உளைச்சல் நோவு நீங்கும், இதில் சொல்லியபடி செய்ய எல்லாம் நடை பெறும்.

வீக்கத்திற்கு.

சங்கன் வேர் பச்சரிசியும் மோரில்
தானரைத்துக் கூழாய்க் காய்ச்சிக் குடியும்
பொங்கமாய் வீக்கம் எவையும் வாடிப்
போகுமே குன்றாப் புகலவே நெறியும்.

ரு.

சங்கன் வேர் பச்சரிசி மோரில் அரைத்துக் கூழாய்க் காய்ச்சிக் குடிக்க வீக்கம் யாவும் பொங்கமாய் வாடிப் போகும். குன்றாமாய்ந்து நீங்கும்.

சோகிரசம்.

கெந்தி ரசங் காரந்தாள கந்தில்
சேர் திரிகடுகு திரிபாலை வாள
நாபி பல மோ யரை
முன் வகை வெண் சார் வேளைச்சார் றின

ச.

கெந்தகம், இரசம், காரம், தாளகம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய் தான்றிக்காய், வாளம், நாபி ஆகியவை கல்வத்திலிட்டு நன்கு அரைத்து, வெண் சார் வேளைச்சார் சிறிதளவு விட்டு

கையாந்த கரைச்சார் விட்டு கன்னியில்
கலவத்தில் பன்னிரண்டு சாமமும் கொட்டு
மெய்யாய் யதை யரைத்திட்டு பின்பு
வேண வியாதிக்கிடப் போகும் தீட்டு

எ.

கரிசலாங் கண்ணிச் சார் விட்டுக் கல்வத்தில் பன்னிரண்டு சாமம் நன்கு அரைத்து வியாதிக்கு அதற்கேற்றார் போல் கொடுக்க நோய் நீங்கும்.

<u>சர்வ நோய் களுக்கும் வேர் வகைகள்</u>.

காசசுவுக்கு கஞ்சாங் கோரை வேரும்.
கட்டிகளுக்கு கையாந்த கரையின் வேரும்
பாசிக்கரையாப்புக் கறுகின் வேரும்
பலவரணைக்கு பற்பாடக வேரும்.

அ.

காயச் சுவுக்குக் கஞ்சாங் கோரை வேரும் கட்டிகளுக்குக் கையாந்தகரை என்னும் கரிசலாங் கண்ணி வேரும், கொடிய அரையாப்புக்கு அருகின் வேரும், ~~பல்~~ பல் அரணைக்கு பற்பாடக வேரும்

✓

சொத்தைப் பல்லுக்கிருந்து வரை வேரும்
சூழ் துடை வாழைக்கு துளசியின் வேரும்
இரத்தமூல நறுங்காளி வேரும்
நாலா முறைக்கும் நாயுருவியின் வேரும்

௯.

சொத்தைப்பல் பல்குத்தல் ஆகியவற்றிற்கு துவரை வேரும். துடை வாழைக்கு துளசி வேரும், இரத்த மூலத்திற்கு நறுங்காளி வேரும் பலவகைப் பெற்ற முறைகளுக்கும் நாயுருவியின் வேரும்.

இலங்கிகளுக்குச் செருப்படை வேரும்
சீழ் மூலத்திற்குக் காஞ்சிரை யது வேரும்
பிலத்த காமாலைக் குக்குமலி வேரும்
பிடையா மூலத்திற்கு முள்ளி வேரும்

௰.

இலந்திகளுக்குச் செருப்படை வேரும் சீழ் மூலத்திற்கு காஞ்சுரையின் வேரும் பிலத்த காமாலைக்கு குப்பமேனியின் வேரும் கொடிய பிடையாகிய மூலத்திற்கு முள்ளி வேரும்

✓

காக்கா வலிக்குக் காக்கணான் வேரும்
கருட மாலைக்குக் கவுதும்பை வேரும்
மேகக் கரப்பானுக்கு கரப்பான் வேரும்
முறை முன்நிற்கும் முதியோர் கூந்தல் வேரும்

௰௧.

காக்கா வலிக்கு காக்கணான் வேரும், கருட மாலைக்குக் கவுதும்பை வேரும், மேகக் கரப்பானுக்கு கரப்பான் வேரும் வாதபித்த சேட்மை மாகிய மும்முறைக் காய்ச்சலுக்கும் முதியோர் கூந்தல் வேரும்.

விரிப்புருதி விஷ்ணுக் கரந்தி வேரும்
இலி பவுந்திரம் இலந்தி நாயகன் வேரும்
தப்பில்லை பதினெட்டு வேரும் மூலி
தவிர்க்கிருக்கச் சாப நிவர்த்தி செய்வாரும்

௰௨.

விப்புருதிக்கு விஷ்ணுக் கரந்தி வேரும் விரிந்து வளரும் பவுந்திரத்திற்கு இலந்தி நாயகன் என்னும் வேரும் தப்பாமல் நோய் நீக்கும் மூலி தனக்கிருக்கின்ற பொருது சாப நிவர்த்தி செய்வதில்

✓

செய்யும் பழனை வேத்தியம் தூப
தீபமு மேளகைக் கேத்துமே சாத்தியம்.
ஐய்யா நூற்றெட்டுருவே சாத்தியம் சிலி.
ஆம் உறம் சிம் கிலா ஓம் கிரீச்சி யெனும் பாத்தியம்.

பழம், நெய்வேத்தியம், தூபம், தீபம் மூலிகைக்குக் காட்டி நூற்றெட்டு உரு உம் சீம் கிலி கிலீம் றீம்சி என்று கூறி மூலி கொள்ள வேண்டும்.

<u>மிருக புண் ஆறுவதற்கு</u>.

ஆதிவாரம் உதயத்து தும்பை
அருகில் சிவனை யழைத்தங்கே வைத்து
சூரியனைப் பார்த்து பின்பு
தொகுத்த சிவனைப் பார் கோலில் விதித்து.

ஞாயிற்றுக்கிழமை உதயத்து தும்பை அருகில் சிவனை அழைத்து அங்கே வைத்து ஒளிமயமான சூரியனைப் பார்த்து பின்பு அங்கே கோலில் விதித்துப் வைத்துள்ள சிவனைப் பார்க்க.

கோலில் வேரைப் பிரங்கி ஊதி
நிற்கும் எருக்கின் மேற்போடு மொருங்கி
பாலில் உலங்கி நோய் நருங்கி யோமப்
பண்பாய்ப் பிறைக்கும் பலியாயடங்கி
யரு.

கோலி வேரைப் பிசங்கி ஊதி நிற்கும் எருக்கின் மேற் போடு பாலில் உலங்கி நோய் ஒருங்கி நருங்கி ஓம பண் பாய் அடங்கி பிறைக்கும்,

பல்லுப் புழுக்காக!

கீழா நெல்லிக் காலிவாரம் தன்னில்
கிட்டி கன்னி நூலாற் காப்பிடுந்திரம்.
ஆர்ப்ப பச்சரிசி கற்பூரம் வைத்து
அன்றரை மசிந்து நூற்றெட்டு கோறம்
யசா.

கீழ்கா நெல்லியை ஞாயிற்றுக் கிழமை நெருங்கி கன்னி நூலால் (புதிய நூல்) காப்புக்கட்டி பச்சரிசி பரப்பி கற்பூரம் காட்டி நூற்றெட்டு மந்திரம் கூறிச்

ஓதியவர் பேறைச் சொல்லிப் புகு
வோங்காது வத்துத்தீர் வென்று செல்லி
ஆதுச்சி வேரினைச் சில்லி போட
வாந்புகு வத்தே பல்நோய் தீரும் வல்லி

யஎ.

பற்புழு உள்ளவர் பேரைச் சொல்லி புழு வேங்காது தீர்க வென்று வேர்பிடுங்கிப் போட பற்புழு பல்வகை நோய் தீரும் விரைந்து.

ரச பூர்த்தி ரசம்.

சுத்தி செய்தேவி பாசாணத்தை தேனில்
சூட்டோடு சாமம் வேவித் தாற்றும் வித்தை
சித்துரூர் துண்டை செய் மிகத்தை தின்னி
சேர் பூவ் கிழ்ந்தை வைத்துண் வாந்தியாம் வித்தை.

யஅ.

கௌரி பாடாணத்தை சுத்திசெய்து தேனில் போட்டு ஒரு சாமம் வேகவைத்து அதை உளுந்தளவு உண்டை செய்து தின்னி சோற்றுக் கிழங்கின் கிழங்கில் வைத்து உண்ணுக. நீர்க்கு வாந்தியாகும்.

~~தி~~ திரிமூர்த்தி ரசம்:

எலிப் பாசாணம் வாளம் சுத்தி : சம
விதை ஒருசாமந் தேனில் வேவித் தேத்தி
வலித் தரைத்து மூங்கில் மத்தி குழாய்
வைத்திரு குன்றியா யுண் சுரக்சுத்திய

எலிப்பாசாணம், வெள்வாளம் சுத்திசெய்து யக்க. சம அளவு எடுத்துக் கொண்டு ஒரு சாமம் தேனில் வேக வைத்து நன்கு வலித்து அரைத்து மூங்கில் மத்தி~~[illegible]~~க் குழாயில் வைத்திருந்து குன்றி அளவு உண்ண சுரம் நீங்கிப் போகும்.

திரிமூர்த்தி ரசம்

பாற்த் துத்தம் மயிற்த் துத்தந் தொடு எலி
பாசாணஞ் சுத்தித் தெளித் தேனில் சாடு ய
மேற் சொன்ன இதைப் பொறை போடு பயிர்
விடம் பாலி~~லு~~லுண் சீதசுரம் விடு உ ய.

பால்த் துத்தம், மயில்த் துத்தம், எலிப்பாசாணம் சுத்திசெய்து தேன்விட்டு அரைத்து மேற்கூறிய வாறு அதனைப் பயறளவு உண்டை செய்து பாலில் உண்ணச் சீதசுரம் விலகிப் போகும்.

✓

ஆடாதோடைக் கிருதம்.

ஆடாதோடை பிழைரசமும் அகில்
ஆவின் பால் நெய்வகைக் காழாக் காகவும்
தேட மத்தைத் திப்பிலியும் ஏலம்
சேர் அதி மதுரம் தூளாக்கும் வகைக்கும். உக.

ஆடாதோடை இலைச்சாறும், பசுவின்பால், நெய் வகைக்கு ஆழாக்கும் விட்டு அரத்தை, திப்பிலி, ஏலம், அதிமதுரம் வகைக்குக் கழஞ்சு ஒன்று தூளாக்கிக் கலக்கிக் காய்ச்சி

கழஞ்சு ஒன்றே காலாய்ச் சேர்த்து காய்ச்சி
காண வடித்தொரு கரண்டியே வார்த்து
பருகவுன் இருவேளை பார்த்து உண்ணப்
பாரிருமல் கபம் போகும் வேர்த்து. உஉ.

பருவங்கண்டு வடித்து ஒரு கரண்டி வார்த்து இரு வேளை உண்ண பிடித்துள்ள இருமல் கபம் போகும்.

தூதுளைக் கிருதம்.

தூதுளைக்காய் ஆவின் நெய்ப்பசுவும் பாலும்
கூட்டும் வகைக் காழாக் கதில் திரிகடுகும்
கொடிகாய்ச் சீரகத்தூள் வகைக்கும் ஐங்கால்
கொண்டு காயங்கா ச்சி வடித் திறக்கும்
உ௨

தூதுளைக் காய், பசுவின் நெய், பால் வகைக்கு ஆழாக்கு எடுத்துக் கொண்டு அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகத்தூள் வகைக்கு ஒன்றைய கால்க் கழஞ்சு கியாழ மிட்டு வடித்து இறக்கிக் கொள்க.

இறக்கி இருகரண்டி யையே வாரும்
ஏற்றும் தினத்திற்கு மூன்று முறையே
தறக்கும் சுவாச காசமொடு கபம்
காணாது கக்கிரு மலுமே குமே
உ௯.

இறக்கிய அதனை இரண்டு கழஞ்சு அளவில் வார்த்து நாள் தோறும் மூன்றுமுறை உண்ண சுவாச காசம் கபம் கக்கிருமல் காணாது ஏகும்.

கடுக்காய் நெய்:

கடுக்காய்த் தூள்பல பலரெண்டிரம் பதக்குத் தண்ணீர்
காலாந் தெளிந்த் திரண்டு பலயாக் காய்ச்சி
இரும் புளியாரைச் சாறுநாக்கு நாலிரும்
விட்டே நெய்பல ரெண்டு விதம் மாய்க்கக்கு
உரு.

கடுக்காய்த்தூள் பல இரண்டல் பதக்குத் (இருமரக்கால்) தண்ணீர் விட்டுக் காய்ச்சி இரண்டு பலயாக புளியாரைச் சாறு நான் காலாக்கு விட்டு இரண்டு பல நெய் விட்டு

ஆர்த்தே அத்திப்பூ மேன் பொழியும் காயம்
வாள்முள்ளி லவன் பிசின் சீரகமும்
சேர்த்தே கோல் முக்க கோமமும் பிந்து
திரி கடுகு கசகசா கருஞ்சீரகமும்.
உசா.

அத்திப்பூ மேம் பொழு, காயம், முள்ளி, இலவம் பிசின், சீரகம் சேர்த்து மம், இந்துப்பு, திரிகடுகு, கசகசா, கருஞ்சீரகம்

வகைக்கு மூவிரு கனெடையே நெய்யும்
அமைய விட்டுக் கலந் தெரிப்பாய் பொருயே
திசையா விமற் பதத்தில் வடியே யுண்ணத்
தின மொரு கரண்டியுண் கிரணீபோம் நொடியே

உஎ

வகைக்கு மூன்று வராகன் எடை நெய்யும் நன்றாய் விட்டுக் கலந்து எரித்து தைலப் பதம் கண்டு வடித்திக. நாள் தோறும் ஒரு கரண்டி உண்ண ஒரு நொடிப் பொழுதில் கிராணி நீங்கும்.

கெந்தகச் செயநீர்.

எருக்கின் பருப்புச் சார்துவைத்தே கெந்தி
எருத்தைந்து பலத்தை நாற்சாமம் அரைத்தே
திருக்கா அப்பழயே நீ வைத்தே காலை
கிரையாய்ப் பார்த் தெடுத்துப் பதனம் பண்ணத்தே

உஅ

எருக்கின் பருப்பு சார்து வைத்து கெந்தகம் ஐந்து பலம் நான்கு சாமம் ~~[illegible]~~ அரைத்து நன்கு எடுத்துப் பதனம் பண்ணி. கெந்தகநீர் —

சீல மென்றும் கெந்தகச் செயநீரைக் கொண்டு
நாக்கி லிங்கத்திற் சுருக் கிடு கண்ணீர்
பலமுள்ள கட்டாகும் தொண்ணீர் யதன்
பின்க் செய்யும் வேலையைப் பேசுவோம் கண்ணீர்

உ-சண.

எனப் பெறும் கெந்தகச் செயநீரை உட்டு நாக்கி லிங்கத்தில் சுருக்கிட பலமுள்ள கட்டாகும். அதன் பின் செய்யும் வேலையைப் பேசுவோம்.

முன் கெட்டி பீங்கானிற் சாய்த்து ரவி
முகம் வைக்கத் தயில மிறங்குமே வாய்த்து
என் செய்வேன் சரக்குகள் மாய்த்து கட்டு
மயல் பிறந்திட சுடுதற்க கட்டு மேயத்து

நவ.

சுருக்கிட்ட கெந்தகம் பீங்கானில் சாய்த்து சூரிய வெளியில் வைக்கத் தயிலம் இறங்கும். அவ்வாறு இறங்கிய தைலம் என்ன சொல்வேன் சரக்குகளை மாய்த்துக் கட்டு மியல்பு தெற்கு உண்டாகி கட்டக்கூடியவைகளைக் கட்டும்.

✓

மகா கற்பம்.

கால மேகத் தாழை மடலும் தேடி
கண் பொடித்துக் கடித்துண்ணத் தொடலும்.
வாலப் பருவம் நீ கொண்டிடலும் சதா.
மாயோகிகள் கற்பம் வகை காணுடலும்.
௩௧.

மேகத்தோடு கூடிய கார்காலத் தாழை மடல் தேடி நன்றாகப் பொடி செய்து அளவோடு உண்ண இளைய பருவம் தோன்றும் எப்பொழுதும் பெரும் யோகிகள் கற்பங் கொண்டு உடல் பேணும் தன்மை இதுவாம்.

வாழைப்பழ நீறு.

பிரண்டை யிலைக் காயரைத்து நாறு
பிளவாக்கி வாழைப் பழத்தி னுள் வைத்து
திறமாய்ச் செய் சீலைக்கிக் கொடுத்து புடம்
நீறத் திர நெய்யிலுண்ணச் சூட்டுமற் கெடுத்து
௩௨.

பிரண்டை யிலைக் காய் அரைத்து நாறு பிளவாகச் செய்து வாழைப் பழத்தினுள் வைத்து திறமாய் சீலை மண் செய்து கோழிப் புடமிட நீறும். நெய்யிலுண்ண சூடு நீங்கி நன்றாகிடும்.

———— o ————

அதி மண்டூரம்

திலகடுகு திரிபலையும் சன்ன
தேவதாரம் முத்தக் காசு செவ்வாயமும்
மரமஞ்சள் திப்பிலி மூலமும் யதில்
வாய்விளங்க சித்திர மூலமணைத்தும் ௩௩.

சுக்கு, மிளகு, திப்பி, கடுக்காய் நெல்லிக்காய், தான்றிக்காய், சிறுதேவதாரம், முத்தக்காசு, செவ்வாயம், மரமஞ்சள், திப்பிலி மூலம், வாய் விளங்கம், சித்திரமூலம் ஆகியவை எல்லாம்

அனைத்தும் சமனிப்பப் பொடித்து சூரணம்
ஆக்கிச் சமனாய் மண்டூரம் சேர்த் தரைத்து
நினைத்துச் சடுதியில் வைத்து மூனாள்
நில கோமியம் விட்டுக் காய்ச்சி யெடுத்து ௩௪.

சமனாகப் பொடி செய்து சூரணஞ் செய்து சம அளவு மண்டூரம் சேர்த்து அரைத்து மூன்று நாள் நில கோமியம் விட்டுக் காய்ச்சி எடுத்து

காய்ச்சி மெழுகு பதத்தில் ஒரு
களச்சி யிடையெடை மோரிலுண் மிதத்தில்
பாச்சு மோர்ச்சோற் பத்தியத்தில் கொள்ளப்
பழுத்த ஊன் வாடைப் போம் பார்க்கும் விதத்தில்

மெழுகு பதத்தில் காய்ச்சி எடுத்துக் கொண்டு ஒரு களச்சிக் காயளவு மோரிலுண்ண வேண்டும். மோர்ச் சோறு பத்தியத்திலுண்ண பழுத்த ஊன் வாடைப் பார்க்கும் விதத்தில் அமையும்.

தீரும் பாண்டு சோகை மூலம் ஆறும்
திணை மேலுடைப்புற்று துடை வீக்கம் மாலம்
மாறும் காமாலையும் சூலம் அக்கினி
மந்தம் சுவயமும் இரல் நெறிவு போம் கோலம்

ரூசா.

பாண்டு, சோகை, மூலம் ஆறும், திணவு கொண்டு மேலில் தோன்றும் புற்று, துடை வீக்கம் தீரும். காமாலையும், கொடிய அக்கினி மந்தமும், சயம், இரல் நெறிவு நீங்கிப் போகும்.

இரக்கி இலங் கைக்காய் விதம் உருண்டை
யேற்ற மோரில் காமாலைச் சோகை காதம்
பறக்கும் மந்தாக்கினி வாதம் மூலம்.
பாண்டு பிணிசம் போ மோரிலுண் சாதம்

யசு.

இலங்கைக்காய் அளவு உருண்டை மோரில் கொள்ள காமாலை, சோகை காததூரம் பறக்கும். மந்தாக்கினி, வாதம், மூலம், பாண்டு, பிணிசம் நீங்கும். மோரில் சாதம் உண்ணுக.

திரி மண்டூரம்.

மரமஞ்சள் பவள மல்லிகைப் பூ ஓமம்
வட்டத் திருப்பி வேரலவும் கடுக்கிரியும்
அரத்தை ரேணுகம் செவ்வியமும் வாளம்
மதி லேலம நந்திலிகமே திரி பலையும் சேர்த்துய.

மரமஞ்சள், பவளமல்லிகைப்பூ, ஓமம், வட்டத் திருப்பிவேர், கண்டங்கத்திரி, சித்தரத்தை, ரேணுகம், செவ்வியம், வாளம், ஏலம், சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்

திப்பிலி மூல மஞ் சாதிக்காயும் கருஞ்
சீரகம் வாய் விளங் கமுத் தக்காசும்.
செப்பும் கற் கடக சிங்கியும் பின்னும்
சீரகமுஞ் சடா மாஞ்சி வகைக்கிடும் ௬௧.

திப்பிலிமூலம், சாதிக்காய், கருஞ்சீரகம், வாய்விளங்கம், முத்தக்காசு, கற்கடகசிங்கி, சீரகம், சடாமாஞ்சி சம எடை வகைக்குக் கொண்டு

சமன் பொடித் ததிலே மண்டூரம் சரி
தாக் கயதிற் சரிலோக செந்தூரம்
அமரக் கையான் சாற்றின் நேரம் மூணாற்
அரைத் துண்டை இலந்தைக் காய் விதம் செய்திடும் ௬௨.

பொடி செய்து மண்டூரம் சரி அளவு சேர்த்து இதில் சரி எடை லோகசெந்தூரம் சேர்த்து கரிசலாங் கண்ணிச் சாற்றில் மூன்று நாள் அரைத்து இலந்தைக் காய் விதம் உருண்டை செய்து

உண்டை சர்க்கரை தேன் மோரில் ஒன்றில்
உள்ளுக் கேத்த ஐயங் காமாலை பாரில்
கொண்டிடும் திரிதோஷம் நோயில் யாவும்
குடி போகும் தீபன முண்டாகும் சேரில்

அரு.

உருண்டை சர்க்கரை தேன் மோரிலாவது என்றால் உட்கொள்ளச் சயம், காமாலை, வாத, பித்த, கபதோசங்கள் யாவும் நீங்கிப் போகும். சீரணமுண்டாக்கிப் பசியைத் தோற்றுவிக்கும்.

நவலவண முருக்கி.

கல்லுப்பு இந்துப்பு பொட்டுலுப்பு சவட்டு
கறியுப்பு விடாலவணம் வளையலுப்பு
நல்சவர சலவண முப்பூ பலம்
நாட்டுடொன்று முங்கி.று ப்பரைக் காலே ஒப்பு

அசு.

கல்லுப்பு, இந்துப்பு, பொட்டலுப்பு, சவட்டுப்பு, கறியுப்பு, விடாலவணம், வளையலுப்பு, சவண முப்பு ஒருபலம் முங்கிலுப்பு அரைக்காற்பலம்

பழகின தயிர் மொங்கைக் கரயில் சினை
பரய மூன்று செய்து லக்கட முரயில்
அழகி கல்லுப் புக்கரயில் ஒடு
அகில் மூர துருக்கி வைத்தாநவே நொரயில்
தீரு.

பழந்தயிர் மொங்கை ஊட்டு பாதுகாப்பான சீனை மண் மூன்று செய்து மிரயும் பொருது அமைய கல்லுப்புக் கரயில் ஒடு மூர துருத்தி வைத்து ஊத நொரயில்

ஊதும் போது சிடசிடப்பு அக்கால்
உயர் கீழா நெல்லி கசக்கிப் போட்டெடுப்பு.
வாசிட்ட மூரக் கடைப்பு பின்பு
வகையாயுப் பெல்லாம் பொரத்துச் சேருடைப்பு
சுகா.

ஊதும் போது சிடசிடப்பு நீங்கினால் கீழ்கா நெல்லி கசக்கிப் போட்டு எடுத்து இவையாவும் பொர செய்து சேர்த்து

போட்ட பின் சிடசிட பத்தால் வேலி
புகைபிடி மிச்சங்காய் மிதம் சேர்வத்தால்
கூட்ட உருக்கிக் கண்ணைவற்றல் ஆடக்
கொட்டிப் புதுவோட்டில் விட்டாற் வத்தால்.
௮௭.

போட்ட பின் ~~சி~~ சிடசத்தால் எருமிச்சங் காய் சேர்த்து உருக் கிக்கண் ஆடும்பொழுது புது வோட்டில் கொட்டி ஆறவைத்து

ஆரும் உப்பை இட்டுக்கையாய் உள்ளுக்
கந்தி சந்தி கொள்ள சீரணம் பிரிவாய் கரை
மாறும் மந்த உஷ்ண மறைவாய் ஏப்பம்.
வயிறுப்பு பல ஜோதல்வாங் கிடு மறைவாய் ௮௮.

உப்பை எடுத்துக் கொண்டு ஒரு சிட்டிகை காலை மாலை உட்கொள்ள சீரணம் நன்றாகும், கரைமாறும் மந்த உஷ்ணம், ஏப்பம், ~~வயி~~ வயிறுப்பல், வலித்தல் யாவும் நீங்கும்.

மருக் கரைய

சோப்பதைச் சுண்ணக் குழைத்து அதில்
தொட்டதன் மேற்சத்து வைக்கு மிடத்து
காப்பென்னும் மருளைக் கரைத்து விடுமாம்
கண்ட பின் தேங் கொண் ணெய் யிட்டாக்கு கொடுத்து ௫.

சோப்பதை சுண்ணத்தில் உரைத்து அச்சத் திணைத்தொட்டு மருவின் மேலிட மருள் கரைந்திடும். கரைந்த பின் தேங்கா எண்ணெய் இட்டு புண்ணை ஆற்றுக.

சுண்ணப் படலம்:

துளசி விழுதை யெடுத்து சங்கை
சுத்திக் கவசித்துக் சீலை தொடுத்து
வளர் கோழிப் புடமிட வடுத்து நெய்யில்
வை பணவிடை மேக மறுங் கூடு விடுத்து ௬.

துளசி விழுதை யெடுத்து சங்கைச் சுத்திக் கவசம் செய்து சீலைமண் செய்து கோழிப் புடமிட்டு எடுக்கவும். ஒரு பணவெடை நெய்யில் உண்ண மேகம் நீங்கிச் சூடு தணியும்.

சித்தண்ட சுண்ணம்.

சித்தண்ட வோட்டைப் பாவைச்சார் தன்னில்
சேர்த்தரைத்து வில்லை செய் தோட்டில் வைப்பார்
சுத்திச் சீலை முழப்புடம் பார் போடச்
சுண்ணங் கின்றிக் கேணியுண்ணை வாய்வு அறும்பார்.

உ.

சித்தண்ட வோட்டைப் பாவற்சார் விட்டு
சேர்த்து அரைத்து வில்லை தட்டி ஓட்டில் வைத்து
சுத்திச் சீலைமண் செய்து முழப்புடத்தில் இட
சித்தண்டம் நீறிச் சுண்ணமாம். இன்று எடை
கேணியுண்ண வாய்வு நீங்கும்.

பேரண்டச் சுண்ணம்.

வெட்டுண்டவன் மண்டை யோட்டுத்தூளும்
எலுமிச்சன் பழச்சார் விட்டுச் சீனம் போட்டு
நெட்டாயரைத்திட நாட்டு வில்லை
நிழலுலர்த்தியே முழப்புடம் போட்டு

நவ.

வெட்டுண்டவன் மண்டை யோட்டுத்தூளை
எலுமிச்சம் பழச்சார் விட்டு சீனக்காரம் போட்டு
நன்கு அரைத்திட்டு வில்லை செய்து நிழலில் உலர்த்தி
முழப்புடமிட்டு எடுக்க பேரண்டச் சுண்ணமாம்.

✓

கூட்டொரு விருகண்டையில் சுண்ணம்
புகலும் கழுதைப் பாலில் இரு துட்டெடையில்
நாட்டிறங்கிச் சார்சர்க் கரையில் பாதி
கண்டீருறு நாள்க் கொள்ளாந்தி சந்தியில்

வீரகண்டை சுண்ணம் கழுதைப் பாலில், இருதுட் டெடை இஞ்சிச் சாற்றில், சர்க்கரையில் பாதி யளவும் பன்னிரண்டு நாள் ~~கொள்ள~~ காலை, மாலை இருவேளை கொள்ள வேண்டும்.

கூர் மண்டச் சுண்ணம்.

ஆமை ஓட்டில் சுண்ணம் அப்பி புடம்
ஆறிரண் டெருவினில் போட்டெடுத்தப்பி
மாமேனி கவசித்து அப்பிப் புடம்
மதுமுன் போல் போட்டெ யரைத்துவை ஒப்பி

ஆமை ஓட்டில் சுண்ணம் அப்பிப் பன்னிரண்டு எருவில் புடமிட்டு எடுத்து குப்பை மேனியை இடித்துக் கவசித்து முன் போல் புடம் இட்டு அரைத்து வைக்க வேண்டும்.

ஒப்பிப் பதனம்பண் சுண்ணம் இன்றி
யோரிடை நெய்தேனில் வெண்ணெயால் லின்னம்
செப்பி னேருமாங்கச் சுண்ணம் சுரம்
சேய் வயர் கதிரத்தத் மக்கிதம் போகுமுன்னம்.

பதனம் பண்ணிய சுண்ணம் ஒரு குன்றி எடை.
நெய், தேன், வெண்ணெய், பால், ஆகியவை ஏதாவது
ஒன்றில் உட்கொள்ள மாங்கம்சுரம் குழந்தைவயிர்
கழியம் இரத்தம், சீதம் ஆகியவை நீங்கிப் போகும்.

கற்கடகாண்டச் சுண்ணம்.

நண்டோடு பிரண்டைச் சாற்றரைத்து புடம்
நால்முன் றெருவில் கொருத்தி யெடுத்து
இன்டுமுன்ம் போனைந்து புடத்து இவ்வாறு
மீள செய் தெடுப்பாய் வயாதிக் கருத்து ன.

நண்டோடு பிரண்டைச் சாற்றில் அரைத்து
நான்கு, மூன்று எருவில் கொளுத்திப் புடமிட்டு
எடுத்து இவ்வாறே முன்போனைந்து புடம்மாறி
மாறியிட்டு எடுத்துக் கொண்டு வயாதி
அறிந்து

அடுத்தே வெண்ணெய் தேன் பால் நெய்யில் ஒன்றில்
அருந்து மைந்துநாள் இன்றியே அன்னத்தில்
முருக்கும் பிணைப் பிருமல் இல்லாமலே
முறைக்காய்ச்சல் வேணப் பிணி போம் தொடுக்கில்

அ.

வெண்ணெய், தேன், பால், நெய் ஆகியவை ஏதாவது ஒன்றில் அன்னத்தில் ஒரு குன்றி எடை ஐந்து நாள் கொள்ள இளைப் பிருமல், முறைக் காய்ச்சல் வரைந்து நீங்கிப் போம்.

துரிசு அன்னம்.

துரிசு இருகனை ஒன்று யதை
துல்லிய மாக்குஞ் துரிதமே யின்று
குருவாய்ப் புகழுவேன் நன்று
குணமாகும் மூலிகைக் குறிப்பேணித் தென்று

ண.

துரிசு விராகன் என்று எடுத்துக் கொண்டு அதை சுத்திகளிப் பதற்கு முறை என்று புகழுவேன் நன்கு குணமான மூலிகை குறித்துரைப்பேன்.

✓

மூலி விதானம்.

என்று வட்டமிட்டிருக்கும் கோயில்
எங்கு முளைத்து மதில் ஆழ்ந்திருக்கும்
சென்று வன்னி யென்றுரைக்கும் ரசம்
செத்து விடும் தூரிசு தொட்டால் வெளுக்கும்

வட்டத்திருப்பி என்னும் எல்லாக் கோயில் களிலும் முளைத்திருக்கும் சுற்றுச் சுவர் சூழ்ந்துள்ள வன்னி என்று பெயர் சொல்லும் ரசம் பட்டால் தூரிசு செத்து வெளுப்பெய்தும்.

மூலி நடு வெருத்து அலங்காரம்.

வெளுக்குஞ் சணகியின் பூண்டும் யகின்
விதழுங்கில் முதியார் கூந்தல் தூண்டும்
துளுக்குஞ் சைகயான் அவரை மீண்டும் கட்டுக்
கூடரக் கொடிவிடத் தேறு செம்முள்ளி யிண்டும்
சந்திரி யகு.

வெளுப்பினைத் தரும் பூண்டு, முதியார் கூந்தல் கரிசலாங் கண்ணி, அவரை, செம்முள்ளி, யிண்டு, கொடுவேலி வேர்

அரிய மிரண் டா மெழுத்தில் பெயர்.
ஆகிய மூலிகை யெட்டுந் தொடுத்தல்
குறிபெயர் காண முடித்தல் என்று
கூறினேன் கண்டு கொள் மூலிகைச் சாரத்தில். ௰௨.

அவரி ஆகிய எட்டுந் தொடுத்து பெயர் அறியுமாறு மூலிகைச் சாரத்தில் கண்டு கொண்டு விளக்கமாகக் கூறினேன்.

மூலிகையின் பாலமைத்துக் கட்டி
முன்னுரைத் துணை நவியினில் வைத்து
கேலி செய்யாமல் எடுத்துப் பார்க்க
செம் பிறமுள்ளச் சுண்ணமே விளித்து ௰௩.

மூலிகையின் பால் அமைத்துக் கட்டி முன் கூறிய துணியினை வெயிலில் வைத்து கேலி செய்யாமல் எடுத்துப் பார்க்க செம்பிறமுள்ள சுண்ணம் காணலாம்.

எரியு மங்கறையிற் புளிபத்தில் சாறு
விட்டு வங்கிடா மூலிகை யதனில்
சொரியும் கொஞ்சமாய்ச் சுண்ணத்தில் போட்டு
தொக்கிச் சக்கச் சார் வருமே கூரணத்தில். யஅ.

எரிந்த தரையில், புளிபத்தில் சாறு விட்டு வராத மூலிகைகள் சிறிது சுண்ணமிட்டுப் பிழிய ஒரு கணத்தில் தேங்கியுள்ள சார் வெளிப்படத் தோன்றும்.

<u>தாம்பிர பஸ்பம்.</u>

உருக்கு தாம்பிரங் கண்ணுக்கு நீர் போல்
உறைதுங் துருத்தி வைத்து விலாவிக்கு
குருமுன் சுண்ணம் பணவிடைக்குப் போட்டு
கூட்டிக் கசக்கதில் சார் வரும் பழக்கு யரு.

உருக்கு, தாம்பிரம் கண்ணுக்கு நீர் போல உறதும் துருத்தி வைத்து எரியுமாறு ஊதும் பொழுது முற் கூறிய ~~[illegible]~~ துரிசச் சுண்ணம் பணவெடை போட்டுக் கூட்டி கசக்கச் சார் வரும். அச் சார் வருவது பழக்கணக்கி மாகும்.

சாற்றைத் உருக்கு முகத்தில் வார்த்து
சத்துப் பொருக்கப் பஸ்ப மாத்துல் யத்தில்
மாத்துகம் வியாதி ஹீணத்தில் ஏகும்
இசையனுப் பானத்தில் வழங்கும் பதத்தில் யசா.

அவ்வாறு வந்த சாற்றினை உருக்கு முகத்தில் வார்த்து சத்துப் பொருக்க பஸ்பமாக துல்யமாகமாறும் இப்பற்பத்திற்கு வியாதிகள் துன்னைப் பொழுதில் நீங்கும் மருந்து வழங்குதல் அனுப்பானத்தில் பக்குவமாக வழங்குக.

வெள்ளிச் சுண்ணம்.

வெள்ளியைத் தகடாய் அடித்துக் காய்ச்சி
விட்டுப் பிலாங் கோடிச்சாற்றை பிடித்து
கொள்ளிரு பதுதரம் பிடித்து தோய்த்து
கொண்ட சாற்றரைத்து வில்லை செய் தடித்து யசா.

வெள்ளியைத் தகடாய்த் தட்டி பிலாங் கோடிச் சாற்றை இடித்து இருபது தரம் பிடித்துத் தோய்த்து அச்சாறு கொண்டரைத்து வில்லை செய்து

செய்து ஒட்டிட்டு மூடிச்சீலை சுத்தி
தீபத் தெருவில் புடம் மூன்றப் பாலை
வைத்தபின் ரசத்திற்பார் வேளையது
வாகாக நிறதாய் வாட்டிடும் மேலை
யஅ.

ஒட்டிட்டு மூடிச் சீலை மண் செய்து எருவிட்டுத் தீபாக்கினியாக எரித்துப்புடம் மூன்று வைத்த பின்னர் இரசத்தில் வேளையது வாகாக நிறதாய் செய்யும்.

பாஷாணச் சுண்ணம்.

பாஷாணம் பலமொன் றெடுத்து அதை
பருத்திப் பிஞ்சியில் வெள்ளெருக்கம் பால் விடுத்து
தோஷம் மரக்குடுவை தொடுத்து வைத்து
துண்டொடு மூடிச்சீலை செய் தடுத்து
யண.

பாஷாணம் ஒருபலம் எடுத்துக் கொண்டு அதை பருத்திப் பிஞ்சில் வெள்ளெருக்கன் பால்விட்டு அரைத்து மரக் குகையில் வைத்து மூடிச் சீலைமண் செய்து

அடுத்துப் புடமிட்ட திலே கருப்
பானால் மறுபடி புடமிடும் பதிலே
எடுத்துப் பார் சுண்ணத்ததிலே வேதை
இட/மாயும் உலோகங்கள் யாவு மிதிலே

மீண்டும் புடமிட்டு எடுத்துப் பார்த்து கருப்பாக இருக்குமானால் மறுபடியும் புடமிட்டு எடுத்துப்பார் சுண்ணத்தில் வேதையிட உலோகங்கள் எல்லாம் மாயும்.

துரிசச் சுண்ணம்.

துரிசு சவுக்காரம் தீனம் பின்னும்
சூடன் வெடியுப்புப் பூச்சமன் சேர்த்தினம்
ஒரு சாமம் அரைக்க நிதானம் புடம்
ஓட்டி வெளுத்தெடுச் சுண்ணமா மோனம்

துரிசு, சவுக்காரம், தீனம், சூடன், வெடியுப்பு சமன் சேர்த்து தினம் ஒரு சாமம் அரைக்க நிதான மாகும். புடம் ஓட்டிப் எரித்து எடுக்கச் சுண்ண மாகும்.

ஆகும் சுண்ணத்தினில் கொஞ்ச மெடுத்து
அதைச் சார்வாறு மூலிகைக் கேத்து நஞ்சு
நேகக் கசக் கச்சார் மிஞ்சு வரும்.
கிடைத்தே அறக்குமே நிலைக்க செய கெஞ்ச

அவ்வாறு கிடைய சுண்ணத்தில் கொஞ்சம் எடுத்து அதைச் சாரான மூலிகைக்கு கேத்து கசக்கச் சார் அதிகமாக வரும். கிடைத்து நிலைக்கத் தங்கும்.

வெடியுப்புச் சுண்ணம்

வெடியுப்பைச் சட்டியிலிட்டு அதன்
மேற்கீழ் வெள்ளாட்டுக் கொழுப்பதைப் போட்டு
பழையே மேறச் சட்டியைப் பூட்டு சீலைய்
பாங்காய்ச் செய்தைம்புது வெருவி ரத்தீமூட்டு உங்.

வெடியுப்பைச் சட்டியிலிட்டு அதன்மேலும் கீழும் வெள்ளாட்டுக் கொழுப்பைப் போட்டு நன்கு சட்டியை மூடிச் சீலைமண் செய்து ஐம்பதுஎருவில் தீயிட்டு

மூட்டியபின் உத்தா மணிச்சார் தன்னின்
முசிய வரைத் தெடு சாமம் பதினாறு
கெட்ட மையம்ப தெடு முன்வார் புட்ட
ஒக்கச் செய் தெலிக்க சுண்ணமா மதுபார்

தீமூட்டியபின் உத்தாமணிச் ~~[illegible]~~ சாற்றால் பதினாறு சாமம் மைபோல் அரைத்து இம்பது எருவில் புடமிட நீறிச் சுண்ணமாகும்.

பார்த் தெடுத்துச் சுண்ணம் தன்னை யறு
பாணத் தேற்ற சர்வநோய் தீர்க்கும் மன்னை
தீர்க்கும் வயத்து நோய் முன்னை உதிரணம்
சேரு மார்வலி யென்றிடும் பின்னை.

சுண்ணம் நீறியது பார்த்து எடுத்து அநுப்பானத்தில் உட்கொள்ள சகல நோய்களும் நீங்கும், தாயின் கர்ப்பத்தில் தோன்றிய நோய், முன்னை உதிரணம் மார்புவலி யாவும் நீங்கும்.

✓

கற்பூர சலாசத்துச் சுண்ணம்.

கேள் கற்பூர சிலாசித்து முள்ளுக்
கீரை யரைத்து மேற் கீழ்கவசித்து
மீள் பதினைந் தெருப் புடத்தில் இட
நிலையாகச் சுண்ணமா யாகு மிடத்து

கற்பூர சிலாசத்து முள்ளுக்கீரை அரைத்து உசா. மேல் கீழ் கவசித்து பதினைந்து எருவில் புடமிட நிலையாகச் சுண்ணமாகும்.

வெள்வங்கச் சுண்ணம்.

முன் சுண்ணம் முன் சாத்தரைத்து வங்கம்
மோட்டப்பிய கலிட்டுப் புடமிட் டெடுத்து
தன்னியமா யாறு மிடத்து யதைக்
தவளமாய்ச் சுண்ணமாகுந் தரம் பிரித்து

கற்பூர சலாசத்து சுண்ணத்தை முள்ளுக்கீரைச் சாற்றி லரைத்து வங்கத்தோடு அப்பி மக்குவையில் வைத்துப் புடமிட்டு எடுத்து நன்கு ஆறிய பின் வெண்ணிற மாய்ச் சுண்ணமாகும். தரம் பிரித்து வைத்துக்கொள்.

தாளகச் சுண்ணம்

கண்டு வெண்ணங் கருவோடரைத்துத் தாள
கத்திற் கட்டுப் புடம் போடு மெரித்து
உண்டு பார் சுண்ண மரித்து யதில்
வேறுரைப் பேன் ரசத் தன்னம் பிரித்து

உ.அ.

தாளகம் வெண்கருவோடு அரைத்துக் கவசித்து புடமிட்டு எரித்து எடுக்க சுண்ணம். ~~[illegible]~~ இரசத்தின் தன்மை அதனின்றும் பிரிந்து நீங்கும்.

இரச சுண்ணம்

பிரித்ததில் சூதத்தை விட்டு பின்னும்
பெண்முலைப் பாலரைத்துப் பில்லித் திட்டு
வரியாயோடு மூடிக் கட்டு சீலை
வளர் கவ தாரிபிடச் சுண்ணம் பட்டு.

உகூ.

பிரிந்து நின்ற இரசத்தோடு இரசம் விட்டு முலைப் பால் விட்டு அரைத்து வில்லை செய்து ஓட்டிலிடச் சீலை செய்து கவசதாரிப் புடமிட சுண்ணமாகும்.

பாசாண சுண்ணம்.

ஓங்கி முலைப் பாலில் ஒத்தி யரைத்
துப்பாஷாணத்தில் கப்பிப் புட மேற்றி
வாங்கிப் பார் தீயினை மாற்றி யதை
வாகாய் எடுக்கச் சுண்ணமாகத் தேற்றி ௩௰௰.

பாஷாணத்தை முலைப்பாலில் அரைத்து கப்பிப் புடமிட்டு ஏற்றி எடுத்து தீ ஆறிய பின்னர் எடுக்க சுண்ணம் சிறப்பாக விளங்கும்.

பாஷாணச் சுண்ணமை வெலி சாற்றில்
பலிந்துரைந்து வில்லித்துலர்த் திடக் கோலி
வேஷண மோடிட்டுச் சீலி கோழி
மிகபுடமிடச் சுண்ணம் வெறில்லை காலி ௩௰௧.

பாஷாணச் சுண்ணமை கொடிவேலிச் சாற்றில் அரைத்து வில்லை செய்து உலர்த்திக் கோலி அளவானதாகச் செய்து ஓட்டில் வைத்து மேல் சீலை மண் செய்து கோழிப் புடமிட சுண்ணம் தேற் ரு. புஸ்பை என்று சொல்லுமாறு அமைந்திடும்.

காத்துப் போகாமலே தெங்கு குடுக்
கைதனில் அடைத்து வெள்வங்கத்தை யிங்கு
ஏற்றுஞ் சுத்தி செய்தபங்கு என்பப
திதிலொன்று கொடுக்க மதியாகும் மங்கு

௩௨

காற்றுப் புகாத தெங்குக் குடுக்கையில் அடைத்து வைத்து ஏற்றும் சுத்தி செய்த பங்கு ஏனதில் ஓர் அரிசி எடை கொடுக்க மதியாகும்.

சுண்ணங் களைந்தும் வெவ்வேறாய் வைத்து
கொடுக்க வியாதிகள் துணையுமே நேறும்
பின்னங்க ளொன்றில்லைப் பாரும் வாதப்
பிறவடம் வைத்தியச் சிரேஷ்டமே தீரும்!

௩௩.

சுண்ணங்கள் ஐந்தும் வெவ்வேறாய் வைத்துக் கொடுக்க வியாதிகள் சிறிதும் நில்லாது விலகும். வைத்தியர்களிடத்தின் முதிர்ந்த மருந்தாகும். வாதரோகத்தை இருந்த இடம் தெரியாமல் விரட்ட வல்லது இதில் எவ்வித குற்றமும் இல்லையாகும்.

வெள்ளம் புளி. கொஞ்சம் எடுத்து யதில்
வெணங்சார் வேளைச்சார் விட்டிவ் விலையரைத்து
மெள்ளக் கருசித்து வைத்து புடம்
மருபது எருவினில் லரிக்கு மிடந்து
நுசி.

வெள்ளம் புளி சிறிது எடுத்து வெணங்சார்தை வேளைச் சார் விட்டு இவ் இலையரைத்து மெதுவாக இருபது எருவில் புடமிட்டு எரித்து எடுத்துக் கொள்க.

செய்நீர்ப் படலம் — பாசாணச் செயநீர்..

கல்லுப்பு இந்துப்பு பூரம் சீனிக்
காரம் துரிசு வெண் பாசாணம் வீரம்
கல்லிரசம் யாவுங் கிரம் சம
ஆட்டிச் ~~தா~~ தாளிச்சார் விட்டோரு சாமநேரம்

கல்லுப்பு, இந்துப்பு, பூரம், சீனக்காரம், துரிசு (உரு)
வெள்ளைப் பாசாணம், வீரம், இரசம் யாவுஞ்சீரு
மாறு சமனாக ஆட்டி தாளிச் சார் விட்டொரு
சாமநேரம் ஆட்டி

அரைத்துப் பழச்சாற் றோர் சாமம் ஆட்டி
அரைப் பணியில் வைத்தகச் செய்நீரே நேமம்
உரைப்பேன் அச் சரக்கிதேமம் நீரை
அரப்பூ திப்புட மிட நீறும் பண்ணுமம்

நூசா.

எலுமிச்சம் பழச் சார்விட்டு ஒருசாமம் அரைத்து அதைப் பணியில் வைத்துச் செய்நீர் தன்மை உரைப் பேன் இந்நீரை அரைப்பு, புடமிட விரைந்து நீறும்.

வீர செயநீர்

வெள்ளிரச மரைத்து ருண்டை செய்து
மேகோப்பை யிட்டு வீரம் பொடித்து ருண்டையாவும்
தெள்ளி மேற் தூவிவை புருண்டை
செய்நீராம் அறுபது கழகைக்குள் உருண்டை

நூஎ.

வெள்ளிரச மரைத்து உருண்டை செய்து வீரம் பொடித்து உருண்டையாவும் தெளித்து போன்று தூவ வைத்து விட வேண்டும். அறுபது நாழிகைக்குள் உருண்டை செய்நீராகும்.

துரிசதை மூன்று நீரமே நீரில்
தோய்த்து விளக் கின் சமீபத் துறமே
மருவ பிடித்து வாட்டி நகமே யவை
ளமாக மெழுகாகும் வதிலையைப் பார்க்கறமே

துரிசினை மூன்றுமுறை நீரில் தோய்த்து, விளக்கின் அருகில் கொண்டு சென்று மருவப்பிடித்து வாட்டினால் உறுதியாக அவை மெழுகாகும். அவ்வாறு செய்து கொள்க.

<u>கல்லுப்புச் செயநீர்:</u>

அண்ட விருந்தும் கல்லுப் பிரண்டும் சமன்
ஆக்கிப் பீங்கானி லிட்டு ரவியை இரண்டும்
இண்டே செயநீர் புரண்டும் வரும்.
இரம் சித்திரை மாதத்தில் வைமுரண்டும்

அண்ட உருந்தும், கல்லுப்பும் ஆகிய இரண்டும் சமமாக எடுத்துப் பீங்கானில் இட்டு ரவிமுகத் திட செயநீர் புரண்டு வரும். வரும் காலம் சித்திரை மாதமாகும்.

பொட்டலுப்புச் செயநீர்

ஐந்தா காச்சல் பொட்டுலுப்பு சட்டி
யகிலுருக் கவை தீபாக்கினி யெரிப்பு
நைந்தே வெண்ணு கம்பளி பொருப்பு பண்ணி
னதை இருசங்கோடு செய்நீர் விடுப்பு

ருய

ஐந்தாம் காய்ச்சல் பொட்டலுப்பு சட்டியிலிட்டு உருக்கி தீபாக்கினியாக எரிப்பு நைந்து வெண் கம்பளி பொருப்பு பண்ணினதை இரண்டுசங்கு செயநீர் விட்டு

காரியம் வெள்ளியம் முருக்கி முகம்
காட்டச் செய்நீர் வெண்சுண்ணச் செருக்கு
பாரீர்த் தானக நீருக்கு நீரைப்
பாச்ச வெள்ளையாம் பதம் வருக்கு

ருக.

காரீயம் வெள்ளீயம் உருக்கி முகம்காட்டச் செயநீர் வெண் சுண்ணச் செருக்கிக் காணீர் எனச் தாளக நீருக்கு நீரைப் பாய்ச்ச வெள்ளையாகும்படி வருக்கும்

பதமாய்ச் சகல சரக்கை கட்டும்
பார்க்க நோக்கிச் சுண்ணம் செய்தீர்க்கை
தேமரைத் தரைத்துத் தரக்கைப் புடம்
நேரீர் பத்தும் போட மது மேகம் மறக்கை

பக்குவமாக எல்லாச் சரக்கையும் கட்டும். புட
யாவற்றையும் நோக்கி சுண்ணம் செய்தீர் அரைத்தரைத்துப்
போடும். புடம் பத்துப் போட மது மேகம் நீங்கிப் போகும்.

அமரி உப்பு செயநீர்

சாரமொன்று கிளிஞ்சில் சுண்ணம் ரெண்டு
தனிப் பலமாய் வெந்நீர் விட்டரை முன்னம்
நீரைய் வில்லை செய் தோட்டின்னம்.
மேலோ டிட்டு மூடிச் சீலைமண் செய்து பின்னம்

சாப
நேபாளம்சாரம், கிளிஞ்சில் சுண்ணம் இரண்டு பலம். எடுத்து
தனித்தனியாக வெந்நீர் விட்டு அரைத்து வில்லை
செய்து ஓட்டின் மீது வைத்து மேலோடு மூடி
சீலைமண் செய்து

செய்து கோழிப்பு டமிட்டு யெடுத்
திட்டோர் சட்டியில் இருபது நீர் விட்டு
பெய்து நன்றாய்க் கரைத்திட்டு பதை
பின் மறு சட்டியிலிருந்து ஊத்திட்டு

கோழிப்புடமிட்டு எடுத்து சட்டியில் இரண்டுபடி நீர்விட்டு இதனைக் கரைத்து கரைத்த அதனை வேறு சட்டியில் இறுத்துக் கொண்டு

இவ்வாறு முன் சட்டியில் யிருத்
திட்டொரு தட்டைச் சட்டி வைத் தடுப்பில்
செவ்வையாய்த் தெளிவு கொஞ்சத்தில் - கொஞ்சம்
தெளிந்து வந்த பிட்டெடுக்கும் அண்ணத்தில்

இவ்வாறு முன்சட்டியிலிருந்து இறுத்து ஒரு தட்டையான சட்டியில் வைத்து அடுப்பில் கொஞ்சம் தெளிய ஏற்றித்தெளிவு கொஞ்சத்தில் எடுக்கும் அண்ணத்தில். மாறு வற்றுமாறு செய்து

வைத்தொரு புறம் வெடியுப்பு பலம்
மது சட்டி யிட்டு றுக்கி முகமொப்பூ
தைத்த வெண் சீலை மதிப்பூ பலந்
கொஞ்சங் கொஞ்சம் பிச்சிக் கொடுவப்பூ

வைத்து ஒருபக்கம் வெடியுப்பு ஒருபலஞ்சா.
சட்டியிலிட்டு உருக்கி முகமொப்பு தைத்தவெண்
சீலை மதிப்பு பலம் கொஞ்சங் கொஞ்சம் பிச்சி
கொண்டு அப்பூ வெடுக்க ஆறுங்.

வெடுக்க காருக் சுண்ண மாகும் யதை
யேயொரு புறம்வை வெடிக்கி யொன்றிதாகும்
அடுக்க னாற்படிய முரியாகும். கிரை
விட்டோர் பானையில் தசநாள் வையாகும்

ஆறிச் சுண்ண மாகும் அதை ஒருபுறம் சுண.
வைத்து நான்குபடி அமுரி நீரை விட்டுஓர்
பானையில் பத்து நாள் வைக்க

ஆனபின் எடுத்துமே பார்த்து பாணை
அடியிலுப்பூப் பூத்திருப்பதைச் சேர்த்து
உணை மற வடித்தார்த்து முன்னே
அள்ள பிரணமது முன் தொன்றியேத்து

ஆனபின் எடுத்துப் பார்த்து பாணை அடியில் உப்புப் பூத்திருப்பதைச் சேர்த்துக் குற்றமில்லாது வழித்து

சரியிடை நிறுத்தே யரைத்து பாணை தனில் சாணி வைத்ததின் மேல் பிங்கான்வைத்து அரைத்ததை எடுத்துவை வழித்து மேலே அதில் சட்டி மூடி மூணாளும் வைத்தெடுத்து

சரிஎடை நிறுத்தே அரைத்துக் கொண்டு பசு வெறுபாணையில் சாணி வைத்து அதன் மேல் பீங்கான் வைத்து அரைத்ததை பீங்கான்மேல் வைத்து வெறுசட்டி கொண்டுமூடி மூன்று நாள் வைத்திருந்து எடுத்து

✓

அய பஸ்பம்.

பார்க்க சுத்த ஜலமிருக்கும் காந்து
பட்டாற் கெடும் புடமிக்கானவை யிருக்கும்
சேர்க்க வயத்த கட்டிக்கும் பொடு
திறம் பழச் சாற்றோ நான்றாவைத்திக்கும்
கூய.

பார்க்க சுத்த நீர் இருக்கும் காற்றுப் பட்டால் கெடும் ஆதலின் புடமியின்வை. அயத்தகட்டை சுத்த நீர் விட்டு எலுமிச் சம்பழச் சார் சேர்த்துவெடு நாள் ஊற வைக்க வேண்டும்.

கழுவிச் செய்நீரில் பத்து தரம் நீ
கணக்கிடு நாள் தோய்த் திரவிப் புடம் வைத்து
வருவ வன்னியினை யரைத்து கவச
மது செய்தோடு முடிச் சீலித்து வைத்து
குக.

ஊறவைத்த தகட்டினை எடுத்துக் கழுவி செய்நீரில் பத்துமுறை இரண்டுநாள் தோய்த்து சூரிய புடமிட்டு வன்னியினை அரைத்து கவசமிட்டு மேல்முடிச் சீலைமண் செய்து

தங்க பஸ்பம்!

வைத்து கசபுடம் போடு பஸ்பம்
மாகிடும் தங்கம் இவ்வாறு செய்ய நாடு
மொத்தைப் பங்கம் பாணைச் சேடு கவச
முஞ் செய் தோடு முழைச் சீலிக்க யிடு
௰௨.

கெசபுடமிடப் பற்பமாகும். தங்கம் மேற்கூறிய முறையில் புடமிடப்பங்கம் பாணைத் தோடு இழைக் கவசித்து சீலைமண் செய்து புடமிட றாகும்.

தாம்பிர பஸ்பம்.

எ.டாகப் புடமிட நீறும் முன்பு போல்
இச் செய நீரில்லேய் தாம்பிரம் பாரும்
போடாய்த் தும்பை பிழைச் சேரும் — கவசம்.
பதுக்கிச் சீலித்துக் கவச மிடத் தேரும்.
௫௩.

தங்கத்தைப் போல் புடமிடமண் போல நீறும் தும்பையினை இச்செயநீரில் தாம்பிரம் நீறும் சேர்த்துக் கவசமிட தாம்பிரம் பற்பமாகும்.

கெந்தி பஸ்பம்.

செய்திடிரக் கெந்தியை யரைக்க வில்லை
செய்துலர்த்தி நந்தியாவர்த்தம் மரைக்க
சுயமாக இலை கவசிக்கச் சீலை
தொடுத்துக் கவசமிட பஸ்பமாமெடுக்க (ருகு)

கெந்தியை அரைத்து வில்லைசெய்து உலர்த்தி நந்தியாவர்த்தம் அரைத்து சுயமாக இலை கவசித்து சீலைமண் செய்து கவசமிட பற்பமாகும்.

தாளக பஸ்பம்.

தாளகமஞ் செய்நீரில் ஆட்டியல், வில்லைச்
செய்து லர்த்தி யெடுத்துவை மேலட்டில்
கிளிஞ்சிச் சுண்ண மெட்டியல் வில்லை
நேர வைத்துக் கீழ் மேலோடு மூடும் தேட்டில் (ருரு).

தாளகத்தைச் செய்நீரில் ஆட்டி வில்லை செய்து உலர்த்தி எடுத்துவை ஓட்டில், கிளிஞ்சல் சுண்ணம் ஓட்டில் வில்லைசெய்து நேர் வைத்து கீழ்மேல் மூடி வைத்து

✓

முறையே நீலை கொடுத்து கசம்
முட்ட துல்லிய மாகும் மெருக்து
நாறுகையே யாது மருந்து நிற்க.
நன்றாக செய்நீரை நவிலுறேன் விடுத்து
௫௬.

நீலை மண் செய்து கவசமிடத் துல்லிய மாகும். இம்முறையே யாவும் ஆச்சரியமாகும் வண்ணம் நன்றாகச் செயநீரைச் சொல்லுகின்றேன்.

லிங்க மெழுகு மெழுகு/ வகுப்புப் படலம்.

உள்ளிப் பூச்சார் கோப்பை யிட்டு லிங்கம்
ஊற ரவியில் ஐந்து நாள் வைத்திட்டு
கெல்லிப்பார் மெழுகாகும் தொட்டு பத்துக்
கே யொன்று தங்க ரேக் கதிற் சேர்த்திட்டு.
௫௭.

உள்ளிப் பூச்சார் கோப்பையிட்டு லிங்கம் ஊற வைத்து ஐந்து நாள் சூரிய புடமிட்டு எடுத்துப் பார்க்க மெழுகாகும். அதில் 10க்கு ஒரு பங்கு தங்க ரேக்கு சேர்த்திடும்

இட்டே வெள்ளியிற் பத்துக்கு ஒன்று
ஏத்தி மெருகு ~~கு~~ முகத்துக்கு
இட்டே பாரேம்யா மாத்துக்கு வரும்
வள்ளா தேவர்க்கும் விளங்கச் சத்துக்கு. ரு அ.

வெள்ளியில் 10க்கு ஒருபங்கும் இட்டுமெருகு உருக்கிப்பார்க்க மாத்துக்கு வரும். இவ்வுண்மை யையாருக்கும் சொல்லாதே.

சாரம் பலம் கல்வத்திலிட்டு ரெண்டு
சாமம் கொஞ்சம் கொம்புக் கள்ளிப்பால்விட்டு
நேர நன்றுயரைத் திட்டு பின்னும்
நெகிழ விளக்கெண் ணெய்ச் சேர்த்தரை நெட்டு ரு ஊ.

ஒரு ~~இ~~ பலம் சாரம் கல்வத்தில் இட்டு இரண்டு சாமம் கொம்புக் கள்ளிப் பால்விட்டு நேர்பட நன்றாயரைத்துப் பின்னர் விளக்கெண் ணெய் சேர்த்து நெகிழுமாறு அரைத்து

நெட்டாய்க் கடலையின் வீதம் கொண்டு
நிதமுணா ளாறு வேளை பனைவெல்லம் நிதம்
கட்டாயம் கோதுறு வாதம் காச்சக்
கட்டி நீரும் பல் நீர்க் கோவை யுங்காதம்

-ஆய-

நன்றாகக் கடலையின் அளவு உண்டை செய்து கொண்டு

நாள் தோறும் இரண்டு வேளை மூன்று நாள் ஆறு வேளை பனை வெல்லத்தில் கொள்ள குற்றம் நீங்கு மாறு வாதம், காசக் கட்டி, நீராம் பல், நீர்க் கோவை ஆகியவை காத தூரத்தில் நீங்கிப் போகும்.

காதம் பிள்ளையு மேகும் வல்லைக்
கரையும் பெருவயிறு சூலையும் போகும்
நிதமாய்ப் பேதியுமா கும் எண்ணெய்
நீரை விடக் கொடு மிச்சா பத்தியத் தாகும்

-ஆக-

பிள்ளை போகும், வல்லை கரையும், பெருவயிறு சூலையும் போகும், பேதியாகும், எண்ணெய் நீர் விடும் வரை இச்சா பத்தியத்துடன் பத்தியம் கொள்க.

✓

காந்த மெழுகு

நேரடி முத்துடன் சிட்டம் காந்தம்
நேர்வாளம் சுத்திக் கரட்டைப் பூத்திட்டம்
பார்க்கல் வந்தரைச் சட்டம் மேதிப்
பழனையில் வைத்துப் பனை வெல்லம் வட்டம்

சா உ

நேரடி முத்து, சிட்டம், காந்தம், நேர்வாளம் ஆகிய வற்றைச் சுத்தி செய்து கல்வத்திட்டு அரைத்து எருமை வெண்ணெய் கூட்டி பனை வெல்லத்தில்

வட்டமா புண்ணைக் காமாலை வாய்வு
வல்லைக் கட்டிச் சூதகக்கட்டி மேலை
தட்ட நேரம் பல்ப் பாலை மகோ
தரம் காச்சக் கட்டிக் காதம் போமக்காலை

சா ல.

நன்கு உண்ணக் காமாலை, வாய்வு, வல்லைக் கட்டி, சூதகக் கட்டி, நேரம்பல், பாலை, மகோதரம் காச்சக் கட்டி காததூரம் நீங்கிப் போகும்.

கெந்தி மெழுகு.

கெந்திப் பொடி பலம்பத்து எருக்
கிலைச்சாற் பிழிந் தரைக்க சட்டுவத்தி
லிந்தியெட்டுச் சாமம் கொடுத்து சுருக்கி
கொடுத்து உலர்த்திப் பொடித்தே எடுத்து
சாச.

கெந்தகப் பொடி பத்துப் பலம் எருக்கிலைச் சார் பிழிந்து அரைத்து ஒருசட்டியில் எட்டுச்சாமம் சுருக்குக் கொடுத்து உலர்த்திப் பொடி செய்துக் கொண்டு

எடுத்திருப்பைப் பூச்சாறு சாமம் ஆறு
எற்றும் சுருக்கில் மெழுகாகும் கேமம்
அடுத்துச் சிமிழில் வை ஏமம் பயர்.
அளவுண் மூன்னாள் மேகம் யாவும் போநமைம்.
சாரு.

அதனை இருப்பைப்பூச் சாறு கொண்டு ஆறுசாமம் சுருக்கிடில் மெழுகாகும். முறையாக எடுத்து பாதுகாப்பாகச் சிமிழில் வைத்துக் கொள்க. பயற்றின் அளவு மூன்று நாள் ஆறு பொழுது உண்ண மேகம் என்பதும் பெயருக் கேற்றவாறு விரைந்து நீங்கும்.

வீர மெழுகு.

நேரம் விரகனிடைக்கு புளி
வேண்டும் அரைப்பல மங்கரைத் துன்னடைக்கு
நேரச் சுருக் கிட்டுடைக்கு மதில்
நீள மெழு காரந் தேனனுப் பான நடைக்கு.

வீரம் விராகனெடைக்குப்புளி அரைப்பலம் கரைத்து நேர்படச் சுருக்கிட்டு பார்க்க மெழுகாகும் தேன் அனுப் பானத்தில் உண்ணுக.

கெந்தி மெழுகு.

முந்திரிப் பழ ரசம் பிழிந்து கெந்தி
அண்டிடச் சுருக்கிட் டெடுக்க பொழிந்து
வந்த நோய் யாவுங் கழிந்து போக
வும் மெழுகைச் சர்க்கரையிலுண் செழிக்கு

முந்திரிப் பழரசம் பிழிந்து கெந்தி மூழ்க ஆனமாறு சுருக்கிட் டெடுக்க கொழகதாக வந்த நோய் யாவும் நீங்கிடும். மெழுகைச் சர்க்கரையிலுண்ண வேண்டும்.

லிங்க மெழுகு.

லிங்கம் வீரகனிடை எடுத்து பதில்
நேரஞ் செருப்படைச் சாற்றி லரைத்து
பொங்காய்க் கரண்டியில் வைத்து அனல்
மூட்டியூப் பெண்ணையில் சுருக்கேற்றி விதமுடித்து

சூ.அ.

இலிங்கம் வீராகனையை எடுத்து
அதைச் செருப்படைச் சாற்றில் அரைத்து
சிறப்பாகக் கரண்டியில் வைத்து பொட்டலூப்பு
எண்ணெயில் சுருக்கேற்றி

ஏத்திக் கொதிக்கவே வைத்து நன்றாய்
எரிக்க மெழுகாகும் இயல்பைத் தெறித்து.
நாற்றிசை யோர்க்கே விரித்து மேலாய்
நவின் றேநவிய நயமே விரித்து

சா.சு.

கொதிக்க வைத்து நன்றாய் எரிக்க மெழுகாகும் இவ்வியல்பைத் தெரித்து நான்கு திசையோர்க்கும் விளக்கமாக உரைத்து இதன் நல்ல தன்மையை பயன் படுத்திக் கொள்க.

வீர மெழுகு.

லிங்கம் வீரம் பூர மொன்று விகௌன்
கெந்தி திரிகடுகுக் கிரு வருக னென்று
பொங்காய்த் தேனினரைத் தன்று பிரு
பொருதுண்ணச் சன்னிவாய்வு போம் கனன்று

இலிங்கம், வீரம், பூரம், ஒரு வராகனும், சுக்கு அய மிளகு, திப்பிலி இரண்டு வராகனும் நன்கு தேன்விட்டு அரைத்து இரண்டு வேளை புண்ணச் சன்னி, வாய்வு நீங்கும்.

பஞ்ச சூத மெழுகு.

லிங்கம் மனோசிலை கெந்தி கௌரி
நேர் தாளக மைந்துஞ் சரியிடை கொஞ்சி
அங்கிருப்புக் கின்றி முத்திப் போட்டு
ஆக்கிக் காய்ச்ச மெழுகு பதஞ் சத்தி
யாக.

இலிங்கம், மனோசிலை, கெந்தி, கௌரி, தாளகம் ஐந்தும் சரிஎடை கூட்டி இருப்புலக்கை இன்றி இடித்துக் காய்ச்ச மெழுகு பதமாகும்.

✓

சர்ப்பகந்தாப் படலம்.

நாரத்தன் பழச்சாறு ஒன்று சீனி
நாட்டுமாணி டாய்ச் காய்ச்சும் பதமெழுகென்று
சேர்த்தன் றுடலாய்த் தின்று வரத்
தீரும் பித்த முடன் சூடு மகன்று.

நாரத்தன் பழச்சாறு ஒன்று, சீனி இருகு பங்கும் சேர்த்துக் காய்ச்சும் பொழுது மெழுகு சேர்த்துத் தின்று வரச் சூடு நீங்கி பித்தம் நீங்கும்.

திராட்சைப் பழசர்பத்து.

திராட்சைப் பழச்சார் கற்கண்டும், சரி
சேர இலரைப் பலம் பன்னீர் இரண்டும்
கூடத்தில் காய்ச்சியே உண்டும் பித்தக்
காங்கை காலெரிவு குணம் போம் புரண்டு உ.

திராட்சைப் பழச்சார், கற்கண்டு சரி எடை சேர்த்து அரைப்பலம் பன்னீர் விட்டு சட்டி யிலிட்டுக் காய்ச்சிக் கிண்டி உட்கொள்ள பித்த காங்கை காலெரிவுக் குணம் நீங்கும்.

எலுமிச்சம் பழச் சாற் பத்து

எலுமிச் சன் பழச்சார் சரிக்கு நீனி
யிரண் டரைப் பங்கு சேர்த் தேயன் னிறைக்கு
உறுவாய்க் காய்ச்சிப் பதத்திறக்கி யுண்ண
பறந் தோடும் பித்த முவர்ண மற நெகிக்கு

எலுமிச்சம்பழச்சார் ஒரு பங்கும் அதற்கு இரண்டரை மடங்கு சீனியுஞ்சேர்த்தே அவ்வளவில் நன்கு காய்ச்சி உண்ண பித்தம், உவர்ணம் பறந்தோடும்.

சந்தன சர்பத்து.

உலர்ந்த கட்டைத் தூள் பலமே ரெண்டும்
ஊறவைத் தொருபது பல மோர் நாற்சலமே
மலரக் காய்ச்சி மறு நாள் பலமே வெந்நீர்
விட்டிட நாற் பலம் வடித்துச் சேர் நலமே ச.

உலர்ந்த சந்தனக்கட்டைத்தூள் இரண்டு பலம், ஊரவைத்து பத்துப் பலம் மோர், நான்கு பங்கு தண்ணீர் சேர்த்து மலரக் காய்ச்சி வெந்நீர்விட நான்கு பலமாக வடித்து இருந்துக் கொள்க.

✓

நலமாக சீனிரைக் கருகால் பங்கு
நாட்டும் கற்கண்டு பன்னீர் பலமெண்ணுகால்
பலமாய்க் காய்ச்சி வழியுறுகால் தண்ணீர்
பிறமேக மூலச்சூடு போமொருக்கால். (௫)

வடித்த வற்றுடன் ஒன்றரை மடங்கு கற்கண்டும், பன்னீர் இரண்டு மடங்கும் சேர்த்து பக்குவமாய் நன்கு காய்ச்சி நான்கில் ஒன்றாக வடித்திடு. பிறமேகம், மூலச்சூடு நீங்கும்.

கொடி மாதுளை சர்பத்.

பழமொருத்துட்டுக் கணத்தில் சீவி
பலங்கிடத்துசார் பிழிந்தவ் வினத்தில்
நுரைபரு பலம் சீனி கணத்தில் காய்ச்சி
நுகர் வாயுண் பித்தச் சூடேக கணத்தில்

கொடி மாதுளைப்பழம் ஒருசாதுட்டுக் கணத்தில் சீழி கிடத்துச் சார் பிழிந்து இரண்டு பலம் சீனி கணத்தில் காய்ச்சி நுகரப் பித்தச்சூடு நீங்கிப் போகும்.

✓

மாதுளம் பழச்சர்ப்பத்து

மாதுளம் பழரச மிடையே யொன்று
வாகாயச் சீனி யென்றரைக் கலந்தடையே
தாதாயக் காய்ச்சும் பதமடையே எலிக்
காங்க இரக்கியுண் பித்தம் போம் கடையே.

மாதுளம் பழரசம் ஒரு பங்கும், சீனி ஒன்றரைப் பங்கும் கலந்து காய்ச்சி பதமாக வடித்து உண்ணப் பித்தம் நீங்கிப் போகும்.

இஞ்சி சர்ப்பத்து

ஆரே காலிரு பாயிடையே யிஞ்சி
அரிந்து நசுக்கு வெந்நீர் முகரத்தவை கடையே
சேர்ரெடு பத்தை ந்திடையே சீனி
சிறுயிக் காய்ச்சியுண் பித்தம் போம் கடையே

ஆறரை கால் ரூபாய் எடை இஞ்சி அரிந்து உழக்கு வெந்நீர் சேர்த்து சேர்ராகச் சீனி கூட்டிக் காய்ச்சியுண்ணப் பித்தம் நீங்கிப் போகும்.

புளிமாதுளைச் சர்ப்பத்து.

புளிமாதளைப் பழரசமும் வீசை
போடொன்று சர்க்கரை வீசையிரண்டும்
அதினிய வடுப் பேத்திக் கொதியும் வர
ஆறியபின் வாரி பன்னீர் பலமிரண்டும்.

புளிமாதுளம் பழம் ரசம் வீசை ஒன்று சர்க்கரை சை. வீசை இரண்டு நன்கு கலந்து அடுப் பேத்தி கொதிவர பன்னீர் இரண்டு பலம் விட்டு இறக்கி உண்ணுக.

கொடை எலுமிச்சம் பழச்சர்ப்பத்து

பழரசமொரு வீசையோடு மகிழ்
பகர் வெண் சர்க்கரை வீசையிரண்டோடு
குழையக் காய்ச்சும் பழத்தோடு பன்னீர்
கொரு பலம் விட்டுண்ணு மதுப் பானத்தோடு.

பழரசம் ஒரு வீசையில் வெண் சர்க்கரை இரண்டு வீசை சேர்த்து குழையுமாறு காய்ச்சும் பழத்தோடு பன்னீர் ஒரு பலம் விட்டு அருப்பானத் தோடு உண்ணுக.

தாமரைப் பூச் சர்ப்பத்து.

தாமரைப் பூரச மொன்று வீசை
தாக்கும் வெள்ளைச் சர்க்கரை வீசை யொன்று
நேமம் முன் போலெரித்துண்டு பன்னீர்
கரைந்து பலம் விட்டு குடிக்கவே நன்று
௰௧.

தாமரைப் பூ ரசம் ஒரு வீசை, வெள்ளைச் சர்க்கரை ஒரு வீசை கலந்து கொதிக்க வைத்து ஐந்து பலம் பன்னீர் விட்டுக் குடிக்க நன்றாம்.

காடி சர்ப்பத்து.

பிங்காணிலோர் சீசா சீமைக் காடி
படைக் கேட எட்டு ரூபாய் யிடை யாமே
பாங் காய்ச் சீனிக் குறையாமே சேர்த்து
பார்த்துக் காய்ச்சி யுண் பித்தம் போமல்லாமோ
௰௨

பிங்கானில் ஓர் சீசா சீமைக் காடி படைத்து எட்டு ரூபாய் எடை சீனி குறையாமல் சேர்த்து பார்த்துக் காய்ச்சி உண்ணப் பித்தம் போகும்.

ஒட்டுக் காய்ச்சிப் புட்டியில் ரொப்பி
வெள்ளைக் கரைப் பலமஞ்சல பொருப்பதில்
கொட்டிக் குடிக்கத் தூபியில் பித்தம்
நிலைக்காது மூச்சை நேராக நொடியில்
சர்ப்பத்தைப் புட்டியில் நிரப்பிடுமே யாறு.

இட்டு வைப்பதனில் அரைப்பலம் வேளை தோறும் உண்ண கணப்பொழுதில் பித்தம் நிலைக்காது நீங்கி நொடிப் பொழுதில் சேராகும்.

தாளம் பூச் சர்ப்பத்து

தாளம் பூரசம் வீசை யொன்று அதில்
தாக்கும் வெள்ளைச் சர்க்கரை வீசை யொன்று
ஆழமுள் போல வெயில் கொண்டு பன்னீர்
அதில் விட்டுக் குடிக்க உஷ்ண மறுங் கொண்டு யுமு.

தாளம்பூ ரசம் வீசை யொன்று வெள்ளைச்சர்க்கரை வீசை ஒன்று கலந்து கொதிக்கிமொறு காய்ச்சி அதில்ப் பன்னீர் விட்டுக் குடிக்க உஷ்ணம் நீங்கிப் போகும்.

நாகப் பழச் சர்ப்பத்து.

நாகப் பழத்தைப் பிசைந்து பானை
நடு வைத்தி நான்கு படி சலம் பெய்திந்து
ஏகக் காச்சொரு படிக் கொதிந்து வர
நின்றதில் சீசர்க்கரை சேர்த்துண் டெகுந்து -யரு.

நாகப் பழத்தைப் பிசைந்து பானையில் வைத்து நான்கு படி நீர் விட்டு நான்கில் ஒன்றாகக் காய்ச்சி சரியளவு சர்க்கரை சேர்த்து உண்ணுக..

ரோசப்பூ தாமரைப் பூ வலைவரை சர்ப்பத்து.

காய்ந்த ரோசாப்பூ விடையே மூவார்
காப்படி மூன்றே வெந்நீரில் போட்டடையே
மாய்ந்தீர் அரைமணி நேரம் ஊடையே ஊற
வாட்டிய மூவாழாக்காய் அண்டக் காய்ச்சிடையே

காய்ந்தரோசாப்பூ பதினெட்டுப் பலமும் முக்கால்படி வெந்நீரில் போட்டு அரைமணி நேரம் ஊடைந்து மூன்று ஆழாக்காக அண்டக்காய்ச்சி

✓

காய்ச்சினதில் பன்னீரரையே பலம்
கற்கண்டு நாற்றெண் பதினை ரூபாய் நிறையே
பாகிசுற்றி மெழுகு பதமுறையே கொண்டு
பரிவாயிம் மூன்றிவ்வாறு வெவ்வேறு செய்தரையே
௰௭.

காய்ச்சினதில் பன்னீர் அரைப்பலமும், நாற்றெண் பதுரூபாய் கற்கண்டும், தீயிட்டெரிக்கி பதம் கண்டு விடும் இவ்வாறு தனித்தனியாக வெவ்வேறு செய்து அரைத்து உட்கொள்ளுக.

கொய்யாப் பழச் சர்பத்து.

கொய்யாப் பழமுன் போலக் காய்ச்சி வினைக்
கொண்டதில் வெள்ளைச் சர்க்கரை யதை பாய்ச்சி
மெய்யாயுன் பன்னீரும் சார்த்தி உதை
விட்டுண்ண பித்த மயக்கம் போம் மந்திரச்சி
௰௮.

கொய்யாப் பழத்தை முன் கூறியது போலக் காய்ச்சி வடிவிணை கொண்டு அவ்வளவே வெள்ளைச் சர்க்கரை சேர்த்து பன்னீர் சேர்த்து உண்ணப் பித்த மயக்கம் போகும் [illegible]து உறுதியாமே

வில்வப் பழச் சர்ப்பத்து.

வில்வப் பழவிதை போக்கி வெந்நீர்
விட்டு மத்தால் கடைந்து பிழிந்தாக்கி
நல்லசர்க்கரை சேர் தாக்கி பன்னீர்
நாட்டியுண்ணும் பித்தம் பிரண்டோடும் நீங்கி

வில்வப் பழம் விதை போக்கி வெந்நீர் விட்டு மத்தால்க் கடைந்து பிழிந்து தயாரித்து ஒரு [illegible] சேர் நல்ல சர்க்கரை சேர்த்து பன்னீர் சேர்த்து உண்ணப் பித்தம் நில்லாது இரண்டு ஓடும்.

விளாம் பழச் சர்ப்பத்து.

விளாம் பழத்தை முனம் போலச் செய்து யதை
வேண்டும் பொழுது விரையினில் பெய்து
அளவாயுண் ணட முன்னெய்து பித்தம்
அணுகாது மூர்ச்சை மயக்கம் போம் கொய்து

உய.

விளாம் பழத்தை முன் போலச் செய்து அதை வேண்டும் பொழுது ஊற்றி அளவாய் நாள் தோறும் உண்ண பித்தம் அணுகாது மூர்ச்சை மயக்கம் நீங்கிப் போகும்.

நன்னாரி சர்ப்பத்து.

நன்னாரி வேர் முன்ம் போலக் காய்ச்சி யதை
நற்புட்டி யுட்சேர்த்தி நாளு முண் பாக்கி
என்னாளும் பித்தம் போம் தேச்சி மூர்ச்சை
இனியேகி ஆடாறு மின்ப மே யாச்சி ௨௧.

நன்னாரி வேர் முன்போலக் காய்ச்சி, அதைப் புட்டியில் ஏத்தி நாள் தோறும் உண்ணப்பித்தம் நீங்கிப் போகும். மூர்ச்சை இல்லை. குடு நீங்கி இன்பமே யாகும்.

இஞ்சி சர்ப்பத்து.

சர்க்கரை இஞ்சிச் சார் வகைக்குப் பலம்
சமனீ ரேகு பழரசஞ் சேர்வைக்கு
மிக்க வெரி காம் பவைக்கு பாகம்
வெந்திறக் கித்துட்டிடை புண்ணப் பழக்கு ௨௨

சர்க்கரை, இஞ்சிச் சாறு வகைக்குச் சமனாக 14 மடங்கு பழரசம் சேர்த்து எரித்துக் குழம்பாக்கி வெந்து இறக்கித்துட்டிடை உண்ண நலமாகும்.

உண்ணப் பித்தவாய்வு மந்தம் பின்னும்
உஷ்ண முப்பசம் சிரணத் தொந்தம்
குன்று மயக்க சம்பந்தம் மூர்ச்சை
குடல் புரட்டல் புளியேப்பம் போம்ணந்தம்

உரு.

பித்தவாய்வு மந்தம் உஷ்ணம் உப்பிசம் சீரணத் தொந்தம் உண்ணும் மயக்க சம்பந்த மூர்ச்சை குடல் புரட்டல் புளி யேப்பம் ஆகியவை நீங்கிப் போகும்.

வாழைப் பழசர்ப்பத்து:

வாழைப் பழத்தையோர் கோப்பை வைத்து
மாப்பச்சரிசி யுமிதில் சேர்ப்பை
கூழாக்கி ரவி வைத்துச் சாய்ப் பையதில்
கொண்டுண்ண ரசமிறங்கும் போதையேறப் பை

உசு.

வாழைப் பழத்தை ஒரு கோப்பையில் வைத்து மாப்பச்சரிசி சேர்த்துக் கூழாக்கி சூரிய வொளியில் வைத்துச் சாய்த்திட உண்ணுவதற் கேற்ற இரசம் இறங்கும் போதையுடன்.

இரணப் படலம் புண்ணுக்கு பிளாஸ்திரி.

வெள்ளைக் குங்கிலியம் துரிசு பலம்
மேயரை பொரித்து நல்லெண் ணையிலரைத்து
மெள்ளப் பறணையில் வழித்து வைத்து
வெகு நாளாறாத புண் மேற் போட்டெடுத்து க.4

வெள்ளைக் குங்கிலியம், துரிசு பலம் வகைக்கு அரை பொரித்து நல்லெண்ணெயில் அரைத்து மெள்ளப் பறணையில் வழித்து வைத்துக் கொண்டு வெகு நாட்பட ஆறாத புண் மேற் போட்டெடுத்திட ஆறும்.

கட்டிக்குப் பிளாஸ்திரி.

துத்தந் துரிசு லிங்கமுமே காலே
தூய குங் குலியம் பலம் இஞ்சி யரையே
முத்தெண் ணெய் விட்டரை மெழுகுகே பதம்
மூட்டு வழித்துக் கட்டு மேற் றடவ உ.

துத்தம், துரிசு, லிங்கம் வகைக்குக் கால் பலமும், தூய குங்குலியம் பலம் ஒன்றும், இஞ்சி அரையும், முத்து எண்ணெய் விட்டு அரைத்து மெழுகுபதமாக வழித்து கட்டுமேற் றடவ கட்டு நீங்கும்.

✓

இரணங் கருக்குப் பிளாஸ்த்திரி.

வெண்குங் கிலிய, மெழுகும் சமன்
வெந்துருக்கி தேங்காய் நெய் யிட்டரையும்
பண் பாய் நீரில் வழத்திடவும் ஆற்றி
பகர் சிமி லில் வைத்துச் சல்லாவிற் தடவும்
௫.

வெண்குங்கிலியம் மெழுகும் சமமாக எடுத்து
வேகவைத்து உருக்கி தேங்காய் நெய் விட்டரை
த்து பண்பாக நீரில் வழத்திட்டு ஆற்றி சிமிழில்
வைத்து சல்லாவில் தடவவேண்டும்.

கருப்புப் பிளாஸ்த்திரி.

பிளாம் பிசின கருங்குங் கிலியம் சமன்
வெந்துருகும் போது பிளாக் கொண் ணெய்வாரும்
கிளரி வடிகட்டி நீரும் விட்டு
கெட்டித் துணி பூசி ரணத்தில் மேற் போடும்.
௬.

பிளாம் பிசின், கருங்குங்கிலியம் சமன் கொண்டு
வெந்து உருகும் போது பிளாக் கொண்ணெய்
விட்டு கிளரி வடிகட்டி நீர் விட்டு கெட்டித்
துணி பூசி ரணத்தின் மேல் ~~கு~~ போடுக.

✓

வெள்ளைப் பிளாஸ்திரி.

வெண் குங்கிலியமும் பூரம் சமன்
மிக வரை தேங்கா யெண்ணெயிலதாரம்
தண்ணீர் விட்டாத்து மேகாரம் போலாம்
தப்பாது புண் மேற்போடாறுமே தீரும்.

ரு.

வெண்குங்கிலியம், பூரம் சமன் கொண்டு தேங்காய் எண்ணெய் விட்டு மிக அரைத்து தண்ணீர் விட்டு ஆற்றி தப்பாமல் புண் மேற் போட ஆறும்.

சிகப்பு பிளாஸ்திரி.

லிங்கம் ரெண்டு பூரம் மொன்று கஸ்தூ
ரிமஞ்சள் ளரைக் கால் காடியில் யென்றும்
பொங்கா யரைத்துமே மென்றும் சீலைப்
போடு மெழுகூட்டிப் புண்ணிற் கென்றும்

சா..

இலிங்கம் இரண்டு பலம், பூரம் ஒரு பலம், கஸ்தூரி மஞ்சள் அரைக்கால் பலம் காடியில் பொங்க வரைத்து சீலையி லூட்டி மெழுகூட்டி புண்ணிற் கிடக்குணமாகும்.

✓

கார பிளாஸ்திரி

துரிசு துத்தம் வகை காலே பலந்
தூய இங்கிலியம் பலமொன்றாம் பாலே
அரைத் தெள்ளெண் ணெயில் ஊரப் போவேவற
ஆடை கூட்டிப்பூசி சீலைப் போடும் புண்மேலே

துரிசு, துத்தம் வகைக்குக் கால் பலமும், இங்கிலியம் ஒரு பலமும் அரைத்து எள்ளெண்ணெயில் ஊரவைத்து ஆடையில் ஊட்டிப் புண் மேலிடப் புண் ஆறும்.

இரச பிளாஸ்திரி.

இரசம் கெந்தி படிகார மொன்றே விருகன்
ரமணியம் துரிசு துத்தம் விருகன் ரெண்டே
இசை இங் கிலியம் பலமரையே விளக்
கெண்ணெய் மெழு கொன்றரைப் பலம் வகையே

இரசம், கெந்தி, படிகாரம் வகைக்கு ஒருவிராகனும், ரமணியம், துரிசு, துத்தம் வகைக்கு இரண்டு விராகனும், இங்கிலியம் பலம் அரையும், விளக்கெண்ணெய், மெழுகு வகைக்கு ஒன்றரைப் பலமும் அரைத்துத் துணியில் ஊட்டிப்புண்ணின் மேலிடப் புண் ஆறும்.

✓

மெழுகு பிளாஸ்திரி.

வங்க செந்தூரமு மைந்தே திங்கி
வகை கொண்டு துத்தம் துரிசு மரையே
பொங்கத் தச பலம் மெண்ணெயே காச்சிப்
பொடி போட் டெரித் திறக் கும்பின் மெழுகே.

வங்கச் சைந்தூரம் ஐந்து பலம், துத்தம், துரிசு அரைப்பலம், பத்துப் பலம் எண்ணையில் காய்ச்சிப்பொடி கலந்து எரித்து மெழுகை இறக்கிக் கொள்ளுக.

கெட்டிப் பிளாஸ்திரி.

எண்ணெய் ரெண்டரையே காய்ச்சியும் இங்கி
லியம் நால் போட்டுருக்கி வங்கச் செந்தூரம்
ஒன்றாய்க் காய்ச்சி மஞ்சள் நெரும் பாக்கில்
ஒக்கப் போட் டிறக்கிச் சீலைக் கேத் திடவும்.

எண்ணெய் இரண்டரை மடங்கு காய்ச்சிக் லிங்கிலியம் நான்கு பலம் போட்டு உருக்கி வங்கச் செந்தூரம் சேர்த்து ஒன்றாய்க் காய்ச்சி மஞ்சள்பொடி கலந்து இறக்கி சீலைக் கேத்திப் பயன் கொள்க.

அக்கினி பிளாஸ்திரி

மெழுகு பத்து வீரம் ஐந்து விராகன்
மெய்ப் பொருத்துப் பாண்டத் துருக்கியே வெந்து
உருவும் விளக்கெண் ணெய் பொழிந்து நீரில்
வடித்து விட்டு சிமிழில் வை செய்ந்து ௰௧

மெழுகு பத்து விராகன், வீரம் ஐந்து விராகன் இரண்டையும் நன்கு பொருத்து பாண்டத்திட்டு உருக்கி வெந்துவரும் நிலையில் விளக்கெண்ணெய் விட்டுச் சிமிழில் வைக்கவும்.

வைத்தே சல்லாவினில் போற்றி பின்பு
மாம் பழச் சார் பூசிச் சாரத்தைத் தாத்தி
தைத்திடச் சீலை போடாற்றி சோபம்
தாக்கில விளக்க நீர் சரியுமே தேற்றி ௰௨

நுண்ணிய துணியிலூட்டி மாம்பழச்சார் பூசி மருந்தின் சாரத்தைத் தாத்தி அவ்விடத்தைத் தைத்து அதன் மேல் சீலை போட ஆற்றிச் சிவந்து அதனின்றும் நீர் வெளிப்பட்டு வீங்கல் ஆறிக் குணப்படும்.

கிரந்திக்கு முலாம்.

வெண் குங் குலியம் பலம்கால் பசு
வெண்ணெய்ப் பலம் ஒன்றரை பொடித்ததால்
ஒன்னா யரைத்து மறுக்கால் தண்ணீர்
ஊற்றியேழு தரம் கழுவி யிருந்தக் கால்
யறு.

வெண் குங்கிலியம் பலம்கால் பசுவெண்ணெய் பலம் ஒன்றரை பொடித்து ஒன்றாயரைத்து மறுபடி தண்ணீர் ஊற்றி ஏழுமுறை கழுவி இருந்து

பூரம் வீரக ணிடைக்கு யதில்
போட்டரைத்துச் சீலைக் கடவு மிடைக்கு
ஆர் சிலந்திப் படைக்கு ரணம்
மாணதிற் போட வகலு மடைக்கு
யகு.

பூரம் வீராக ணிடைக்கு அதில் போட்டு அரைத்து சீலையி லூட்டி சிலந்திப்படைக்கு ரணமானதில் போடக் குணமாகும்.

இரணங்களுக்கு முலாம்.

வெண்ணெயில் பூரமரைத்து ரணம்
மேற்போடத்தப் பூச வீக்கம் போங்கரைத்து
சின்னும் சிலந்திக்கு ரைத்து பூச
கூன் வளர்ந்த புண் காணாது மரைத்து
ய௫.

வெண்ணெயில் பூரமரைத்து இரணம் மேற்போட்டுப்பூச வீக்கம் கரைந்து போகும். சிலந்திக்கு உரைத்துப் பூச நீங்கும். கூன்வளர்ந்த புண்கள் ஆறும்.

ஆறு முலாம்.

முன் போல் வெள்ளைக் குங்கிலியமும் ரெண்டும்
மூவந்த ரைத்து இருக நிடை லிங்கமும்
தன்றுய ரைத்து ரணமும் ஆற
ஆன் வளர்ந்ததிப் பூசி சீலைப்போ டணமும்
யசா.

வெள்ளை, குங்கிலியம் ஆகிய இரண்டனையும் நன்கரைத்து வீராகணிடை லிங்கம் சேர்த்து நன்றாயரைத்து இரணம் ஆறுமாறு முலாம் பூசி சீலை மேற்போடக் குணமாகும்.

ஊரன் வார்த்தலுக்கு மூலாம்.

இங்கிலியம் வெண்ணெ யரைத்து யதிற்
கூறு துரிசு விருகண்டை யெடுத்து
பொங்காக நன்றெ யரைத்து புண் மேற்
போட வாறிப் போம் புதுமை யடுத்து

இங்கிலிய வெண்ணெ யரைத்து துரிசு விராகனிடை எடுத்து பொங்க நன்றாக அரைத்து புண்மேற் போட புண் ஆறிப் போகும். இதுபுதுமை யாய்த் தோன்றுமே.

சகல ரிண மூலாம்.

புங்கெண்ணெய் விளக்கெண்ணெய் நல்லெண்ணெய்
புகல் வேப்பெண்ணெய் யிலுப் பெண்ணெய்யும் வல்ல
தங்க முக்காற் படி செல்ல வகை
கனிற் பிரமதண் டெண்ணெயுழக் கெல்ல

புங்கெண்ணெய், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய் வேப்பெண்ணெய், யிலுப்பெண்ணெய் வகைக்கு முக்காற்படியும், பிரமதண்டெண்ணெய் உழக்கும் சேர்த்து

வெண் குங்கிலியம் பலம் காலே
வேண்டும் மயில்துத் தம்கால் பச்சையும்
குன்றுமிரு தார சிங்கியும் ஆணை
குங்கிலியும் விரக னிடையும். ய ண

வெண் குங்கிலியம் பலம் காலும். மயில் துத்தம் காலும். பச்சையும், மிருதாரசிங்கியும் ஆணைக் குங்கிலியமும் விராகனிடை கொண்டு

மருந்தைப் பொடித்து யெண்ணெயில் போட்டு
பாகாயிப் பதத்தில் வடித்துப் புட்டியில்
கரு விரணத்தில்ப் போடு கையில் ஆறும்
கரையாவிடில் வெள்ளைக் காரம் வைத்ததனில்

மருந்தைப் பொடித்து எண்ணெயிலிட்டு பக்குவமாகப் பதத்தில் வடித்து புட்டியில் வைத்துக் கொண்டு இரணத்திலிட மிகவுறைந்து ஆறும். கட்டி கரையாமல் இருப்பின் வெள்ளைக் காரம் சிறிது சேர்த்துப் புண் மேலிட நன்கு ஆறும்.

✓

விஷப் படலம்.

நவச்சாரங் கொஞ்ச மெடுத்து அதில்
நடுவில் சுண்ணாம்பை நான்கி லொன்று
அவனியில் தேள் கொட்டு மிடத்துப் பூசத்
அவ்வனே சில்லிட் டாலும் விடமுந் தொலைந்து.

க.

நவச்சாரம் சிறிது எடுத்து சுண்ணாம்பு நான்கிலொன்று சேர்த்து தேள் கொட்டு மிடத்துப் பூச உடன் சில்லிட்டாலும் விடந் தொலைந்து விலகும்.

பாம்பு விஷத்திற்கு.

ஆடுண்ணாப் பாளைச் சமூலம் சூரணம்
ஆக்கரைக் கால்ப் பலம் தினக் காலம்
தேடியுட் கொள்ளப் பாம் பாலம் தீர்ந்து
தேறிப் பிழைப்பார் செகத்தினில் கோலம்

உ.

ஆடுதின்னாப் பாளைச் சமூலச் சூரணம், ஆக்கரைக் கால்பலம் தின் உடனே உட்கொள்ள பாம்பு விடம் தீர்ந்து தெளிந்து பிழைத்துக் கொள்வார்.

அரியன் விரைக்கிரிக்கு.

வாமுதி சமூலமே தூக்கில் காடி
விட்டடே பிசைந்து கழற்சியை தேக்கில்.
வருவும் கருப்புக்கட்டி தாக்கிலு மக்கி
வழகட்டுக்குடு விரைம் போகவே நீக்கில்
௩.

வாமுதி இலை தூக்கி காடி விட்டுப் பிசைந்து கழற்சிக்காயளவை கருப்புக் கட்டி ~~[illegible]~~ ~~[illegible]~~ சூட்டு வதகட்டுக் கொடுக்க அரம் நீங்கிப் போகும்.

எலி விரைக்கிரிக்கு.

கடும் பூனை மலம் கழற்சிக்கு கொண்டு.
காய்ந்தப் பொழு வாழைப் பழத்திலுள் ஒக்கு.
கொடும் பத்தியம் புளிப்பு வைக்கு டா
குணமா மெலி விரைவி இறுகிப் போம் கடைக்கு.
(௫)

கடிய பூனை மலம் கழற்சிக்காயளவு எடுத்துக் கொண்டு காய்ந்த பொழு வாழைப் பழத்தின் உள்ப் பொதிந்து கொடிய பத்தியத்தில் உண்ண (புளிப்பு நீக்கி) எலி அரம் குணமாகும்.

கடிய பூனை = கடுவன் பூனை = ஆண் பூனை

அழனை விலக்கிற்கு.

சிறு குறிஞ்சான் குமிழ் இரண்டு மிலை
சீரயச் சார் பிழிந்து தனைங்குடி ~~ய~~ இரண்டு
ஒரு வாரம் இருவேளைப் புறண்டு விடா
துள் கொள்ள மாறிடு முடனே மிறண்டு (ரு)

சிறுகுறிஞ்சான், குமிழ் இரண்டு இலைகளையும் சார் பிழிந்து ஒரு வாரம் இரண்டு வேளை விடாமல் உட்கொள்ள அழனை கழ உடனே மாறிவிடும்.

கொள்ளப் புளி உப்பு நீக்கி பத்தியம்
கூறுங் கடுகு மெள் ளெண்ணெயும் நீக்கி
தள்ளழனைக் கழ நீக்கி யாறும்
தலையுமுடம் நூத்தழப்பும் போந்தாக்கி சா

உப்பு, புளி நீக்கி கடுகும், எள்ளெண்ணெய்யும் தள்ளி பத்தியத்துடன் இருக்கில் அழனைக்கழ வீக்கம் நீங்கி உடம்பில் தோன்றும் தழுப்பும் நீங்கிப் போகும்.

பேய் நாவிதத்திற்கு.

முற்றிய பேய்ச் சுரைக் குடுக்கை தன்னில்
முத்து நல்ல சலம் விட்டு விடுக்கை.
அவத் தன்றி சற்றுத் தொடுக்கை பின்பு
மற்றை நாள் காலை யெடுத்துக் கொடுக்கை
ஏ.

முற்றிய பேய்ச்சுரைக் குடுக்கையில் ஆமணக்கின் முத்திட்டு நல்ல தண்ணீர் விட்டுவைத்து காலை மாலை நீர் நிரப்பி வைத்திருந்து மற்ற நாட் காலை எடுத்துக்கொண்டு

கொடுஞ் சிரங் காய்ந்நீர் கொள்ள வாந்தி.
குமட்டு எடுக்கை மூவேளையும் தள்ள
கடுப்பும் கடுவிஷந்துள்ள ஏகும்
கஞ்சி பச்சரிசி காய்ச்சி யுண்மெள்ள
அ/

பேய்ச்சுரைக்காயின் உள்ள நீர் உட்கொள்ள வாந்தி குமட்டு மூன்று முறையும் வெளிக்கொணர்ந்து தள்ள வலியோடுள்ள விஷம் துள்ளி வெளிப்படும் கஞ்சி பச்சரிசி காய்ச்சி உண்ணுக.

வலி = வல்லமை.

இலந்தி வாதத்திற்கு.

தேள் கொடுக்கில் கொட்டைப் பாக்கு விதம்
சேர் சாதிக்காய் நான்கிலொரு பாகமாக்கு
நீர்கல் வத்தரைத் தேயுள் போக்கும்
நேர் கரும் பத்தியம் கெட்டமையே தாக்கு

ணை.

கொட்டைப் பாக்களவு தேள் கொடுக்கு சாதிக்காய் நான்கில் ஒரு பாகம் வைத்து கண்ட குழியம் மியல் அரைத்து உள்க் கொள்ளச் இலந்தி வாதம் தீரும். கொடிய பத்தியம் கடைக் கொண்டு வாதத்தை வெளிப்படுத்து.

பாம்பின் கடியை:

பாம்பு கடித்ததே சிவனீர் கையில்
பத்திப் பிடித்தே குடித்திடும் மங்கீர்
தீம்பில்லை அட்டடுக்கும் தண்ணீர் யதில்
சீறுது ஏறுது திகைக்காது முன்னீர்.

பாம்புக் கடி சிவனீர் கையிற் பத்திப் பிடித்தே குடித்திடும். அங்கீர் தீங்கில்லை. தண்ணீர் விட்டு ஏறிடும். இதில் சீறாது ஏறாது திகைக்காது முன்னீர்.

பாம்பிற்குப் பரிபாலனை.

உப்பின் பாண்டத்தைத் துடைத்து பாம்பு
வெண்ணை நோகாது விட்டு வாயடைத்து
தப்பில்லைப் பார்த்துத் அடைத்து யது
சத் தொடங்கி உயிர் நீங்கிப் போம்புடைத்து
௰௧.

உப்பு இட்டு வைத்திருந்த பாணையைத் துடைத்து பாம்பு வெண்ணை நோகாது அதில் விட்டு வாயினை அடைத்து சிறிது நேரம் கழித்துப் பார்க்க அப்பாம்பு சத் தொடங்கி உயிர் நீங்கிப் போகும்.

பாம்பு புகுங்கி ஓட.

வீட்டில் பாம்பு புகுந்திட்டால் உப்பை
மேற்றூவ நில்லாது ஓடிப் போம் தெகிட்டால்
நாட்டிலுப் போகச் சொற் கட்டால் சொல்வர்
நல் மந்திரம் வேண்டாம் உப்பதின் கட்டால்
௰௨.

வீட்டில் பாம்பு புகுந்து விட்டால் உப்பை மேற்றூவ நில்லாது ஓடிப் போகும். அட்டில் உப்பே எல்லாம் எனச் சொற் கட்டால் சொல்லுவர் உப்பின் கட்டு இருக்குமானால் வேறு பெரிய நல்ல மந்திரம் தேவையில்லை.

பாம்பு ஸ்தம்பிக்க.

வீட்டில் பாம்பிருக்கும் இடத்தில் கிட்ட
வெள்ளைப் பூண்டை நசுக்கிப் போட்டுத்து
தாட்டியாயோ சாறெடுத்து பழு
தையாய்த்தம் பிக்கப் படுமே விடுத்து

யாழ்.

வீட்டில் பாம்பு இருக்கும் இடத்தின் அருகே வெள்ளைப்பூண்டை நசுக்கிப் போட்டு அதன்சாறு எடுத்துப் பழுதையாய்த் தம்பிக்க பாம்பும் தம்பிக்கும்.

மூட்டைப் பூச்சி நிரமூலம்.

தாமரையிலையை படர்த்து வீட்டில்
சஞ்சரிக்கு மிடமெல்லாம் தொடர்ந்து
மாமரத்து ண்டில் சுவர்ந்து வைக்க
மடியுமோட்டுப் பூச்சி வளராதொடர்ந்து.

யதம்

தாமரை யிலையை மோட்டுப் பூச்சி சஞ்சரிக்கும் இடமெல்லாம் படர்த்தி வைக்க. மாமரத்துண்டில் சேர்த்து வைக்க மோட்டுப் பூச்சி மடியும்

வண்டுகடி விஷத்திற்கு.

சிவனார் வேம்பின் சமூலத்தை சூரணித்து
இருவேளைக் கிரு விராகனிடை காண்வத்தை
நவமாய் வெந்நீரில் கொள்வித்தை தீரும்.
நவில் வண்டு செவ்வட்டைக் கடிமாறு சத்தை
யரு.

சிவனார் வேம்பின் இலையைச் சூரணித்து இரண்டு விராகனடை இரண்டு வேளைக்கு வெந்நீரில் உட்கொள்ள சொல்லப் பெற்ற வண்டுகடியும் செவ்வட்டைக் கடியும் மாறும்.

மாறுந் திமிர் விறை வகையும் எல்லாம்
மாகுட்ட ரோக மண்டல கொள ஒழியும்
சேரும் மிச்சா பத்தியம் வையும் வைத்து
தீருத நோய்க்குச் சிவனார் வேம்பரியும்.
யசா.

மாறும் திமிர் விறை வகையும் எல்லாம். பெரிய கிட்ட ரோகம் மண்டலம் கொள்ள நீங்கும். இச்சா பத்தியம் கைக் கொண்டு தீராத நோய்க்கு சிவனார் வேம்பரியும்..

யோகப் படலம் — சாயா புருஷ தரிசனம்.

சாயை தன்னை நிழலாக்கும் யது
நட்டாது நின்று தனியாகக் காக்கும்
மாயையின் காரணம் நோக்கும் நம்மை
வகையா யறிய மலபந்தம் நீக்கும்.

க.

சாயை தன்னை நிழலாக்கும் அது நட்டாமல் நின்று தனியாகக் காக்கும் மாயையின் காரணம் ஆராயும் நம்மை வகையாக அறிய முன் பின்புள்ள தொடர்ந்த தொடர்பினை நீக்க வேண்டும்.

நீக்கு சந்திர னொளியில் நின்று
நிழல் தன்னைக் கீழ் நேர் கண்டத்தாயில்
நோக்கியே பாடுந் தரையில் நின்று
நுணுக்கம் பஞ்சாக்கிரம் செபித்துப் பார் வெளியில்

உ

நீக்கிய பின்னர் சந்திரனொளியில் நின்று நிழல் தன்னைக் கீழ் கழுத்தின் நேராக நோக்கிப் பாடும் தரையில் நின்று நுணுக்கமாகப் பஞ்சாக்கரம் வெட்டவெளியில் நின்று செபித்துப் பார்.

வெளியா மாகாயமே பார்க்க தன்னில்
ஒட் டொரு ரூபம் வெளிக் காணு மேற்க
களிப்பா நாள் தோறுமே நோக்க செய்த
கருமங்கள் அன்றுடங் கழிந் திடலாக்க.

ரு.

வெளியாய்த் தோன்றும் ஆகாயம் தன்னில் ஒரு ரூபம் யாவரும் ஏற்குமாறு வெளித்தோன்றும். மகிழ்வோடு நாள் தோறும் பாருங்கள். செய்த கருமங்கள் அன்றாடங் கழிந்திட ஆக்கம் தோன்றும்.

ஆகு சிரங் காணா முண்டம் தோன்றில்
அன்று முதல் ஆறு மாதத்தில் கண்டம்
காவூம் வேற அரங் கொண் டங்கோத
தன்னருகில் னின்று சப்திக்கு முண்டம்.

சு.

சிரசு காணாது முண்டம் தோன்றில் அன்றுமுதல் ஆறு மாதத்தில் கண்டம். வேறு அச்சரங் கொண்டு அங்கு சொல்ல தன்னருகில் நின்று சப்தம் செய்யும் முண்டம்.

கண்டால் தெரியும் அச்சாயையே யிருள்
கம்மினார்த்தீப் வெளியிற் காண்பாயே
இண்டை சலத்திலும் நீயே நின்று
இன்னவே முன்போலப் பார்த்தருள்வாயே
(௫)

பார்த்தால் அச்சாயை தெரியும் இருள் சூழ்ந்தால் தீப வொளியில் காண்பாயே மிதந்து நீரிலும் சாயை தோன்றும் முன் போல பார்த்தருள் வாயும்.

பாரு ரவி மதி தீபம் நீரில்
பணம் பாசிசதுர் விதை சாயை ரூபம்
ஆருரைத் தார்கள் பிரதாபம் முன்னோர்
அறு மூன்று பேர்கள் அறிவார் சல்லாபம்.

பார்க்க ரவி, மதி, தீபம் நீரில் நான்கு விதை ஆ. சாயையோடு கூடிய உருவம் தோன்றும். அவ் உருவத்தின் பெருமைகளை யாவரே உரைக்க வல்லார். முன்னோர் பதினெண் சித்தர்களே அதன் சல்லாபம் உரைக்க வல்லார்.

பஞ்சாக்கர மகிமை.

ஓமெனும் பீஜாக்ஷரத்தில் ஐந்தும்
உரப்பணமாகி உதித்த உடலில்
நாமமாய் ஆறு தலத்தில்த் தங்கி
நமசிவயமே நயக்கும் பிலத்தில்
ன.

ஓம் என்னும் உந்திமுதல் தோன்றும் பஞ்சபூதத்தை உணர்த்தற்கு உரிய அச்சரத்தை உடைய பஞ்ச பூதமாகிய ஐந்து பூதச் சேர்க்கையால் தோன்றிய உடலில் ஆறு இடங்களாகிய ஆராதாரதில் தங்கி நமசிவய மே நயக்கும்

பாரு நகாரத்தினியாவும் சித்தி
பகரு மகாரத்தில் பகைவர் சிநேகம்
நேரும் சிகாரத்தில் செங்கோலும் நேசம்
நிலைக்கும் வகாரத்தில் கண்புவி வசியம்.

"ந"காரத்தில் எல்லாம் சித்தி, "ம"காரத்தில் பகைவர் நட்பு, சிகாரத்தில் அரசனும் நட்பாம். (அரசு அன்புடைய தாய் அமையும்) நிலைக்கின்ற "வ"காரத்தில் கண்ட இப்புவி வசியம்.

வசியம் யகாரத்தில் கிரகம் நீங்கும்
வகையறியா தவர்க்கு வழி நரகம்
உசிதமுள்ள பேர் விரகம் கொண்டு
உழல்வர் பலவா யூகிப்பர் கர்கம்

"ய"காரத்தில் கிரகம் வசியமாகும். இவை அறிந்து செல்லுகின்ற வகை தெரியாதவர்களுக்கு செல்லுகின்ற வழி நரகமாகும். வாய்ப்புள்ளவர்கள் ஆசை கொண்டு மீண்டும் மீண்டும் அதனிடத்தே மனம் செலுத்துவார் பலவாறு கற்பனை செய்து மேலும் முயல்வார்.

கர்மத்தில் தெளிவுக் கனியா சதா
காலம் ஓம்சிவய நமவெனும் நெறியாய்
சிரமாய்ச் செபித்தலறியாய் நாட்டம்
தேங்காது சிந்தையை சேர்பத மிறையாய்

நாம் செய்கின்ற செயலில் தெளிவுக் கனியாய் எந்தக் காலத்திலும் எப்பொழுதும் ஓம் சிவய நம வென்னும் வழியாய்ச் அழுத்தமாக சொல்வதனை அறிவாய். எண்ணம் தேங்காமல் மனத்தில் வை அத்து இறைபதம் சேரும் வழியாம்.

பதமளிக்கும் சிவமோனம் ஜசனம்
பாசம கற்றும் பரியான தியானம்
அதஞ் செயும் மாய்கையைத் தியானமிந்தம்
ஆதிய பதேசம் மமை வகுத ஞானம்.

யக.

சிவமோனம் மோட்சப்பதமளிக்கும் ஜசனம் பாசம் அகற்றும், முறையான தியானம், மாயை என்னும் தீமையை அதஞ் செய்யும், நாள்தோறும் கேட்கின்ற உபதேசம் செய்கின்ற தியானம் அமைவுகுத ஞானமாம்.

பஞ்சாக்ஷர யந்திரம்.

உள்ளங் கையில் திருநீறை வைத்து
உறகிய மாய் ஐங்கோண மதிற் நிரை
விள்ள ஓங்காரமே சேர மையம்
மேளைங் தெடுத்து மைங் தரையினில் மாறே

யக.

உள்ளங்கையில் திருநீறு எடுத்து உறகமாய்ப் ஐங்கோணத்தில் எழுதி ஓங்காரம் கூட்டியதன் நடுவில் ஐந்தெழுத்தும் ஐந்தரையில் மாற்றியெழுதி இடுக.

சித்திக்கு மூன்றெழுத்தா லேசக
சிவர்க்கங்கள் செனிக்குமென் மேலே
முத்தியு முண்டாம் அப்பாலே பர
மூலத்தாய் நோக்கம் உதித்திடலாலே

மூன்றெழுத்தால் சகசிவர்க்கம் சித்தியடையும் இவ்வுலகில் தோன்றும், மோட்சமுண்டாகும் யாவற்றையும் கடந்து கடந்து நிற்கும் எங்கும் நிறைந்துள்ள மூலத்தாய் நோக்கம் உதித்திடலால் யாவும் சித்திக்கும்.

உதிக்கும் பிரணவ சொரூபி எங்கும்
உள்ளும் புறமு முலாவும் கரும்காமக்
கடலாய்க் கடையரைக் காக்கும ரூபி
உலகில் சொச்சம் பார்த்து எருக்கிச் சேர்க்கவும்

தோன்றுகின்ற பிரணவ உருவத்தை உடையவனே. எங்கும் உள்ளும் புறமும் ஷாவுகின்றவனே. உருகின்ற காமக் கடலாக விளங்கும் வனே. கடையவர்களைக் காக்கும் ரூபமானவனே.

ஆனந்த வருடம் கார்த்திகை மாதம் க ஆம் தியதி
குருவாரம் பிரதி எழுதியது.
பொய்கை நல்லூர் ரெ. மா. சொக்கலிங்க வைத்தியர்
கையெழுத்து வேணும் இருதுணை இதில் உயசு
பாட்டுக் கம்மியாக இருப்பது

சுன்னப் படலம்.

இதில் பலகறைச் சுன்னம் விடப் பட்டது. அதை
இத்துடன் சேர்த்து வாசிக்க.

பலகறையை நீலித்து துணியில் வைத்து
பந்தாய்ச் சுருட்டிக் இக்குடம் வைத்த துணியில்
நவச் சர்க்கரை தேன் நெய்யினில் உண்ண
நவில் வெள்ளை பரையாப்பூ மேகம் போம் பனியில்
படலத்துடன் வாசிப்பதும் ஒழுங்கும் பாடம் கவனி
~~னி~~த்துக் கொள்ளவும்.

நிறைவு பெற்றது.